# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20 பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 72 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 24, திங்கட்கிழமை 06.02.2017


## ட்ரம்புக்குத் தூதுவிட ஜே.ஆரின் பேரன்

### தயான் ஜயதிலக அரசுக்குப் புத்திமதி

யாழ்ப்பாணம், பெப். 6

அமெரிக்க, பிரிட்டன் ஆட்சி மாற்றத்தைப் பயன்படுத்தி இலங்கை ஜெனிவாத் தீர்மானத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளலாம். இதற்கு முன்னாள் அரச தலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் »22

# ராணுவத்தின் கழிவு ஒயில் குழியில் வீழ்ந்த மாணவன் பரிதாபச் சாவு

## நல்லிணக்கபுரத்தில் துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 6

காணாமற்போனதாகத் தெரிவிக்கப்பட்ட மாணவன், இராணுவம் பயன்படுத்தி - பாதுகாப்பற்ற நிலையில் கைவிட்டிருந்த வாகன சுத்திகரிப்பு நிலைய கழிவுஎண்ணெய்க் குழியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை புதிதாக மீள்குடியேற்றப்பட்ட காங்கேசன்துறை நல்லிணக்கபுரத்தில் இடம்பெற்றது.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் தரம் 5 இல் கல்வி கற்கும் கஜேந்திரகுமார் சஜிந்தன் (வயது - 10) என்ற மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். அம்மம்மா வீட்டுக்குச் செல்வதாகக் கூறி நேற்று முன்தினம் »22



**சுமந்திரன் கொலை முயற்சி;**

## விசாரணைக்கு உதவிட நோர்வே அரசு தயாராம்

கொழும்பு, பெப். 6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மீதான கொலை முயற்சி விசாரணைகளுக்கு உதவத் தயார் என்று நோர்வே அரசு அறிவித்துள்ளது. »22

## பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டேதான் ஆகவேண்டும்

### மகிந்தவின் கருத்துக்கு சுமந்திரன் பதிலடி

யாழ்ப்பாணம், பெப். 6

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும். தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். அதனை இப்போதும் வலியுறுத்துவேன். »24

## சுமந்திரன் கொலை முயற்சி விக்கிக்கு வரும் சந்தேகம்

யாழ்ப்பாணம், பெப். 6

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததாகப் பொலிஸார் நீதிமன்றுக்கு கூறவில்லை. எனவே இந்த விடயத்தில் எந்தளவுக்கு உண்மை இருக்கின்றது. »22

# கொழும்பின் மந்த கதி குறித்து ஐ.நா. கரிசனையை வெளியிடும்

### மார்ச் மாதத்தில் அரசுக்கு ஜெனிவாவில் காத்திருக்கிறது கடும் சவால்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 6

ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு மந்தமாகச் செயற்படுகின்றது. குறிப்பாக பொறுப்புக்கூறல் விடயத்தில் போதியளவு கரிசனை காண்பிக்கப்படவில்லை. இந்த விடயங்களை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தனது அறிக்கையில் »24

**நல்லூரில் கடை மீது தாக்குதல்**

## வாள்வெட்டுக் கும்பலில் நால்வர் இதுவரை கைது

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ்ப்பாணம், நல்லூர் - அரசடிப் பகுதியிலுள்ள கடை மீது மேற்கொள்ளப்பட்ட பெற்றோல் குண்டு வீச்சு மற்றும் வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்ட கும்பலில் 4 பேர் காணொலிப் »24

## இந்தியப் படகுகள் விடுவிப்பு; வடக்கு மீனவர்களுடன் பேச்சு

கொழும்பு, பெப். 6

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிப்பது தொடர்பில் வட பகுதி மீனவர்களுடன் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது. »24

**தமிழக அரசியலில் அதிரடி**

## முதல்வராகிறார் சசிகலா ஓ.பி.எஸ். பதவி விலகல்



(மேலும் செய்திகள் 23ஆம் பக்கத்தில்)

சென்னை, ஜன. 6

அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளர் சசிகலா, நேற்று நடைபெற்ற அந்தக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான »24

**பிலக்குடியிருப்பு மக்கள் போராட்டம்**

## சம்பந்தனின் கோரிக்கைக்கு இன்னும் பதில் இல்லை

### பாதுகாப்புச் செயலர் சுகவீன விடுப்பிலாம்

யாழ்ப்பாணம், பெப். 6

முல்லைத்தீவு, கேப்பாபிலவு - பிலக்குடியிருப்பு மக்களின் நியாயமான கோரிக்கைக் கான உரிய நடவடிக்கை குறித்துப் பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு அறிவித்தும், 3 நாள்களாகப் பதில் »24



**தமிழ் நா. உ. ஒன்றியம் உருவாக்கம்**

## கூட்டமைப்பிடமிருந்து பதில் கிடைக்கவில்லை

### அமைச்சர் மனோ தெரிவிப்பு

கொழும்பு, பெப். 6

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றியம் உருவாக்குவதற்கான யோசனையை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் முன்வைத்து ஒரு மாதமாகியும் அது தொடர்பில் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. »24



## கரையை மட்டும் விடுவித்து ஏமாற்றிவிட்டது ராணுவம்

### ஊறணிக் கடற்கரை விடுவிப்பு தொடர்பில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 6

ஊறணிக் கடற்கரையை மாத்திரம் விடுவித்துப் பயனில்லை. மீனவர்களைத் தொழில் செய்ய அனுமதிக்க வேண்டும். எமது கடற் பிரதேசத்தை விடுவிப்பதாக ஆசை காட்டி, இராணு »24

**6ஆவது நாள்**

## பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டம் விரிவடைகிறது

முல்லைத்தீவு, பிலக்குடியிருப்பு மக்களின் மண் மீட்புக்கான போராட்டம் 6ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

இந்தப் போராட்டத்துக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணி கத் துறை மாணவர்கள் நேற்று ஆதரவு வழங்கி கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். அத்துடன், பல்வேறு தரப்பினரும் மக்களின் மண் மீட்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். (விரிவு: பக்கம் 11)

## காணிகள் கிடைக்காவிடின் இங்கேயே கிடந்து சாவோம்

### புதுக்குடியிருப்பு மக்களின் போராட்டம் தொடர்கிறது

எமது காணிகளை வழங்காது விட்டால், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் இரண்டு வாயில் கதவுகளையும் இன்று பூட்டிப் போராட்டத்தைத் தொடர்வோம். எங்கள் காணி எங்களுக்குக் கிடைக்கும் வரைக்கும் நாங்கள் இங்கே கிடந்து போராடிச் சாவோம். இராணுவ முகாமை அகற்றுவதற்கு புதுக்குடியிருப்பு மக்கள் ஒன்றுபடுங்கள்.

இவ்வாறு வலியுறுத்தி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாக 3ஆவது நாளான நேற்றும் மக்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர். (விரிவு: பக்கம் 11)




ஜி.எஸ்.பி.எஸ். குண்டு போட்டாலும் அவர் சுகவீன விடுப்பில் இருப்பாரோ...

## மோசடியில் சிக்கிய அமைச்சர்கள் குறித்து சு.க. – ஐ.தே.க. கூடி ஆராய்வு

கொழும்பு, பெப். 6

மோசடிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள அமைச்சர்கள் குறித்து, அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பவற்றின் முக்கிய அமைச் »24

## இந்தியாவிலிருந்து கஞ்சா கடத்தியவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, பெப். 6
இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கடத்தப்பட்ட 4 கிலோ 30 கிராம் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் நேற்றுமுன்தினமிரவு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முன்தலம் – மதுரங்குளிய பிரதேசத்தில் கப்ரக வாகனம் ஒன்றில் சந்தேகநபர் பயணித்து கொண்டிருந்தபோது ராஜகிரிய சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

## குடு ரொஷான் வெட்டிக் கொலை

கொழும்பு, பெப். 6
வனாதே குடு ரொஷான் என்று அழைக்கப்படும் போதைப் பொருள் வியாபாரி சாமர என்பவர் வெட்டுக் காயங்களுக்கு இலக்காகி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொரல்ல எம்.எச். மொஹமட் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் நேற்றுக் காலை சம்பவம் இடம்பெற்றது. இனந்தெரியாத இருவர் சாமரவை இவ்வாறு படுகொலை செய்துவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று விசாரணையில் கூறப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொரல்ல பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

போதைப் பொருள் வியாபாரத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு இந்தக் கொலைக்குக் காரணமாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர் என்று தெரிவிக்கப் பட்டது. (வ-4)

### வாடிகள் தீ வைப்பு

# தென்னிலங்கை மீனவர்கள் கைது

முல்லைத்தீவு, பெப். 6
முல்லைத்தீவு, நாயாறுப் பகுதியில் இருந்த தென்பகுதி மீனவர்களின் மீன் வாடிகளை தீயிட்டுக் கொளுத்திய குற்றச்சாட்டில் இரு தென்னிலங்கை மீனவர்கள் நேற்று முன்தினம் மாலையில் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, நாயாறுப் பகுதியில் கடந்த இரு நாட்களாக இரு வேறு இடங்களில் அமைந்திருந்த தென்பகுதி மீனவர்களின் மீன் வாடிகள் வெள்ளிக்கிழமை இரவு சில விசமிகளால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. இவ்வாறு ஏற்பட்ட தீயினால் பெரி யளவிலான சேதம் ஏதும் ஏற்படாதமை யால் அந்தப் பகுதியில் ஏற் படக் கூடிய இன முறுகலகள் தவிர்க்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் பொலிஸார் அந்தப் பகுதியில் விசாரணைகளில் ஈடுபட்டனர். இதன்போது நண்பகல் 12 மணியளவில் மேலும் இரு வாடிகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. இவ்வாறு தீயிடப்பட்ட வாடிகளுக்குள் படகுகளுக்கான வெளியிணைப்பு இய்ந்திரங்கள் மற்றும் பெருந் தொகையான வலைகள் காணபபட்டுள்ளன.

> “ உள்ளூர் மற்றும் தென் பகுதி மீனவர்களுக்கு இடையே நீண்டகாலமாக முறுகல் நிலமை உள்ளது.

இவ்வாறு விசமிகள் வைத்த தீ வலைகளில் பரவியதையடுத்து பெரியளவில் தீ ஏற்பட்டது. இருப்பினும் குறித்த தீ ஏனைய பகுதிகளுக்குப் பரவாது தடுப்பதில் தமிழ் மீனவர்களும் படையினரும் முழு மூச்சில் ஈடுபட்டனர். இவ்வாறு ஏற்பட்ட தீக்கான காரணம் இனம் தெரியாதோர் வைத்த தீ என்று மட்டும் கூறித்தப்பிவிட அங்கிருந்த தென்பகுதி மீனவர்கள் இருவர் முயன்றனர்.

அந்தப் பகுதியில் வேறு எவருமே நடமாடி யதை அவதானிக்க முடியாத காரணத்தால் அங்கிருந்த இருவரில் ஒருவரே தீயை வைத்திருக்க வேண்டும் எனக் கருதிய பொலிஸார் அவர்கள் இருவரையும் கைது செய்தனர்.

நாயாற்றுப் பகுதியில் வாடி அமைத்துள்ள விடயம் காரணமாக உள்ளூர் மற்றும் தென்பகுதி மீனவர்களுக்கு இடையே நீண்டகாலமாக முறுகல் நிலமை உள்ளது. இதனை மேலும் பெருப்பித்து மாவட்டத்தில் குழப்பநிலையை ஏற்படுத்தும் நோக்கிலேயே வேண்டுமென்றே இந்தச் செயல் அரங்கேற்றப்பட்டதாக உள்ளூர் மீனவர்கள் சந் தேகம் தெரிவிக்கின்றனர்.

இந்த வாடிகள் அமைக்கப்பட்டமையால் உள்ளூர் மற்றும் தென்பகுதி மீனவர்களுக்கு இடையேயான பிணக்கு தொடர்பில் தொடரப்பட்ட வழக்கு எதிர்வரும் 20ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படுகிறது. (வ-101)

## விபத்துக்களால் 5 பேர் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 6
24 மணித்தியாலங்களில் நாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் ஐவர் உயிரிழந்தனர். நால்வர் படுகாயமடைந்தனர் என்று நேற்று மாலை பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, வெள்ளவத்தை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, மினுவங்கொட ஆகிய பகுதிகளிலேயே இந்த விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

முல்லைத்தீவு, கொக்கிளாய் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

கொக்கிளாய், உடப்புக்குளம் பகுதியில் கொக்கிளாய் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் சென்ற மாடுகளுடன் மோதி விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்து மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார்.

முல்லைத்தீவைச் சேர்ந்த 36 வயதான ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை முல்லைத்தீவுப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் பாணந்துறையிலிருந்து புத்தளம் நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டு 53 வயதான நபர் உயிரிழந்தார். வெள்ளவத்தைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரே விபத்தில் உயிரிழந்தவராவார்.

மாத்தறை, திஸ்ஸமகாராம பகுதியில் வான் ஒன்றுடன் பேருந்து நேருக்கு நேர் மோதியதில் பெண்ணொருவர் உயிரிழந்தார். அத்துடன், நால்வர் படுகாயமடைந்தனர். விப்த்துடன் தொடர்புடைய பேருந்து சாரதி கைது செய்யப்பட்டார்.

இரத்தினபுரி பதுல்பான பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் பாரவூர்தி மோதியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மீகஹவத்தைப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்திலும் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

## மண் மீட்புப் போராட்டத்துக்கு வலி. வடக்கிலிருந்தும் ஆதரவு

நில மீட்புக்காகப் போராடிக் கொண்டிருக்கும் பிலக்குடியிருப்பு மக்களுக்கு பேராதரவை வழங்குவதாக. வலி. வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்ததாவது:

பாதுகாப்புத் தரப்புக்களிடமிருந்து எமது நிலத்தை மீட்பதற்கு நாமும் இன்னமும் போராடிக் கொண்டிருக்கின்றோம். வளம்கொண்ட எமது பூமி இன்னமும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. ஏதிலி என்ற சொல்லின் வலிளங்களுக்கு நன்றாகவே புரியும். அந்தச் சொல்லுடன்தான் இன்னமும் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு மக்களும், புதுக்குடியிருப்பு மக்களும் தங்களின் காணிகளை பாதுகாப்புத் தரப்புக்களிடமிருந்து மீட்கவே போராட்டம் நடத்துகின்றனர். சொந்த மண்ணில் இன்னமும் எவ்வளவு காலம் அகதியாக வாழ்வது என்ற அவர்களது அங்கலாய்ப்புக்கு நாமும் கரம் கொடுக்கின்றோம்.

அந்த மக்களுக்கு பேராதரவை நாங்கள் வழங்குகின்றோம். அந்தமக்களின் காணிகளும், எங்களின் காணிகளும் விரைவில் கிடைக்க வேண்டும். சொந்த மண்ணில் நாங்கள் கால் பதிக்க வேண்டும் – என்றார். (வ-5)

## இந்திய ஒயில் நிறுவனத்துடனான உடன்படிக்கை செல்லுபடியற்றது

### கோப் குழு பரிந்துரை

கொழும்பு, பெப்.6
திருகோணமலையிலுள்ள எண்ணெய்த் தாங்கிகளை இந்திய ஒயில் நிறுவனத்துக்குக் குத்தகைக்கு வழங்கும் உடன்படிக்கை செல்லுபடி யற்றது என்பதால் அவற்றை மீளப்பெறுமாறு கோப் குழு பரிந்துரைத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சு மட்டத்தில் அறிக்கையொன்று கோரப்பட்டுள்ளதாக கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எண்ணெய் தாங்கிகளை இந்திய எண்ணெய் நிறுவனத்துக்குக் குத்தகை அடிப்படையில் வழங்கும் உடன்படிக்கை 2003ஆம் ஆண்டு கைச் சாத்திடப்பட்டது. அதன்போது 6 மாதங்களுக்குள் வரி உடன்படிக் கையும் கைச்சாத்திடப்பட வேண் டும் எனவும் கூறப்பட்டது. அவ்வாறானதொரு உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. இந்திய நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட எண்ணெய் தாங்கிகளுக்கான குத்தகை உடன்படிக்கை செல்லுபடியற்றது – என்றார்.

இதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் எண்ணெய் தாங்கிகளை இந்தியாவுக்குக் குத்தகைக்கு வழங்கியமை தொடர் பிலான கணக்காய்வாளரின் அறிக்கையொன்றைத் தயாரித்து சமர்ப்பிக்கவுள்ளதாக கணக்காய் வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அறிக்கையைத் தயாரிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க கூறினார். (வ-4)

## வடக்கிலும் தெற்கிலும் வேட்டுச் சத்தங்கள்



### பதறுகிறார் மகிந்த

துப்பாக்கிச் சத்தத்துக்கு எமது அரசு முடிவு கட்டியி ருந்தது. ஆனால், இன்று வடக்கிலும், தெற்கிலும் வேட்டுச் சத்தங்கள் கேட்கின்றன். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். குருநாகலையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரம் என்றால் என்ன என்பதற்குரிய அர்த்தம் இந்த அரசுக்கு இன்னும் புரியவில்லை. அதனால்தான் அந்த நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை.

காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் கிடைத்த பின்னர் வெள்ளையர்களிடமிருந்து துறைமுகம், வானூர்தி நிலையங்கள் மீட்கப்பட்டன. முழுச் சுதந்திரமுடைய நாடாக இலங்கை உதயமானது. ஆனால், இன்று என்ன நடக்கின்றது? துறை முகங்களும், வானூர்தி நிலையங்களும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதுதான் சுதந்திரமா?– என்றார். (வ-5)

## மயிலிட்டி ஆலயங்களுக்குச் செல்ல இராணுவம் அனுமதி

யாழ்ப்பாணம், பெப்.6
வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள மயிலிட்டி முருகையன் ஆலயம், குளத்தடி கண்ணகை அம்மன் ஆலயங்களில் எதிர்வரும் 9ஆம் திகதி தைப்பூச தின வழிபாடுகள் நடத்துவதற்கு இராணுவம் அனுமதி வழங்கியுள்ளதாக, மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை கண்ணகாதேவி ஆலய நிர்வாகத்தினால் அறிவிக்கப்பட்டது. (வ-5)

# மீள்குடியேற்ற அமைச்சருக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

## வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் புகழ்பாடினார் அமைச்சின் செயலாளர்

வவுனியா, பெப்.6

அமைச்சர் சுவாமிநாதனுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள். எங்கள் அரசு நல்ல அரசாக உருவாவதற்கு உங்கள் குறைகளை உங்கள் அரசியல் வாதிகளிடம் சரியாக கூறுங்கள். அவர்கள் செய்யாவிட்டால் நேரடியாக அரசுக்குத் தெரியப்படுத்துங்கள்.

இவ்வாறு சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் இணைப்பு செயலாளர் பிறிமிலஸ்கொஸ்ரா தெரிவித்தார்.

சிறைச்சாலை.மறுசீரமைப்பு அமைச்சால் ஓமந்தை மருதங்குளம் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்காக அமைக்கப்பட்ட 100 வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று அந்தப் பகுதி கிராம அலுவலர் எம்.நிவேதினி தலைமையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

போரைக் குறிப்பிட்டு முன்னைய அரசு எதையும் உருப்படியாக செய்யவில்லை. போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்ந்து பாதிக்கப்படுகின்றன. அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவுள்ளது.

இந்த வீட்டு திட்டத்துக்காக 8 இலட்சம் ரூபா ஒவ்வொரு குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இது போதுமானதல்ல. இந்த யதார்த்தத்தை அரசியல்வாதிகள் புரிந்து கொள்வதில்லை. வீடொன்றைக் கட்டுவதற்கு குறைந்தது 13 இலட்சம் ரூபாவாவது தேவை. மீதிப் பணத்துக்கு அவர்கள் எங்கு போவது?. கடன் பட்டால் அது பெரிய பிரச்சினைகளை உருவாக்கிறது.

இங்குள்ள அரசியல்வாதிகள் மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவது குறைவு. அவர்களின் பிரச்சினைகளைக் கேட்கவேண்டும். அவர்கள் 30 வருட போருக்குப் பின்பு எந்த மனநிலையில் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இனியும் இந்த மக்களை ஏமாற்றக் கூடாது. இங்குள்ள அரசியல் வாதிகள் வீடுவீடாக வாக்குக் கேட்கின்றனர். அதை மட்டும் செய்தால் போதாது. அவர்களின் பொருளாதார நிலை என்ன? பிள்ளைகளின் நிலை என்ன? என்று கேட்க வேண்டும். ஆனால் அவர்கள் இதைச் செய்வதில்லை. எங்கள் அமைச்சர் சுவாமிநாதனுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள். வீடு மட்டும் எமது தேவையல்ல, பல தேவைகள் உள்ளன. அதை ஒவ்வொரு அரசியல் வாதியும் உணரவேண்டும். சிலர் மட்டும் உணர்கிறார்கள். பலர் மக்களுக்கு உருப்படியாக எதையும் செய்வதில்லை. மக்களை முட்டாள் ஆக்காதீர்கள். மக்களின் சந்தோசம் தான் எங்கள் சந்தோசம் என்று உணர்ந்து அந்தத் தேவைகளை நிறைவு செய்ய அர்ப்பணிப்புடன் சேவையாற்றுங்கள் -என்றார்.

நிகழ்வில் ஐக்கியதேசியகட்சியின் வவுனியா அமைப்பாளர் பி.கருணாதாச, மன்னார் அமைப்பாளர் எஸ்.இ.சம்யூர் முகம்மது பஸ்மி, வவுனியா இணைப்பாளர் முகமட் மகீர், செட்டிக்குள பிரதேச அமைப்பாளர் றாசிக்ஜவுபர், இணைப்பாளர் பெர்ணாட் சுவஞ்சே, மருதங்குளமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ற-21,402)

# கடந்த காலங்களில் மணற்காட்டில் தனிநபரால் மணற்கொள்ளை

## வடக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.6

தமது கைப்பையையும், வங்கிக் கணக்குளையும் நிரப்புவதற்காக தனி நபர் ஒருவரால் மணற்காட்டில் பெருமளவில் மணற்கொள்ளை நடத்தப்பட்டது.

இவ்வாறு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் தனி ஒரு நபரால் பெருமளவில் மணற்கொள்ளை இடம்பெற்றது என்பதில் மாற்றுக் கருத்துக்கள் எதுவும் இல்லை. மணற்காட்டில் அகழப்பட்ட பெருமளவான மணல் மூலம் தங்களின் கைப் பைகளையும் வங்கிக் கணக்குகளையும் நிரப்பிக் கொண்டனர்.

அந்தக் கொள்ளையடிப்பின் மூலம் பாரவூர்தி உரிமையாளர்களான நீங்கள் பயனடையவில்லை. உங்களின் பெருமளவான நிதி இன்றுவரை கூட உங்களுக்குத் திருப்பிச் செலுத்தப்படாமல் நிலுவையில் இருக்கின்றது.

நான் சாதாரண ஒரு பிரஜையாக இருப்பேனானால் எமது பிரதேசத்தில் ஒரு சிறிய அளவு மண்ணைக் கூட எடுக்க விட மாட்டேன். ஆனால் அமைச்சர் என்ற வகையில் சில விடயங்களை கருத்தில் எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. எமது பிரதேசம் பல ஆண்டு கால போரால் பாதிக்கப்பட பிரதேசமாகும். எங்கள் மக்களில் பலர்



வீடுகள் இல்லாமல் இருக்கின்றனர்.

நாம் அவர்களுக்கான வீடுகளை அமைக்க வேண்டிய தேவையில் உள்ளோம். எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. மணலும் அத்தியாவசியமான கனிய வளமாகக் காணப்படுகின்றது. எங்கள் மக்களுக்கு மணல் கிடைக்காமல் போனால் அவர்களின் வீட்டுத்திட்டங்கள் கிடைக்காமல் போகின்ற நிலைமை ஏற்படும்.

அதற்காகவே வலி.கிழக்கு பிரதேச செயலகத்துடன் இணைந்து நெறிப்படுத்தலுடன் மண் அகழ்வை மேற்கொண்டு வருகின்றோம். மண் அகழ்பவர்களைக் கண்காணிக்க என பிரத்தியோகமாக ஒரு கண்காணிப்பளரையும் நியமித்துள்ளோம். முன்னைய காலத்தில் உங்களை அறியாமலேயே சில முறைகேடுகள் இடம்பெற்றன. அவற்றை எல்லாம் தடுத்து நிறுத்துவதற்காகவே நாங்கள் நடவடிக்களை எடுத்து வருகின்றோம் – என்றார்.

நிகழ்வில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த, உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் ,நீண்ட காலம் சங்கத்தில் கடமையாற்றியவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

(ற-8)

# பொலிஸாரைத் திட்டிய குற்றச்சாட்டில் மூவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 6

பொலிஸாரைத் தகாத வார்த்தைகளால் திட்டிய குற்றச்சாட்டில் 3 இளைஞர்கள் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் நுணாவில் பகுதியில் நின்ற பொலிஸாரை முச்சக்கரவண்டியில் சென்ற இளைஞர்கள் தகாத வார்த்தையால் பேசியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மூவரையும் துரத்திப் பிடித்த சாவகச்சேரி பொலிஸார், இளைஞர்கள் மது போதையில் இருந்துள்ளார்களா என்று மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். கைது செய்யப்பட்ட மூவரும் நாவற்குழிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

மருத்துவ பரிசோதனையின் பின்னர் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(ற-106)

# மாலுமிகள் மூவர் மீட்பு

கொழும்பு, பெப். 6

காப் துறைமுகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த கப்பல் ஒன்றில் சிக்கியிருந்த இலங்கையின் 3 மாலுமிகளை ஓமான் விமானப் படையினர் உலங்கு வானூர்தி மூலம் மீட்டுள்ளனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

மோசமான காலநிலையால், கப்பலில் இருந்த மாலுமிகள் உதவிக் கோரிக்கை விடுத்திருந்தனர். றோயல் ஓமான் விமானப்படை உலங்கு வானூர்தி மூன்று இலங்கையர்களை மீட்டது என்று ரைம்ஸ் ஒவ் ஓமான் செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் இவர்கள் மீட்கப்பட்டு கசாப் விமான நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-4)

# இளைஞர் கைது

கொழும்பு, பெப். 6

பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 19 வயதுடைய இளைஞர் ஒருவர் சீதுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவர் நீர்கொழும்பு நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். கொள்ளையடிக்கப்பட்டுள்ள பல பொருள்கள் அவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன. கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

# மாலபே கல்லூரி தொடர்பில் விளக்க நடவடிக்கை

கொழும்பு, பெப். 6

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக்கல்லூரி தொடர்பில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோருக்குத் தெளிவுபடுத்துவதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

முன்னாள் அரச தலைவர் மற்றும் கூட்டு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சங்கம் இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியுடனும் இது தொடர்பிலான சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது என்று சங்கம் தெரிவித்தது. (ற-4)

# ஆசிரியர்களைச் சொந்த மாகாணத்துக்கு விடுவிக்க பதில் ஆசிரியர்களைக் கோரும் ஆணைக்குழு

அச்சுவேலி, பெப்.6

சேவைக்கால ஒப்பந்த அடிப்படையில் நியமனம் பெற்ற ஆசிரியர்களை அவர்களின் சொந்த மாகாணங்களுக்கு விடுவிப்பதானால் பதில் ஆசிரியர்கள் இன்றி விடுவிக்க முடியாது.

இவ்வாறு மேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது. இந்த அறிவித்தல் எம்மை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

இவ்வாறு ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சங்கத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

14 ஆசிரியர்களை வடக்கு மாகாணத்துக்கு விடுவிப்பதற்குப் பதில் ஆசிரியர்களுடனே விடுவிக்க முடியும் என கடந்த வாரம் வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியலையும் பதில் ஆசிரியர் தொடர்பான குறிப்பையும் மேல் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அனுப்பியுள்ளது.

2011 ஆம் ஆண்டு ஐந்து வருடங்கள் நியமனம் பெற்ற மாகாணப் பாடசாலைகளில் கடமை புரிய வேண்டும், உரிய சேவைக்கால நிபந்தனை முடியும்வரை இடமாற்றம் கோர முடியாது என்ற நிபந்தனையுடன் மேல் மாகாணப் பாடசாலைகளில் கடமைபுரிவதற்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.

அவர்களின் சேவைக்கால நிபந்தனை முடிவடைந்ததை அடுத்து அவர்கள் தமது சொந்த மாகாணங்களுக்கு இடமாற்றம் கோரி விண்ணப்பித்தனர். தமது விண்ணப்பம் தொடர்பாக மேல் மாகாண கல்வி அமைச்சை விசாரித்தபோது அவர்களை மேல் மாகாணம் பொதுச்சேவை ஆண்ணக்குழு அவர்களின் சொந்த மாகாணங்களுக்கு விடுவித்துள்ளது என்று கூறப்பட்டது.

அவர்கள் தமது சொந்த மாகாணங்களில் சென்று விசாரித்தபோது பதில் ஆசிரியர் இன்றி விடுவிக்க முடியாது என்ற குறிப்புடன் விடுவிக்கப்பட்ட ஆசிரியர்களின் பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை தெரியவந்தது.

அவர்களின் விடுவிப்பு தொடர்பான கடிதம் கடந்த வாரம் மேல் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேல் மாகாணத்துக்கு பதில் ஆசிரியர்களை அனுப்பும் நிலையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு இல்லாததால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் விடுவிப்பு நடைமுறைக்கு வரமாட்டாது, இடமாற்றமும் கிடைக்காது. இடமாற்றம் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் - என்று பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சங்கத்திடம் கோரியுள்ளனர்.


(ற-11)

## நடேஸ்வரக் கல்லூரி அதிபர் நேற்றுச் சடலமாக மீட்பு

காங்கேசன்துறை, பெப். 6
காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியின் அதிபர் அளவெட்டியில் உள்ள அவரது தாயாருடைய வீட்டில் நேற்றையதினம் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பொ.அமிர்தலிங்கம் (வயது - 58) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.
மானிப்பாயில் வசிக்கும் அவர் நேற்றைய தினம் விடுமுறை என்பதால் அளவெட்டியில் உள்ள அவரது தாயார் வாழ்ந்த வீட்டுக்குச் சென்றுள்ளார். அங்கு தற்போது எவருமே இல்லை.
காலையில் வீட்டில் இருந்து சென்ற அதிபரைக் காணவில்லை என்று வீட்டார் பல இடத்திலும் அவரைத் தேடியுள்ளனர். அதன் பின்பு அளவெட்டி வீட்டுக்குச் சென்று அவரது உறவினர்கள் பார்வையிட்டுள்ளனர். அங்கு அவரது அலைபேசிக்கு உறவினர்களால் அழைப்பு மேற்கொள்ளப்பட்டது. அலைபேசி ஒலித்த சத்தம் வீட்டுக்குள் இருந்துவருவது அவதானிக்கப்பட்டது. இதனையடுத்தே வீட்டின் கதவை உடைத்து உறவினர்கள் உள்ளே சென்று பார்த்தபோது மின்சார இணைப்பு வயரில் தூக்கில் தொங்கிய நிலையில் அதிபரின் சடலம் காணப்பட்டது.
இது தொடர்பில் உடனடியாக தெல்லிப்பழை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.
இதனையடுத்து மல்லாகம் பதில் நீதிவான் சம்பவ இடத்துக்கு வந்து சடலத்தைப் பார்வையிட்டார். உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலத்தை யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலைக்கு அனுப்புமாறும் பதில் நீதிவான் உத்தரவிட்டார். (வ-101)

## ஆண்டு விழா நிகழ்வுகள் இன்று நடக்கவிருக்கையில்

# யாழ். பெரியபுலம் பாடசாலை கட்டடத்தில் நேற்றிரவு திடீர் தீ



யாழ்ப்பாணம், பெப். 6
யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலய கட்டடம் நேற்று இரவு திடீரென தீப்பற்றி எரிந்தது. பாடசாலையின் ஆண்டு விழா நிகழ்வுகள் இன்று நடைபெற இருந்த நிலையில் நேற்று இரவு இந்த இடர் ஏற்பட்டுள்ளது. சுமார் ஒரு மணி நேரப் போராட்டத்தின் பின்னர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
காங்கேசன்துறை சாலையில் கொக்குவில் நாச்சிமார் கோயில் பகுதிக்கு அண்மையில் பெரியபுலம் மகா வித்தியாலயம் அமைந்துள்ளது. பாடசாலையின் கட்டடம் ஒன்றில் நேற்று இரவு 8.15 மணியளவில் தீ பரவத் தொடங்கியது அவதானிக்கப்பட்டது. உடனடியாக யாழ்ப்பாண மாநகர சபையின் தீ அணைப்பு பிரிவுக்கும், பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது. யாழ்ப்பாண மாநாகர சபையின் தீ அணைப்பு வாகனம் விரைந்து வந்தது. இருப்பினும் பாடசாலையினுள் வாகனம் செல்வதற்கு போதுமான இடவசதி இருக்கவில்லை. சாலையில் வாகனத்தை நிறுத்தி, இணைப்புக் குழாய்கள் பொருத்தப்பட்டு நீர் விசிறப்பட்டு தீ அணைப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சுமார் ஒரு மணி நேரப் பிரயத்தனத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.
சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் தகவல் தருகையில், பாடசாலையின் சாரணர் இயக்கத்தின் கட்டடமே தீப் பிடித்துள்ளது. மின் ஒழுக்கினாலேயே தீ ஏற்பட்டதாக முதல் கட்ட விசாரணையில் கட்டறியப்பட்டுள்ளது. பாடசாலையில் நாளை (இன்று) ஆண்டு விழா நடைபெற இருந்தது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டு பாடசாலையில் நின்றவர்கள்தான் தீ விபத்துத் தொடர்பில் தகவல் வழங்கினர். விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம் - என்று தெரிவித்தனர்.
(வ-5-101-106)

### கலப்பு நீதிமன்று

## விக்கியின் கனவு மட்டுமே

*இப்படிச் சொல்கிறார் அமைச்சர் மகிந்த அமரசிங்க*

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை உருவாக்க எடுக்கும் நகர்வு வெறும் கனவு மட்டுமே. அது நடைமுறைச் சாத்தியமற்றது.
இவ்வாறு அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.
களுத்துறையில் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
"சில அரசியல்வாதிகள் வெளிநாட்டு சக்திகள் மற்றும் அமைப்புகளின் அடிமைகளாக இருந்து கொண்டு, குறிப்பிட்ட சில சலுகைகளைப் பெறுவதற்காக மாத்திரம் பணியாற்றுகின்றனர். நாம் எமது படைவீரர்களையும் பொலிஸ் அதிகாரிகளையும் காட்டிக் கொடுக்கமாட்டோம். வடக்கு மாகாண சபையால் கலப்பு நீதிமன்றம் ஒன்று உருவாக்கப்படவுள்ளதாக செய்தி ஒன்றைப் படித்தேன். இது வடக்கு முதல்வரின் கனவு மாத்திரமேயாகும். ஒருபோதும் இது சாத்தியப்படாது. எவரேனும் எமது படையினரைக் காட்டிக் கொடுப்பதற்கு அரச தலைவர் மைத்திரிபால அனுமதிக்கமாட்டார்" என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க குறிப்பிட்டார். (வ-5)




- காலை: 5.00 மணிக்கு பூசை ஆரம்பம். 6 மணிக்கு (1008) ஆயிரத்து எட்டு பால் குடப் பவனி இணுவில் மருதனார்மடம் பல்லப்பர் வைரவர் ஆலயத்தில் இருந்து ஆரம்பம் காலை 8.00 மணிக்கு ஆறுமுகப் பெருமானுக்கு சங்காபிஷேகமும் பால்குட அபிஷேகமும் இடம்பெறும்.
- பால்,குடம் என்பன ஆலயத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பால்குடம் எடுக்கவிரும்பும் அடியவர்கள் வீட்டிலிருந்து எந்தப் பொருள்களையும் கொண்டு வரத்தேவையில்லை. 08.02.2017 புதன்கிழமைக்கு முன் ஆலயத்தில் வந்து பதிவுகளை மேற்கொள்ளவும்.
- முற்பகல் 10.00 மணிக்கு 1008 பானைப் பொங்கல் ஆரம்பம் - 5 மணிக்கு நிறைவு. பொங்கல் பொருள்கள் அனைத்தும் தேவையானவர்கள் ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- நண்பகல் விசேட பூஜை வழிபாடுகளும் சங்கீத கச்சேரிகள் அன்ன தானமும் இடம்பெறும். இரவு 7.00 மணிக்கு உலகப் பெருமஞ்சத்தில் ஆறுமுகப் பெருமான் வீதிவலம் வருவார், பாரம்பரிய கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.
- அடியவர்கள் அனைவரும் பால் குடம் எடுக்கவும் பொங்கிப்படையல் செய்யவும் உலகப் பெருமஞ்ச வடம் தொட்டிழுக்கவும் வாரீர்.


குறிப்பு: யாத்திரிகர்களுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

**அண்ணா தொழிலகம்**
அண்ணா நிறுவனத்தின் புதியதோர் உற்பத்தி அண்ணா நூடில்ஸ்
உடனடித் தயாரிப்பு உண்ணச் சுவையான உணவு அண்ணா உற்பத்தி விற்பனை நிலையங்கள் எல்லா இடமும் பெற்றுக்கொள்ளலாம்.
அண்ணா மல்லிக் கோப்பி உலகத் தரம் வாய்ந்த பொதிகளில் உங்கள் வசதிக்கேற்ப சாது விற்பனை முகவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
துரை வீதி, இணுவில்.
021 224 1565
ANNA INTERNATIONAL (PVT) LTD
214 /5,Messenger Street, Colombo - 12
+ 941 124 36063

**மகுடம் புத்தக நிலையம்**
784, 786 கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.
தொ.பே. 021 568 5276
075 544 5979
பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள்
இந்தியப் புத்தகங்கள், Pass Papers
அன்பளிப்புப் பொருள்கள் யாவும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

# வடக்கில் முன்னணி நகரமாக வவுனியா வளர்ச்சியடைகிறது

## வடக்கு முதல்வர் பெருமிதம்



வவுனியா,பெப்.6

வவுனியா மக்களின் வாழ்க்கை முறை குறிப்பிடப்பட்ட மட்டத்துக்கு மேலாக வளர்ந்துள்ளது. வடமாகாணத்தின் வளர்ச்சிப் படிநிலைகள் ஆராயப்படும் போது வவுனியா நகரம் ஏனைய முன்னணி நகரங்களுக்கு ஒப்பானதாக அல்லது அவற்றை விஞ்சி வளர்ச்சி அடைந்து வருகின்றது என்பதில் சந்தேகம் எதுவும் இருக்க முடியாது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா நகரப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட பொது மக்கள் பூங்காவின் திறப்பு விழா நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பூங்காவைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நெல்சிப் திட்டத்தின் கீழும், எமது மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையின் கீழும் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக பூங்காக்கள், காரியாலயக் கட்டடங்கள், கலாசார மண்டபங்கள், தியான மண்டபங்கள் போன்றன திறந்து வைக்கப்படுகின்ற நிகழ்வுகளில் ஆரம்ப நிகழ்வாக, வவுனியா நகரமையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இந்தப் பொதுப் பூங்காவைத் திறந்துவைத்துஉரையாற்றுவதில் மகிழ்வடைகின்றேன்.

வவுனியா நகர் ஒரு காலத்தில் மிகப் பசுமையாகப் பச்சைப் பசேல் என்றிருந்தது. காடுகள், மரச்சோலைகள், இயற்கைப் பூங்காக்கள் நிறைந்ததாக இருந்தது. இன்று அபிவிருத்தி என்ற பெயரில் சிமெந்துக் கட்டடங்கள் மலிந்து விட்ட ஒரு பிரதேசமாக மாறிவருகின்றது. அபிவிருத்தி என்று நோக்கும் போது அவ்வாறான மாற்றத்தை வரவேற்றாலும், மறுபுறத்தில் மனிதன் இயற்கையைத் தொலைத்து விட்டு எங்கோ செல்கின்றான் என்ற நிலைப்பாட்டையும் மறுப்பதற்கில்லை. அதனால் தான் செயற்கைப் பூங்காக்கள் தேவைப்படுகின்றன.

குருமன் காட்டில் சிறுவர் பூங்கா ஒன்றும் அடுத்துத் திறக்கப்பட உள்ளது. இன்று இயற்கையாகக் கிடைக்கக்கூடிய தூய தண்ணீருக்குத் தட்டுப்பாடு வந்து விட்டது. போத்தல் குடிதண்ணீரை விலை கொடுத்து வாங்கி அருந்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். அந்தத் தண்ணீரில் கனிப்பொருள்கள், உலோகத்தாது போன்றவற்றை அப்புறப்படுத்தியே குடிதண்ணீர் தயாரிக்கப்பட்டு வருகின்றது என்று அண்மைய நீரியல் ஆய்வரங்கின் போது அறிந்து கொண்டேன்.

உடலுக்குத் தேவையான கனிப்பொருள்கள் இல்லாமலே நாங்கள் தற்போது குடிதண்ணீரை அருந்துவதாகத் தெரிகின்றது. வவுனியா நகரத்துக்கு ஏற்ற ஒரு பொதுப்பூங்கா ஒன்றை அமைத்து வழங்குமாறு விடுக்கப்பட்ட பலரின் கோரிக்கைகளுக்கு அமைவாகவே வடமாகாணசபையின் நெல்சிப் திட்டத்தின் கீழ் 7.17 மில்லியன் ரூபா செலவில் எமது உள்ளூராட்சித் திணைக்களத்தினால் இந்த அழகிய பொதுப் பூங்கா இன்று மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது.

வவுனியாவை நாங்கள் மறந்துவிட்டோம் என்ற குற்றச் சாட்டுக்கு இனி இடமில்லாமல் பல செயற்திட்டங்களை இன்று திறந்து வைக்கின்றோம். இன்னும் பலவற்றை நாம் தொடர்ந்து செய்து வருவோம். ஒரு கிராமம் நகரமாக மாறுகின்றபோது படிப்படியாக வளர்ச்சியுற்று நகரமயமாக்கப்படலாம் அல்லது நன்கு திட்டமிட்டு அந்த நகரம் எவ்வாறு அமைய வேண்டும், கடைத் தொகுதிகள் எங்கு அமைய வேண்டும், பஸ் நிலையம் எங்கு அமைய வேண்டும், திணைக்களங்களுக்கான காணிப் பங்கீடுகள் எந்த வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அனைத்து விடயங்களும் திட்டங்களுக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்படலாம்.

அவ்வாறு திட்டமிட்டு தோற்றம் பெறுகின்ற நகரங்கள் சிறப்பானவையாக அமைவன. வவுனியா நகரம் அவ்வாறான ஒரு சிறப்பை அடையக் கூடிய நிலையில் இருந்த போதும், வட்டுவாகல் இறுதிப் போரைத் தொடர்ந்து இலட்சக்கணக்கான மக்கள் சாரிசாரியாக இடம் பெயர்ந்து வவுனியா நகர்ப் பகுதியையும், செட்டிகுளம் பகுதியையும் சென்றடைந்த போது அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்ட பல அபிவிருத்திப் பணிகள் பல குழப்பங்களை உருவாக்கி விட்டன.

எனினும் வவுனியா நகரம் ஒரு திட்டமிடப்பட்ட, ஒழுங்கமைக்கப்பட்ட நகரம் என்றே கூற வேண்டும். விவசாய வளர்ச்சி, மாணவர்களின் கல்வி வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி ஆகிய அனைத்துத் துறைகளும் சமாந்தரமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இங்குள்ள வைத்தியர்களும், சுகாதார அமைச்சரும் சேர்ந்து சுகாதாரத் துறையை அபிவிருத்தி செய்து முன்னணிக்குக் கொண்டு வர அரும்பாடுபட்டு வருகின்றார்கள். மக்களின் தேகசுகத்தையும், மனோ சுகத்தையும் மேம்படுத்தவே இந்தப் பொதுப்பூங்கா இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதனைச் செவ்வனே பராமரித்து வருவது உங்கள் ஒவ்வொருவரின் கடமையாகின்றது -என்றார். (ஐ-21)



### கல்மடு கிராமத்தில்

## வீதி சீரமைப்புப் பணிகள் ஆரம்பம்

மன்னார்,பெப்.6

மடு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடு கிராமத்தில் உள்ள மக்களின் போக்குவரத்து வசதிகளைக் கருத்திற் கொண்டு, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதி அவைத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தனது நிதி ஒதுக்கீட்டின் கீழ் வீதிச் சீரமைப்புக்கான பணிகளை கடந்த வெள்ளிக்கிழமை காலை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

மடுபிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட கல்மடு கிராமத்தில் சுமார் 350 குடும்பங்கள் வசிக்கும் கல்மடு 2 ஆம் மற்றும் 3 ஆம் யுனிற்றுக்களுக்கான, 2 ஆம் யுனிட் பிரதான வீதி தார் வீதியாக சீரமைக்கப்படவுள்ளது.

இதன் போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம், அப்பகுதிக் கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அமைப்புக்களின் உறுப்பினர்கள் , கிராம மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ-56)

## விபத்தில் பெண் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ்.குப்பிளான் பகுதியில் இடம் பெற்ற விபத்தில் வயோதிபப்பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

சிறுமி ஒருவர் அதிஷ்டவசமாக உயிர்தப்பினார் என்று தெரிவிக்கப் பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குப்பிளான் சந்திக்கருகில் வர்த்தக நிலையமொன்றுக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த வயோதிபப்பெண்ணை, பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் கடுமையாக மோதியதில் அவர் படுகாயங்களுக்கு உள்ளாகினார்.

இதன்போது குறித்த பெண்ணுடன் சென்ற சிறுமி இடப்பக்கமாக நடந்து சென்ற காரணத்தால் காயங்கள் எதுவுமின்றி நூலிழையில் உயிர் தப்பினார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## வயல் காணிகளை பகிர்ந்தளிக்க வேண்டும்

### ஜெயபுரம் மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி,பெப்.6

பூநகரி ஜெயபுரத்திலுள்ள வயல் நிலங்களை இந்த வருடத்திலாவது மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்க வேண்டுமென கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

1983 ஆம் ஆண்டு இந்தக் கிராமம் உருவாக்கப்பட்ட போது, தேவன்குளத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 526 ஏக்கர் வயல் நிலத்தில், பயிர்ச் செய்கைக்கான நீர்ப்பாசன வசதிகளை செய்து தருவதாகக் கூறி மக்கள் குடியமர்த்தப்பட்டனர்.

போர்ச்சூழல் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வுகளையடுத்து தற்போது மீள்குடியமர்வு செய்யப்பட்ட நிலையில், தங்களுக்கு வழங்குவதாகக் கூறப்பட்ட வயல் காணிகள் இன்னமும் பகிர்ந்தளிக்கப்படவில்லை என மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கிராம மக்களுக்கான வயல் நிலத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு அரசு மற்றும் மகாணசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், வடமாகாண விவசாய அமைச்சு வயல் நிலம் பகிர்ந்தளிப்பு விடயத்தில் அக்கறை காட்ட வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ)





## பாரம்பரிய உணவகம் ஓமந்தையில் திறப்பு

வவுனியா,பெப்.6

2.3மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பாரம்பரிய உணவகம் வவுனியா ஓமந்தையில் நேற்று முன்தினம் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரனால் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண சபை உறுப்பினர்களான செ.மயூரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அசங்க காஞ்சனகுமார, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைச் செயலாளர் திருமதி சுகந்தி கிஷோர், திடீர் இறப்பு விசாரணை அதிகாரி கிஷோர், நகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். -(ஐ)

# பாடசாலை செல்லாதோர் சிறுவர் இல்லத்தில் சேர்ப்பு

கிளிநொச்சி,பெப்.6
கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் பாடசாலைகளுக்குச் செல்லாத மற்றும் இடைவிலகிய 7 சிறுவர்கள் கிளிநொச்சி நீதிவான் மன்றின் உத்தரவுக்கு அமைய சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

கண்டாவளை, புன்னைநீராவி ஆகிய பகுதிகளில் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே பாடசாலைகளுக்குச் செல்லாத மற்றும் இடை விலகிய மாணவர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட சிறுவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போதே நீதிவான் இந்த உத்தரவை வழங்கினார். இனம்காணப்பட்ட சிறுவர்களின் பெற்றோர்களுக்குக் கடுமையான எச்சரிக்கையும் மன்றினால் விடுக்கப்பட்டது. அத்துடன் சிறுவர் நிலையத்தில் வைத்து சிறுவர்களைப் பராமரிக்குமாறும் பெற்றோர்களுக்கு மன்று உத்தரவிட்டது.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள மிகவும் பின் தங்கிய கிராமங்களில் பாடசாலைகளுக்கு செல்லாத அல்லது இடைவிலகிய மாணவர்களின் தொகை அண்மைய நாள்களாக அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-21)

# தமிழர் போராடும் நிலையை உருவாக்கியது ஆட்சிப் பீடமேறிய இனவாத அரசுகளே

முல்லைத்தீவு,பெப்.6
தமிழர் தமது சுய நிர்ணய உரிமை கோரிப் போராடும் நிலையை உருவாக்கியது மாறி மாறி வந்த இனவாத அரசுகளே. முல்லை மண் ஆக்கிரமிப்பு பன்னாட்டுக்குக் கேட்குமா? நான் அறியேன். ஆனால் பொய் வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்ட தமிழர் விடுதலைப் போராட்டத்தின் மையப் பொருளுக்கு ஒரு நாள் பன்னாடு பதில் சொல்லும் காலம் வரும். இவ்வாறு வன்னி மாவட்ட நாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித் தார்.

பிலக்குடியிருப்பு மக் களின் போராட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மக்களின் வாழ்வியல் பிரதேசங்களை இராணுவம் ஆக்கிரமிப்பது அநீதியானது. அராஜகமானது. மக்களின் வாழ்வியலை உருக்குலைப்பதற்கு மறுபெயர் தேசிய பாதுகாப்பு என்றால், அதையும் உடைத்தெறிய மக்கள் போராடுவது தவிர்க்க முடியாது.

புதுக்குடியிருப்பு நகர மத்தியின் முகாம், கேப்பாப்பிலவு முகாம் மற்றும் கிழக்கு முள்ளிவாய்க்கால் முகாம் போன்றவை மக்களின் வாழ்வியல் பிரதேசங்களை ஊடுருவி அமைக்கப்பட்டவை.

இராணுவம் உடன் வெளியேறாவிட்டால் மக்கள் சிவில் அரச நிர்வாகத்தை முடக்கும் நிலைக்குச் சென்று விடுவர். கூட்டாட்சி அரசு உரிய தீர்வுகளை வழங்கி இராணுவத்துக்கென அரச காணிகளை அடையாளம் காண முயற்சிக்க வேண்டும். (ஜ)

# நோயாளர் காவு வண்டிகள் முல்லைத்தீவில் பற்றாக்குறை

## 9 நோயாளர் காவு வண்டிகள் பழுதடைந்த நிலையில்

முல்லைத்தீவு,பெப்.6
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலுமாக 20 நோயாளர் காவு வண்டிகள் உள்ள போதிலும், தற்போது 11 நோயாளர் காவு வண்டிகளே சேவையில் ஈடுபடுவதாகவும், ஏனையவை பழுதடைந்து காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வைத்தியசாலைகள் அனைத்தும் வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்குகின்றன.

இவ்வாறு இயங்கும் 15 வைத்தியசாலைகளில் மொத்தம் 20 நோயாளர் காவு வண்டிகள் உள்ளன.

இவற்றில் தற்போது 11 நோயாளர் காவு வண்டிகள் மட்டுமே சேவையில் ஈடுபடும் தரத்தில் உள்ளதோடு ஏனையவை அனைத்தும் திருத்தத்தில் உள்ளன.

குறிப்பாக மாஞ்சோலை மாவட்ட வைத்தியசாலை , புதுக்குடியிருப்பு , மல்லாவி ஆகிய வைத்தியசாலைகளில் தலா 2 நோயாளர் காவுவண்டிகள் வீதம் 6 நோயாளர் காவு வண்டிகளும் மாங்குளம் , நட்டாங்கண்டல் , ஐயன்கன்குளம் , ஒட்டுசுட்டான் , கொக்குளாய் ஆகிய 5 வைத்தியசாலைகளிலும் தலா ஒரு காவு வண்டிகள் வீதம் 5 நோயாளர் காவு வண்டிகளுமாக மொத்தம் 11 நோயாளர் காவு வண்டிகளும் சேவையில் ஈடுபடும் தரத்தில் உள்ளன. (இதில் மல்லாவி வைத்தியசாலையில் இயங்கு நிலையில் இருந்த புதிய நோயாளர் காவு வண்டியே கடந்தவாரம் திடீரென பறித்து வெலிஓயா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டது).

இதேவேளை இந்த மாவட்டத்தின் அளம்பில் , குமுழமுனை , மூங்கிலாறு , வெலிஓயா, உண்ணாப்புலவு , கொக்குளாய் ஆகிய 5 வைத்தியசாலைகளினது தலா ஒரு நோயாளர் காவு வண்டிகளும், மாஞ்சோலை வைத்தியசாலையின் இருவண்டியுமாக மொத்தம் 7 நோயாளர் காவு வண்டிகள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இவ்வாறு பழுதடைந்த நோயாளர் காவு வண்டிகளில் இரண்டு புதியவை எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

அத்தோடு இதே மாவட்டத்தில் வைத்தியசாலைகளின் நிலை இவ்வாறிருக்க மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் இருக்கும் இரு நடமாடும் மருத்துவ சேவை வாகனங்கள், ஒரு பணியாளர் சேவை வாகனம், ஒரு பாரவூர்தி என்பவற்றுடன் பணிப்பாளரின் பிக்கப் வரையில் பழுதடைந்த நிலையிலேயே காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இவ்வாறு மாவட்டத்தில் காணப்படும் நிலமை தொடர்பில் மாகாண சுகாதாரப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது , மாவட்டத்தில் காணப்படும் பழுதடைந்த நோயாளர் காவு வண்டிகளில் மூன்று அறவே பயன்படுத்தப்பட முடியாதவை.

ஏனையவை தற்போது ஏற்பட்ட பழுதுகளுடன் இருப்பினும் 6 வாகனங்கள் தொடர்பில் உடன் கவனம் செலுத்தப்பட்டு உடனடியாக திருத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். அதே போன்று மாவட்டத்தின் ஏனைய பாவனை வாகனங்கள் தொடர்பில் மீண்டும் ஒரு முறை ஆய்வுக்குட்படுத்தி அவற்றையும் இயக்க முயற்சிப்பதாகப் பதிலளிக்கப்பட்டது.

இது தொடர்பில் வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது , வைத்தியசாலைகளின் வாகனங்களில் திருத்தம் ஏற்படுகின்ற போது ஒரு லட்சம் ரூபாவுக்கும் உட்பட்டது எனில் திணைக்களமே மேற்கொள்ள முடியும். அதற்கும் மேற்பட்ட தொகை என்றால் மட்டுமே எமது அனுமதி வேண்டும்.

ஆனால் அதிக வாகனங்கள் திருத்தம் அடையும் சமயத்தில் உடனடியாக கவனம் செலுத்தப்படும்–என்றார். (ஜ)

# புளியங்குளத்தில் மைதானம் திறப்பு

புளியங்குளம்,பெப்.6
தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் இலங்கை இளைஞர் நாடாளு மன்றம் ஆகியவற்றின் நெறிப்படுத்தலில் புளியங்குளம் வடக்கில் சீரமைக்கப்பட்ட மைதானம் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

Youth Got Talent - 2016 மக்கள் கருத்திட்டத்தில் ஆயிரத்து 500 வேலைத்திட்டத்தின் கீழ், வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில், புளியங் குளம் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில், புரட்சி இளைஞர் கழகம் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிதி மற்றும் மக்கள் பங்களிப்புடன் இந்த மைதானம் சீரமைக்கப்பட்டுள்ளது. (ஜ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நவநாயகமலர் கதிரவேலு



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு (மாளிகாவத்தை), கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நவநாயகமலர் கதிரவேலு 02.02.2017 வியாழக் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் ச.கதிரவேலுவின் (ஓய்வுபெற்ற பொறியியலாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகேந்திரம் - அம்மாபிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற சண்முகம் - இளையாச்சி தம்பதிகளின் மருமகளும், சிறீகௌரியின் அன்புத் தாயாரும், கஸ்ரோ நாகலிங்கத்தின் மாமியாரும், அஸ்வந், அபிராமி ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நவமணி, தருமலிங்கம் மற்றும் நவரத்தினமணி, நவலோக புஷ்பமணி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2017) திங்கட் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.ஆனந்தராசா
(சுன்னாகம்)

சந்தைதெற்கு வீதி,
சுன்னாகம்.
(J/7906)(11,17,18)

### தர்மலிங்கம் தங்கரத்தினம்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி, நவக்கிரியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தங்கரத்தினம் 03.02.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - அன்னப்பிள்ளை (அன்னு) தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சிவபாக்கியம் (கிளி), புஸ்பவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாந்தமலர், கலாரஞ்சன் ஆகியோரின் பாசமிகு மாமியும், மகிந்தனின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், றோசம்மா, சின்னத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான மீனாம்பாள், ராஜதுரை மற்றும் சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும், இந்திராணி, காலஞ்சென்ற தனபாலன் மற்றும் செல்வநேசன் (ஜேர்மனி), செல்வராணி (ஜேர்மனி), செல்வமலர், செல்வகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற செல்வரஞ்சினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.02.2017 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வகுமார் (சுவிஸ் - 0041 2164 67302),
செல்வராணி (ஜேர்மனி - 0049 1578 0844 038),
செல்வநேசன் (ஜேர்மனி - 0049 2323 399 9569),
மகிந்தன் - 077 365 8270

நவக்கிரி மேற்கு,புத்தூர்.
(J/7917)
(11,17,18)

## மரண அறிவித்தல்



### வல்லிபுரம் இராசரத்தினம்
(நல்லூர்)

யாழ். கலைநகர், வட்டு வடக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் இராசரத்தினம் 31.01.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2017) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொற்றைத்துறை இந்து மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யாழ். கலைநகர்
வட்டு வடக்கு,
சித்தன்கேணி.

தகவல்:
குடும்பத்தினர்.

# அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மகிந்தவுடன் சந்திப்பு

கொழும்பு,பெப்.6
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினருக்கும், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் சந்திப்பொன்று நேற்றுமுன் தினம் இடம்பெற்றது.
மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் அனைவரையும் தெளிவுபடுத்தும் நடவடிக்கையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஈடுபட்டதாக அதன் ஊடகப் பேச்சாளர் சமந்த ஆனந்த தெரிவித்தார். இதன் ஒரு அங்கமாகவே முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை தாம் சந்தித்ததாக அவர் தெரிவித்தார்.
இந்தச் சந்திப்பில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன மற்றும் முன்னாள் அமைச்சர்களான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், திஸ்ஸ விதாரண ஆகியோரும் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# அரசின் நடவடிக்கைக்கு எதிராக 58 லட்சம் பேரிடம் கையெழுத்து

## மகிந்த அணி தயாராகிறது

கொழும்பு,பெப்.6
வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கையில் காணிகளை விற்பனை செய்யும் அரசின் நடவடிக்கைக்கு எதிராக 58 லட்சம் பேரின் கையெழுத் துடன் மனு ஒன்றைத் தயார் செய்யவுள்ளதாக மகிந்த ஆதரவு பொது எதிரணி தெரிவித்துள்ளது.
கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே இதனைத் தெரிவித்தார்.



அவர் தெரிவித்ததாவது:
சகல மாவட்டங்களிலும் வீடு வீடாகச் சென்று இந்தத் திட்டம் குறித்து தெளிவுப்படுத்தி மனுவில் கையெழுத்துப் பெறப்படும். நாட்டு மக்கள் தமது நிலைப்பாட்டை வெளிக்காட்ட, உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு நடத்த நடவடிக்கை எடுக்க வேண் டும் – என்றார். (ஐ)

# திருகோணமலை துறைமுகத்தில் தாஜுீடீன் கப்பல்

திருமலை,பெப்.6
பங்களாதேஷ் கடலோர காவற்படையினரின் கப்பலான தாஜுீடீன் திருகோணமலைத் துறைமுகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்துள்ளது. இலங்கைக்கான நட்புறவுப் பயணமாக இந்தக் கப்பல் இங்கு வந்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.
திருகோணமலை துறைமுகத்தை குறித்த கப்பல் வந்தடைந்தவுடன் திருகோணமலை கடற்படையினர் வரவேற்றனர்.
இலங்கை மற்றும் பங்களாதேஷ் நாடுகளுக்கு இடையிலான இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டது. (ஐ)

# போதைப் பொருள் பாவனையிலிருந்து எதிர்காலச் சந்ததியை மீட்டெடுப்போம்

மட்டக்களப்பு மாவட்டத்தில், போதைப் பொருள் பாவனையிலிருந்து எதிர்காலச் சந்ததியை மீட்டெடுக்கின்ற போராட்டத் தைச் செய்ய வேண்டும் என, கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம். எஸ். எஸ். அமீர் அலி தெரிவித்தார்.
மட்டக்களப்பு வெபர் மைதானத் தில், கடந்த சனிக்கிழமை நடை பெற்ற சுதந்திர தின வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எங்களுடைய கடந்தகால சந்ததிகள் போனாலும் கூட, எதிர்காலச் சந்ததிகளை, போதைப்பொருள் பாவனையிலிருந்து காப்பாற்ற வேண்டிய தேவை உள்ளது.
சிறுபான்மை சமூகத்தினுடைய எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறுமென் கின்ற 60 வருட கால எதிர்ப்பார்ப் புக்களை, கூட்டு அரசு ளங்களுக் குச் செய்து தரும் என்ற நம்பிக் கையோடு இருக்கின்றோம்– என்றார். (ஐ)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
(06.02.2017)



அமரர் சிவக்கொழுந்து திருநாவுக்கரசு
(கலாபூஷணம், கலைஞான சுடர் மாமனிதர், வன்னை கலைவாணர் நாடக மன்ற இயக்குநர், சிவக்கொழுந்து திருநாவுக்கரசு, மூத்த புகைப்படக் கலைஞர் அரசையா (S.T.அரசு) என்று அழைக்கப்பட்ட சிவக்கொழுந்து திருநாவுக்கரசு)
பிறப்பு:- 28.04.1926 இறப்பு:- 17.02.2016
பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
28.செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

# அட்டாளைச்சேனை கிராமங்கள் அபிவிருத்தி

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் 16 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன என, அட்டாளைச்சேனை உதவி பிரதேச செயலாளர் ரீ.ஜே. அதிசயராஜ் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய 32 கிராம சேவகர்கள் பிரிவுகளில், உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு, ஒரு கிராம சேவகர் பிரிவுக்கு தலா 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
கிராம சேவகர் பிரிவுகளில் உட்கட்டுமான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை இனம்காண்பதற்கான பொதுமக்களுடனான கலந்துரையாடல், சம்பந்தப்பட்ட பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
இந்த வேலைத்திட்டங்கள், பொது மக்களின் ஆலோசனைக்கு அமைவாகவும் பங்களிப்புடனும் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.
ஒரு கிராம சேவகர் பிரிவில், கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி 70 சதவீதமும் சுய தொழில் ஊக்குவிப்பு 30 சதவீதமுமாக அமைய வேண்டும் எனவும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு நேரடியாக பங்களிப்புவழங்கும்பொருட்டு, சுயதொழில் ஊக் குவிப்பை முன்னுரிமைப் படுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் இதன்போது மேலும் குறிப்பிட்டார். (க)

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 08.01.2017 அன்று இறைபதமடைந்த
எமது குடும்ப குலவிளக்கு
அமரர்
இராஜகோபால் சாருஜன்



தோற்றம் 11.07.1987
மறைவு 08.01.2017

அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு நாளை (07.02.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும்கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

71/8, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

# இதய நோயாளர்களுக்கு மருந்து இறக்குமதி செய்ய அரசு திட்டம்

கொழும்பு,பெப்.6
இதய நோயாளர்களுக்கு உடனடியாக வழங் கக் கூடிய மருந்து வகை ஒன்றை இறக்குமதி செய்வது குறித்து சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது என்று தெரிவிக் கப்பட்டது. மாரடைப்பு ஏற்படும் நபர் ஒரு வருக்கு இந்த மருந்தை உடனடியாக வழங்குவதன் மூலம், அவரது உயிரைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் எனவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
குறித்த மருந்தை மாரடைப்பு ஏற்பட்டு 3 மணித்தியாலங்களுக்குள் வழங்க வேண் டும் என மருத்துவர்கள் குறிப்பிட்டுள்ளனர். மாரடைப்பைக் குணப்படுத்தும் இந்த மருந்தின் தற்போதைய விலை ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா ஆகும்.
எனவே, குறித்த மருந்தை குறைந்த விலைக்கு இலங் கைக்கு இறக்குமதி செய் வது தொடர்பில் பேச்சு ஆரம் பிக்கப்பட் டிருப்பதாக சுகாதார அமைச்சர் தெரிவித் துள்ளார்.
இதய நோய் சம்பந்தமான விசேட நிபுணர் கள் சங்கத் துடன் சுகாதார அமைச்சில் இடம் பெற்ற சந்திப்பில் இது தொடர்பில் அவதா னம் செலுத்தப்பட்டதாக சுகாதார அமைச்சு கூறியுள்ளது. (ஐ)

மரண அறிவித்தல்
திருமதி ஈஸ்வரி நடராஜா



காரைநகர், வேம்படி அம்மன் கோவில் வீதியை சேர்ந்த திருமதி ஈஸ்வரி நடராஜா 05.02.2017 ஞாயிற்றுக் கிழமை வவுனியாவில் காலமானார்.
அன்னார் வாரிவளவைச் சேர்ந்த காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் சரஸ்வதி (கனடா) தம்பதியரின் அன்பு மகளும் கந்தையா நடராஜாவின் அன்பு மனைவியும் அறுகம்புலத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா-சௌந்தரம் தம்பதியரின் அன்பு மருமகளும் தயாழினி, யசோதா (ஆசிரியை, விபுலானந்தா கல்லூரி, வவுனியா), கோசலா ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிமலன், சிறீகுகன் ஆகியோரின் அன்பு மாமியாரும் லக்சயன், கரிசனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2017) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உக்கிளாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 171, 3 ஆம் ஒழுங்கை,
பண்டாரிகுளம்,
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்
077 662 7950

ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவலைகள்



அமரர் பாலசுப்பிரமணியம்
தர்மசீலன்
B.Sc, Dip in Education
பௌதிகவியல் ஆசான்
யா/ அருணோதயாக்கல்லூரி
திதி: ஏகாதசி
தோற்றம் 23 . 02 . 1974
மறைவு 30 . 01 . 2015

பௌதிகவியலைப் பௌவியத்துடன் போதித்து
மருத்துவர்களையும் பொறியியலாளர்களையும்
பாரிற்கு உவந்தளித்த எமது அப்பா நாம் வளர்ந்ததும் வருவாரென
அகம் குளிரக் கூறும் அன்புப் புதல்வருக்கு
ஏகாதசித் திதியில் ஏகமாய் எமைப்பிரிந்து
ஈராண்டுகள் ஆனதனை எப்படி எடுத்துரைப்போம்?
ஈராண்டுகளென்ன ஈரேழு ஜென்மங்கள் ஆனாலும்
மனிதருள் மாணிக்கமாய் மனதில் நிலைத்து நிற்கும்
"தர்மசீலரே "அவனியில் உள்ளவரை அழியாது உங்கள் நினைவு

உங்கள் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.

(j/7088) (12,17)

# சிவனொளிபாதமலைக்கு 3 நாள்களில் 2 இலட்சம் யாத்திரிகர்கள்

கண்டி,பெப்.6
சுதந்திரதினவிடுமுறையையொட்டி, கடந்த வெள்ளிக்கிழமை முதல் நேற்று ஞாயிற்றுக்கிழமை வரை, சிவனொளிபாத மலைக்கு, இரண்டு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் யாத்திரை மேற்கொண்டிருந்தனர் என நல்லத்தண்ணிப் பொலிஸார் தெரிவித்தனர்.
இதனால், மஸ்கெலியா மவுசாகலை சந்தியிலிருந்து, நல்லத்தண்ணி மலையடிவாரம் வரையில் வாகன நெரிசல் ஏற்பட்டது. அத்துடன், நல்லதண்ணியிலிருந்து மவுஸ்ஸாகெல வரையான 7 கிலோ மீற்றர் தூரத்துக்கு, வாகனங்கள் தொடர்ச்சியாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.
புனித பூமிக்கு வருகை தந்த யாத்திரிகளின் நலன் கருதி, அரச மற்றும் தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதுடன், பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டது.
வருகை தந்த யாத்திரிகர்கள், புனித பூமி பிரதேசத்தில், சூழல் மாசடைவை ஏற்படுத்தாவண்ணம் ஒத்துழைப்பு நல்கியதாகவும் நல்லத்தண்ணிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

## பாவனைக்கு உதவாத பொருள்கள் விற்பனை செய்தோருக்கு தண்டம்

நுவரெலியா, பெப்.6
மஸ்கெலியா பிரதேசவீதியோர வர்த்தக நிலையங்களில் பொதுச்சுகாதார அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது பாவனைக்குதவாத பொருள்களை விற்பனை செய்த 4 பேருக்கு ஹற்றன் நீதிமன்றில் தண்டம் விதிக்கப்பட்டது.
மஸ்கெலியா. ரிகாடன் பகுதியிலிருந்துதண்ணி வரை வீதியோரங்களில் உள்ள 10 விற்பனை நிலையங்கள் அதிகாரிகளால் நேற்று முன்தினம் சோதனையிடப்பட்டன.
விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, காலாவதியான பொருள்களை வைத்திருந்தமை, கூடிய விலைக்கு பொருள்களை விற்பனை செய்தமை, உத்தரவாதம் அளிக்கப்படாமல் விற்பனை செய்தமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரிலேயே இவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது.
இதன்போது 4 பேரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதனால் ஹற்றன் நீதிமன்ற நீதிவான் தலா 5000 ரூபா வீதம் 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ஐ-ய-43)

*எல்லை மீள்நிர்ணயக் குழுவினரின் அறிக்கையை*

# திருத்தம் செய்யாமல் வர்த்தமானியில் பிரசுரிப்பது சிறுபான்மையினருக்கு அநீதி

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கருத்து

கொழும்பு,பெப்.6
உள்ளூராட்சித் தேர்தலில் புதிய முறைமை யொன்றை அறிமுகப்படுத்தும் எல்லை மீள்நிர்ணயக் குழுவினரின் அறிக்கையில், உரிய சட்டத்திருத்தங்களைச் செய்யாமல் ஒரு மாத காலத்துக்குள் வர்த்தமானியில் பிரசுரிப்பது, சிறுபான்மை மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.
இவ்வாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
உள்ளூராட்சித் தேர்தலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய முறைமை மூலம், சம்மாந்துறை பிரதேசத்துக்கு பெரியஅநீதி இழைக்கப்பட்டுள்ளது.
உதாரணமாக, சம்மாந்துறை பிரதேசத்தில் சுமார் 68 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் உள்ளனர்.
இப்பிரதேசத்துக்கு 12 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
ஆனால், தெஹியத்தகண்டி பிரதேசத்தில், சுமார் 58 ஆயிரம் வாக்காளர்கள் உள்ளனர்.
அந்தப்பிரதேசத்துக்கு 23 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இதனை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, எல்லை மீள்நிர்ணயக் குழுவின் அறிக்கையில், பெரும்பான்மை மக்கள் வாழும் பிரதேசத்தில் கூடிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதற்கும், சிறுபான்மை மக்கள் வாழும் பிரதேசத்தில் குறைந்த உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதற்கும் ஏற்ற வகையில் திட்டமிட்டு, உள்ளூராட்சித் தேர்தலின் புதிய முறைமை வரையப்பட்டுள்ளமை தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது.
56 இடங்களில் திருத்தங்கள் அவசியமென்று பரிந்துரை வழங்கியிருக்கின்ற நிலையில், எல்லை மீள்நிர்ணயக் குழுவினர் கையொப்பம் இட்டு கையளித்துள்ள அறிக்கையை ஆராய்ந்து, திருத்தங்கள் மேற்கொண்ட பின்னர்தான், வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும்.
அதில் சம்மாந்துறை பிரதேசம் தொடர்பான திருத்தங்களை மேற்கொண்டு உறுதிப்படுத்தியதற்குப் பின்னர்தான், வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும்-என்றார். (ஐ)

## மாணவருக்கு போதை பொருள் விற்பனை

### பெற்றோருக்கு எச்சரிக்கை

கண்டி,பெப்.6
கண்டி மாவட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.
எனவே, பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.
தற்போது, பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருவதால், மாணவர்களுக்கு போதைப் பொருள்களை விற்பனை செய்யும் கும்பல், இலகுவாக பாடசாலை வளாகத்துக்குள் நுழைந்து விடுகின்றனர்.
கட்டுகஸ்தோட்டை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், பிரதான பாடசாலைக்கு அருகில் வைத்து, கேரள கஞ்சாவுடன் பழைய மாணவர் ஒருவரை அண்மையில் கைது செய்திருந்த பொலிஸார், அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளிலேயே மேற்படி விடயத்தைக் கண்டறிந்துள்ளனர்.
எனவே, விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் சந்தர்ப்பங்களில், தமது பிள்ளைகளைக் குறித்து பெற்றோர்கள் அவதானமாக இருக்குமாறு, பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# அமைச்சர்கள் இருவரை பதவி நீக்க அழுத்தம்

கொழும்பு,பெப்.6
ஊழல் குற்றச்சாட்டை எதிர்நோக்கியிருக்கும் அரசின் இரு அமைச்சர்களை அந்தப் பதவிகளில் இருந்து உடனடியாக நீக்குமாறு சில அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
மக்களுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய இரு பிரதான அமைச்சுப் பொறுப்புகளை வகிக்கும் இவர்கள், தமது அமைச்சுக்களில் பெரியளவில் நிதி மோசடிகளைச் செய்துள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளது.
இந்த அமைச்சர்களின் செயற்பாடுகள் அரசுக்கு கெட்ட பெயரை ஏற்படுத்தும் எனவும், அரசையும், மக்களையும் அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் வகையில் இவர்கள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை நிறுத்த அவர்களை பதவிகளில் இருந்து நீக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
அடுத்த சில மாதங்களில் அமைச்சரவையில் முழுமையான மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன. அதற்கு முன்னர் மேற்படி இரு அமைச்சர்களின் அமைச்சுப் பதவிகளை மாற்ற வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

**முன்பள்ளி ஆசிரியர் தேவை**
கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற கொக்குவில் இந்து முன்பள்ளிக்கு முன்பள்ளி டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவு திகதி 10.02.2017 ஆகும். விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி. கொக்குவில் இந்து முன்பள்ளி, கொக்குவில் மத்திய சனசமூக நிலையம், கே.கே.எஸ் வீதி, கொக்குவில்.
செயலாளர்.

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு**
மலேசியா
01. சுப்பர் மார்க்கட் (10 ஆண்கள்) RM 1300 SR 44000 + OT +Total 78,000 தங்குமிட வசதி. மருத்துவ வசதிகள் உண்டு.
சவுதி
02. பால் கம்பனி (அல்மராய் கம்பனி) 20 ஆண்கள் RL 1100 SR 44000 + OT+ Total 70,000 உணவு தங்குமிட வசதிகள், மருத்துவ வசதிகள் உண்டு.
சவுதி
01. ஹோட்டல் 10 ஆண்கள் RL 1300 SR 52000 + OT +Total 88.000 உணவு தங்குமிட வசதிகள், மருத்துவ வசதிகள் உண்டு.
02. ஹோட்டல் (கிளீனர்ஸ்) கட்டார் 40 ஆண்கள் RL 1000 SR 40000 + OT +Total 64,000 and Tips உணவு, தங்குமிட வசதிகள், மருத்துவ வசதிகள் உண்டு.
Tel No: 077 044 7386/ 077 889 8752
E - mail: asianlanka27@gmail.com
New Gulf Lankan Man Power
136, Dam si.co:12

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

கொழும்பு BMICH இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் மாணி பட்டத்தினைப் பெற்ற எமது சக ஆசிரியர்
திரு.சின்னத்தம்பி திருச்செல்வம்
அவர்களை மேலும் பல பட்டங்கள் பதவிகள் பெற்று உயர்வடைய அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:-
யா/தனங்கிளப்பு அ.த.க.பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள்.

**அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்**

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைக்கும் எமது அதிபர்
திரு.சிவசாமி நல்லகுமார்
அவர்கள் 31.01.2017 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்
கல்விமாணி (BED)
பட்டத்தினைப் பெற்றுக் கொண்டமையையிட்டு அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்
யா/ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க.பாடசாலை.

**வீடு காணி விற்பனைக்கு**
கோண்டாவில் சந்திக்கு அண்மையில் 3 பரப்பில் அமைந்த வீடும், 4 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
076 697 2287

**தவறிவிட்டது**
02.02.2017 வியாழக்கிழமை அன்று சியாமள ஜெனனி சிவகணேச குருக்கள் என்பவருடைய 946590193V என்கின்ற அடையாள அட்டையும் Atm card, பேஸ் என்பனவும் காணவில்லை இதனைக் கண்டெடுத்தவர்கள் Ministry of Education இல் கொண்டு வந்து ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
076 397 9681

**தவறிவிட்டது**
துரைராஜா சதீஸ்குமார் என்பவரின் தேசிய அடையாள அட்டை (743010574V) மற்றும் UK சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் கந்தர்மடச் சந்திக்கும் வேம்படிச்சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்
077 476 6927

**ஆங்கில வகுப்புக்கள்**
தரம் 6 - 11 வரையான மாணவர்களுக்கு தனியாகவோ, குழுவாகவோ பிரபல பாடசாலை ஆசிரியரால் கற்பிக்கப்படும்.
தொடர்பு : 071 884 5261

**ICT, GIT வகுப்புக்கள்**
தரம் 10, 11 மாணவர்களுக்கு ICT வகுப்புக்களும் A/L மாணவர்களுக்கு GIT மற்றும் ICT வகுப்புக்களும் தனியாகவோ குழுவாகவோ கற்பிக்கப்படும்.
தொடர்பு : 071 238 7372

**Biosystems Technology**
2019, 2018 A/L - Bio Tec வகுப்புக்கள் தனியாகவோ குழுவாகவோ பிரபல ஆசிரியரால் கற்பிக்கப்படும். 2017 A/L - Paper Class துரித மீட்டல் அலகுரீதியாகவும் கற்பிக்கப்படுகின்றது.
T.Kumaran (B.Sc.Agri)
தொடர்பு : 077 178 2551

## இலங்கை–சீனா வர்த்தக ஒப்பந்தம் இவ்வருடத்துக்குள்

*சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் எதிர்பார்ப்பு*

கொழும்பு,பெப்.6
இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை இந்த வருடத்துக் குள் மேற்கொள்வதற்கு எதிர் பார்க்கிறோம். இதனூடாக இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையிலான 65 வருடங்களுக்கும் அதிகமான உறவை மேலும் வலுப் படுத்திக் கொள்ளமுடியும்.
இவ்வாறு சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கருணாசேன கொடி துவக்கு தெரிவித்தார். சீனாவின் பீஜிங்நகரில்உள்ளஇலங்கை தூதரகத் தில் இடம்பெற்ற சுதந்திரதின நிகழ்வின் பின்னர் பத்திரிகையாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
எதிர்வரும் மே மாதம் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்கான பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். சீனாவில் இடம்பெற உள்ள மாநாடொன்றில் கலந்து கொள்வதே அவரின் இந்தப் பயணத்தின் நோக்கமாகும் என்றும் அவர் கூறினார்.
அண்மையில் அம்பாந் தோட்டையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் செய்தியாளர் கேள்வி எழுப்பிய போது, அது எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு சிலரின் செயற்பாடு. அதனூடாக சீனா மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவில் எவ்விதத்திலும் பாதிப்பு ஏற்படாது என இலங்கைத் தூதுவர் தெரிவித்தார். (ஐ)

## மகிந்தவின் குடியுரிமை நீக்கப்படாது

கொழும்பு,பெப்.6
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் குடியுரிமையை நீக்குவதற்கு அரசு எந்தவித தீர்மானத்தையும் எடுக்கவில்லை. நாட்டில் நீதிமன்றக் கட்டமைப்பு சுயாதீனமான அடிப்படையில் செயற்பட்டு வருகின்றது.
இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் குடியுரிமையை நீக்குவதற்கு அரசு முயற்சிப்பதாகக் கூறப்பட்டு வரும் பரப்புரைகளில் எந்தவித உண்மையோ, அடிப்படையோ கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன உள்ளிட்ட சிலர் மகிந்தவின் குடியுரிமையை நீக்குவதற்கு அரசு சதித்திட்டம் தீட்டி வருவதாக கருத்து வெளியிட்டு வருகின்றனர். (ஐ)



### படுகொலை செய்யப்பட்ட, காணாமற்போன

# ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்

### மட்டக்களப்பில் நேற்று கவனவீர்ப்பு

களுவாஞ்சிக்குடி, பெப்.6
படுகொலை செய்யப்பட்ட, காணாமற்போன ஊடகவியலாளர்களுக்கு மற்றும் நீதி கோரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் 11 ஆவது ஆண்டு நினைவஞ்சலி நேற்றுக்காலை மட்டக்களப்பு நகர மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் இடம்பெற்றது.
கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.
படுகொலை செய்யப்பட்ட, காணாமற்போன ஊடகவியலாளர்களின் ஞாபகப்படுத்தல் மற்றும் விசாரணைகளுக்கான உந்துதல்களைக் கொடுக்கும் கவனவீர்ப்புப் போராட்டமும் இதன்போது நடத்தப் பட்டது.
இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், வியாழேந்திரன் மற்றும் மாகாண அமைச்சர் கி.துரைராஜசிங்கம் உட்படப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.
மட்டக்களப்பு – குருமண்வெளியில் பிறந்த சு.சுகிர்தராஜன் தனது தொழில் நிமித்தமாக திருமலையில் தங்கியிருந்த நேரத்தில் 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி இனம்தெரியாத நபர்களால் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.
உதயன்–சுடர்ஒளி பத்திரிகைகளின் திருகோணமலை நிருபராகக் கடமையாற்றினார்.
“திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை ஊடகவியலாளர் சுகிர்தராஜன் உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியிருந்தார். இதன் காரணமாகவே அவர் குறிவைக்கப்பட்டிருந்தார். அன்று இருந்த பொலிஸ் அதிகாரிகள் குறித்த ஐந்து மாண வர்களின் இறப்புக்கு கைக்குண்டுத் தாக்குதலே காரணம் எனக்கூறி விசாரணையை திசை திருப்ப முயற்சித்தனர். ஊடகவியலாளர் சுகிர்தராஜன் மிகவும் துணிச்சலுடன் செயற்பட்டு சுட்டு கொல்லப்பட்ட மாணவர்களின் சூட்டுக்காயங்களை நுட்பமாக படமெடுத்து, குறித்த மாணவர்கள் தலையில் துப்பாக்கியால் சுடப்பட்டே இறந்துள்ளனர் என்பதையும், அவர்களின் தலையில் உள்ள காயங்கள் கைக்குண்டு தாக்குதலால் ஏற்பட்டவை அல்ல என்றும், துப்பாக்கி குண்டுகளால் ஏற்படுத்தப்பட்டவை என்பதையும் அவர் வெளிக்காட்டியிருந்தார்.
சுகிர்தராஜனின் குறித்த செய்தி அரசுக்கு பன்னாட்டு அளவில் பெரிய அழுத்தத்தைக் கொடுத்ததுடன், அது ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக்கும் உள்வாங்கப்பட்டிருந்தது.
இந்தச் செய்தியே அன்று சுகிர்தராஜன் சுட்டுக்கொல்லப்படக் காரணமாக அமைந்திருந்தது” என்று நிகழ்வில் தெரிவிக்கப்பட்டது..
(ஐ-ய)

## தேசிய கணக்காய்வு சட்டத்தில் திருத்தங்கள்

கொழும்பு,பெப்.6
தேசிய தணக்காய்வு சட்டத்தில் காணப்படும் 57 சரத்துக்களில் 49 சரத்துக்கள் திருத்தங்கள் செய்யப்படவுள்ளன.
இந்த உத்தேச சட்டத்திருத்தங்கள் உள்ளடங்கிய பிரதிகள் சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கும், கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்துக்கும் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.
உத்தேச சட்டம் தொடர்பில் ஆராய்வதற்கு அமைச்சர்களான சரத் அமுனுகம, ரவூப் ஹக்கீம் மற்றும் அனுர பிரியதர்சன யாப்பா ஆகியோர் அடங்கிய அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டு, 21 சரத்துகள் திருத்தி அமைக்கப்பட்டிருந்தன.
திருத்தி அமைக்கப்பட்ட உத்தேச கணக்காய்வுச் சட்டம்தலைமை அமைச்சரின் மூத்த ஆலோசகர் சரித ரத்வத்தே தலைமையிலான குழுவொன்றிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தக்குழு தேசிய கணக்காய்வு சட்டத்தின் 49 சரத்துக்களைதிருத்திஅமைத்துள்ளதாகவும் தெரிய வருகிறது. (ஐ)

## மகிந்த அணியின் அடுத்த கூட்டம் காலியில்

கொழும்பு,பெப்.6
பொது எதிரணியினால் ‘மாற்றத்தின் ஆரம்பம்’ என்ற தொனிப் பொருளில் பேரணிகளும், கூட்டங்களும் நடத்தப்பட்டுவருகின்றன.
இதற்கமைவாக அடுத்த கூட்டம் காலியில் நடத்தப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அலுத்கமகே தெரிவித்தார்.
காலி கூட்டத்தின் பின்னர் வேறு பல மாவட்டங்களிலும் இந்தக் கூட்டம் நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

### காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான விசாரணையில்

# அரசு தொடர்ந்தும் ஏமாற்றுகிறது

மட்டக்களப்பு,பெப்.6
காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பாக அரசு விசாரணை செய்து, அவர்களுக்கு என்ன நடந்தது என்ற விவரத்தைப் பெற்றுத்தருவர்கள் என்ற நம்பிக்கை இல்லை. தொடர்ந்தும் ஏமாற்றும் செயற்பாடுகளிலிலேயே அரசு ஈடுபட்டு வருகின்றது.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.
மட்டக்களப்பு – கிரான் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதி முதி யோர் இல்ல கட்டடத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரை யாற்றுகையிலேயே அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை, 1983ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் சுமார் 3 ஆயிரத்து 270 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவர்களை இலங்கைப் பாதுகாப்புத்தரப்பினர், இந்திய இராணு வம், அரச படையினருடன் இணைந்து செயற்பட்ட ஆயுதக் குழுக்கள் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டனர்.
பல ஆணைக் குழுக்களின் விசாரணைகளின் முன்னிலையில் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டன. அரச தரப்பினரால் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.
இலங்கை அரச படையினரும் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட ஆயுதக் குழுக்களும் 1983 ஆம் ஆண்டுதொடக்கம் 1987 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சுமார் ஆயிரத்து 552 பேரைக் காணாமல் ஆக்கியுள்ளனர்.
இந்திய இராணுவத்தினராலும் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட தமிழ் துணைக் குழுக் களாலும், 165 பேர் வரை காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.
இந்திய இராணுவம் நாட்டை விட்டுச் சென்றபின், 1990 ஆம் ஆண்டுமுதல் 2015 ஆம் ஆண்டு வரை யிலான காலப்பகுதியில், ஆயிரத்து 560 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.
இதேவேளை–கிழக்கு மாகாணம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து முழுமையாக மீட்கப்பட்ட பின்னர், 130 இற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் செங்கலடி கறுத்த பாலம், கிரான், வாகரை சோதனைச் சாவடிகளில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.
விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்களை யார் வெளிநாடுகளுக்கு அனுப்பியது? இறந்திருக்கலாம் என்று கூறுவதாயின் யார் இவர்களைக் கொலை செய்தது? அவர்களது சடலங்கள் எங்கே? எனவே, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பாக அரசு தப்பித்துக்கொள்ளும் வகையில் பதிலளிக்க கூடாது– என்றார். (ஐ)

# சிசு இறப்பைக் குறைக்கும் நோக்கில் புதிய சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், பெப்.6

சிசு இறப்பு வீதத்தைக் குறைக்கும் நோக்கில் கர்ப்பிணிகளை விடுதிகளில் சேர்ப்பது தொடர்பான புதிய சுற்றறிக்கை சுகாதார சேவைகள் நாயகத்தால் சகல சுகாதார நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

காலம் முந்திய பிரசவ சிசுக்களின் சுகாதார நிலமைகளை மேம்படுத்தல், பிரசவத்துக்குச் சற்றுமுன்னரான மற்றும் பிரசவத்தின் போது தரமான பராமரிப்பை உறுதிப்படுத்தல், பிரசவத்தின்போது கௌரவமான பராமரிப்பை உறுதிப்படுத்தல் போன்றவை அதிகமாக எதிர்பார்க்கப்படுகின்றன என்று சுற்ற றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கர்ப்பகாலம் 24 வாரங்களுக்கு முன்னரெனில் பிரசவ அறிகுறிகளுடன் வரும் கர்ப்பிணிகளை நேரடியாக மகப்பேற்று விடுதிக்குச் சேர்த்தல்.

கர்ப்ப காலம் 28 வாரங்களுக்கு மேல் வேறு நோய்களுடன் கர்ப்பிணிகள் சேர்க்கப்படும்போது பெண் நோயியல் விடுதிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கர்ப்பகாலம் 24 வாரங்களுக்கு உட்பட்டது எனில் மகப்பேற்று விடுதியில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந-9)

# “மசாஜ்” நிலையத்தை மூடுமாறு அறிவுறுத்து

வவுனியா, பெப்.6

வவுனியா தேக்கவத்தைப் பகுதியிலுள்ள “மசாஜ்” நிலையத்தை உடனடியாக மூட வேண்டும் என வவுனியா நகர சபை செயலாளர் ஆர். தயாபரன் நேற்று அறிவுறுத்தல் வழங்கினார்.

“மசாஜ்” நிலையம் தொடர்பாக அவரால் ஒட்டப்பட்ட கடிதத்தில் இந்த அறிவுறுத்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

“மசாஜ் நிலையத்தை உடனடியாக மூட வேண்டும். உரிய அனுமதி பெற்றிருப்பின் இன்று 6 ஆம் திகதி மு.ப. 9 மணிக்கு நகரசபைக்கு சமர்ப்பிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக 1987ஆம் ஆண்டு நகரசபை கட்டளைச்சட்டம் அத்தியாயம் 255க்கு அமைவாக நீதிமன்றத்தில் வழங்குத்தொடரப்படும்.” - என மசாஜ் நிலைய கட்டடத்தில் நகரசபை செயலாளரால் கடிதம் ஒட்டப்பட்டுள்ளது. “வவுனியா தேக்கவத்தைப்பகுதியிலுள்ள மசாஜ் நிலையம், கலாச்சார சீரழிவுகளை ஏற்படுத்தி வருகின்றது. எமது பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. வீதியால் சென்று வரும் மாணவர்கள், பொதுமக்களுக்கு பெரும் அசௌகரியமாக இருக்கின்றது. மசாஜ் நிலையம் என தெரிவித்துக் கொண்டு கலாச்சாரத்தைச் சீரழிக்கும் சம்பவங்கள் பல இடம்பெற்றுகின்றன” - என்று தெரிவித்த பிரதேச மக்கள் நேற்றுமுன்தினம் கறுப்புக் கொடி கட்டிப் போராட்டம் நடத்தினர். (ந-21)

# மக்கள் பணியும் செய்ய வேண்டும் ஆலயங்கள்

## வடக்கு முதலமைச்சர் வேண்டுகோள்

கிளிநொச்சி, பெப்.6

ஆலயங்கள், வணக்கத்தலங்கள் தமக்குக் கிடைக்கும் நிதியைச் சேமித்து வைக்கின்றன. அந்தப் பணத்தால் மக்களுக்கும் நன்மைகள் ஏதும் கிடைப்பதில்லை. எப்போதோ ஏற்படும் தேவைக்காக சுற்றியுள்ள மக்களின் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன. இது ஒரு தகாத செயல். இவ்வாறு வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

சத்தியசாயிபாபா அமைப்பினரால் பூநகரி வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட மக்களுக்கும், வைத்தியசாலைக்குமான குடிதண்ணீர் திட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப் பட்டது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் பூநகரிப் பிரதேசம் குடிதண்ணீர் தட்டுபாடு கொண்ட பிரதேசமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசத்துக்கு இரணைமடுக் குளத்தில் இருந்து தண்ணீர் பெறும் திட்டம் முன்பு தயாரிக்கப்பட்டது. பல காரணங்களால் அந்தத் திட்டம் முழுமையடையவில்லை. பூநகரிக்கான குடிதண்ணீர் விநியோகம் தற்காலிகமாகத் தடைப்பட்டிருந்தது. மக்களின் தேவையை கொழும்பில் அமைந்திருக்கும் ஸ்ரீ சத்திய சாயி பாபா மத்திய நிலையம், சத்யசாயிபாபா அறக் கட்டளையகம், சீரடி சாயி பாபா மத்திய நிலையம் என்பன உணர்ந்து செயற்பட்டுள்ளன.

மக்களின் குடிதண்ணீர்த் தேவையை நிறைவு செய்வதற்காக சுமார் 6.5 மில்லியன் ரூபா செலவில் குடிதண்ணீர் சுத்திகரிப்புத்தாங்கி ஒன்றை அமைக்க முன்வந்தமை பாராட்டுக்குரியது. இறைபணி என்பது வெறுமனே ஆலயங்களை அமைப்பதோ, தியான மண்டபங்கள் அமைப்பதோ அல்ல. சமய நிகழ்வுகளுடன் பொதுமக்கள் பணியிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதே இறைபணியாகும். கடும் போரால் வடக்கு மாகாணம் முழுமையாக நிர்மூலமாக்கப்பட்டது. மக்கள் பல்வேறு தேவைகளை உடையவர்களாக உள்ளனர். சொத்துக்கள், வீடு, பொருள், பண்டம், வாகனங்கள், வாழ்வாதாரத் தொழில் முயற்சிகள் என அனைத்தையும் அவர்கள் இழந்துள்ளனர். அவர்களை எவ்வாறு கரையேற்றுவது என்று திக்குமுக்காடிக் கொண்டிருக்கும் வடக்கு மாகாண சபைக்கு இவ்வாறான உதவிகள், புலம் பெயர்ந்த மக்களின் உதவிகள் வலுவூட்டுகின்றன. நம்பிக்கையளிக்கின்றன.

கடந்த வருடங்களில் வட பகுதியில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் பாடசாலை மாணவ, மாணவியர்களுக்கு கல்விசார் உதவிகளையும், விவசாய நடவடிக்கைகளுக்கான உதவிகளையும் வழங்க வேண்டும் என்று கேட்டபோது கொழும்பு மயூராபதி அம்மன் ஆலய நலன்புரிசங்கம், மற்றும் ஜெயச்சந்திரன் நிறுவனத்தினர் இணைந்து கொண்டு பல்வேறு பெறுமதி மிக்க உதவிப் பொருள்களை வழங்கினார்கள். பசித்தவனிடம் ஆத்மீகம் பற்றிப் பேசுவதில் பயனில்லை என்றார் சுவாமி விவேகானந்தர். எம்மைச் சுற்றி வறுமையும், இயலாமையும் தாண்டவமாடும் போது நாம் ஆத்மீகவாதிகள் என்று ஒதுங்கி இருப்பதும் உசிதமாகாது. ஆத்மீகம் என்பது அன்பு வழியது. அந்த அன்பை நடைமுறையில் நாங்கள் வெளிப்படுத்தத் தானமே சிறந்த வழி. சோழர் காலத்தில் ஆலயங்கள் கலைக் கூடங்களாகவும், கல்விக் கூடங்களாகவும் செயற்பட்டன. சமய நிறுவனங்கள், கோயில்கள் போன்றவை தமது கட்டடங்களைப் புதுப்பித்து சுத்தமாக, சுகாதாரத்துடன் அவற்றைப் பராமரிக்கும் அதே வேளையில் மக்கள் பணியில் ஈடுபடவும் முன்வர வேண்டும்.- என்றார். (ந-21)

# 14 வயதுக்குட்ட சிறுவருக்கு இனி குழந்தைகள் விடுதியில் சிகிச்சை

யாழ்ப்பாணம், பெப்.6

அரச வைத்தியசாலைகளில் 12 வயது வரையான சிறார்களுக்கே குழந்தைகள் விடுதியில் சிகிச்சை வழங்கப்படுகின்றது. அந்த வயதெல்லை 14 ஆக அதிகரிக்கப்படவுள்ளது. இவ்வாறு சுகாதார சேவைகள் போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் குழந்தைப் பருவ பராமரிப்புக்கான வயதெல்லை 14 வருடத்துக்கும் 18 வருடத்துக்கும் இடைப்பட்டதாக வேறுபடும். நிலைமாற்றத்துக்கான சரியான காலப்பகுதி வளர்ச்சி முற்றாக நிறைவுற்ற அல்லது பூப்பெய்தலின் பின்னராகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

விரைவான உடல் மற்றும் உள வளர்ச்சி 17 வயது அடையும்போது எய்தப்படும் எனிலும் உயர்ந்த மூளை வளர்ச்சி இருபதுகளின் கால நடுப்பகுதிகளிலேயே ஏற்படுகிறது. இந்த நிலை மாற்றத்தின்போது இளவயதான நபர் முதியவர்களின் சிகிச்சை நிலையங்களில் பங்கு கொள்ளக்கூடிய அளவுக்கு தங்களுடைய நோய் நிலமையை திறமையாகக் கையாள்வதற்குத் தேவையான கல்வியையும் பெற்றோர்கள் மற்றும் ஊழியர்களின் உதவியின்றி விருத்தி செய்யக்கூடியவராக இருக்கவேண்டும்.

இலங்கையிலுள்ள சூழ்நிலையில் 12 வயதில் குழந்தைப் பராமரிப்பிலிருந்து வயது வந்த நிலையை அடைகின்றனர். அவர்கள் 12 வயதின் பின்னர் வயது வந்தோருக்கான சிகிச்சை நிலையங்கள் அல்லது விடுதிகளில் கூடியளவிலான வயது வந்தோருடன் கவனிக்கப்படுகின்றனர்.

அது குழந்தைக்கு ஓர் அசௌகரியமான சூழ்நிலையை ஏற்படுத்தும். அவர்கள் உடல் மற்றும் உள ரீதியாக வயதானவர்களுக்கான கவனிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாகவில்லை. 10 தொடக்கம் 14 வயதுக்கு இடைப்பட்ட ஆரம்பகால யௌவனப் பருவத்தில் பூப்பெய்தல் மாற்றங்கள் ஏற்படுகின்றபோதிலும் இனப் பெருக்க மற்றும் பாலியல் தொடர்பாக பிரச்சினைகள் கூடுதலாக 15 தொடக்கம் 19 வயதுக்கு இடைப்பட்ட யௌவனப் பருவத்தின் இடைப்பட்ட மற்றும் பிந்திய காலத்திலேயே அவதானிக்கப்படுகிறது.

உலக சுகாதார நிறுவனம் 10 தொடக்கம் 19 வயதுள்ள வகுப்பினரை யௌவனப் பராயத்தினராக வரையறுத்துள்ளது. குழந்தைப் பராயத்தினரின் வயதுக்கு பின்னரும் முதுமை நிலை வயதினருக்கு முன்னருமான இந்தக் காலம் விரைவான வளர்ச்சிக்கும் விருத்திக்குமான காலமாகும். இந்தக் காலமானது தனித்துவமான உயிரியல் ரீதியான மற்றும் உளவியல் சமூக மாற்றத்துக்குமான காலம். இது தொடரான நிலை மாற்றம் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு இட்டுச் செல்லும்.

சரியான நேர நிலை மாற்றத்தின் போது குழந்தை நிலையிலிருந்து முதுமை நிலையை நோக்கிய சுகாதாரப் பராமரிப்பு முக்கியமானது.

விஞ்ஞான ரீதியாகவும், நேரத்தின் தேவையை அடிப்படையாகக் கொண்டும் பராமரிப்பு வழங்குவதற்கான ஏற்பாட்டியல் சாத்தியக்கூறைக் கருத்திற்கொண்டு குழந்தை மருத்துவ பராமரிப்பை 14 வயது வரை உயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆறு மாத கால நடைமுறைப்படுத்தலின் பின்பு தொடர்பான பங்குதாரர்களின் கருத்துக்களுடன் குழந்தை மருத்துவப் பராமரிப்பை 16 வயது வரை உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயப்படும். குழந்தை மருத்துவ பராமரிப்புக்கான வயதெல்லை 2016 நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் 14 வயது வரைக்கும் உயர்த்தப்பட்டுள்ளது. யௌவனப் பருவத்தினருக்கு இந்த வயதை அடிப்படையாகக் கொண்டு பராமரிப்பை வழங்குவதற்கு தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளவும்.- என்று அவர் அனைத்து சுகாதார நிறுவனங்களுக்கும் அறிவித்துள்ளார். (ந-9)

# வவு. புதிய பேருந்து நிலையத்தில் தனியார் பேருந்துகள் சேவையில்



வவுனியா, பெப். 6

வவுனியாவில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் இருந்து இணைந்த நேர அட்டவணை தயாரிக்கும் வரை எந்த விதமான சேவைகளும் இடம் பெற மாட்டாது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் நேற்று வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் சேவைகளை நடத்தினர்.

பொதுமக்களின் பணத்தில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையம் மூடுவதற்காகவா திறக்கப்பட்டது?. தனியார் பேருந்து சேவைகளை புதிய பேருந்து நிலையத்திலிருந்தே மேற்கொள்ளவுள்ளோம். இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று தனியார் பேருந்துச் சங்கத்தில் இடம்பெறவுள்ளது. அதன் பின்னர் நிலமைகள் அறியத்தரப்படும்.- என்று தனியார் பேருந்து சங்கத்தினர் தெரிவித்தனர்.

வவுனியாவில் 195 மில்லியன் ரூபா செலவில் இலங்கையில் நவீன வசதிகளுடன் கூடிய வவுனியா புதிய பேருந்து நிலையம் கடந்த மாதம் 16 ஆம் திகதி கொழும்பு போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவால் மக்களின் பாவனைக்குத் திறக்கப்பட்டது.

அன்றுமுதல் இ.போ.ச மற்றும் தனியார் பேருந்து சாரதிகளிடையே முறுகல் நிலை ஏற் பட்டது. கடந்த செவ்வாய்க் கிழமை தனியார் பேருந்து சாரதி யால் இ.போ.ச பேருந்து சாரதி தாக்கப்பட்டார். சாரதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இ.போ.ச சாலை ஊழியர்கள் பழைய பேருந்து நிலையத்தில் சேவைகள் மேற்கொள்ளத் தமக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர். மறுநாள் வியாழக்கிழமை வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து இ.போ.ச. சாலை பணியாளர்களும் பணிப் புறக்கணிப்பு நடத்தினர். மறுநாள் போராட்டம் உணவு ஒறுப்பு போராட்டமாக மாற்றமடைந்து.

நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் நீண்ட பேச்சு இடம்பெற்றது. இணைந்த நேர அட்டவணை தயாரிக்கும் வரை புதிய பேருந்து நிலையத்தில் எந்த விதமான சேவைகளும் நடத்தப்பட மாட்டாது. அதுவரை பழைய பேருந்து நிலையத்தில் தனியார் இ.போ.ச. பேருந்துகள் சேவைகளை மேற்கொள்ள முடியும் என்று முடிவு செய்யப்பட்டது. ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் கைச்சாத்திட்டனர்.

நேற்றுக் காலை இ.போ.ச சாலை பேருந்துகள் தமது சேவை களை பழைமையான மத்திய பேருந்து நிலையத்தில் மேற்கொண்டன. தனியார் பேருந்துகள் தமது சேவைகளை புதிய பேருந்து நிலையத்தில் மேற்கொண்டனர். (ந-21)



# பிலக்குடியிருப்பு போராட்டம் நேற்றும் தொடர்ந்தது

## யாழ். பல்கலை. வணிகத்துறை மாணவர்களும் இணைந்தனர்

முல்லைத்தீவு, பெப். 6

இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்க வேண்டும் என்று தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பிலக்குடியிருப்பு மக்களுடன் நேற்று யாழ். பல்கலைக் கழக வணிகத்துறை மாணவர்களும் இணைந்து கொண்டனர்.

மக்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்க, பிலக்குடியிப்பு ஆரம்ப சுகாதார நிலையத்தில் குடியிருக்கும் இராணுவத்தினர் தங்கள் முகாமை அழகுபடுத்தும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

முல்லைத்தீவு கேப்பாபிலவு, பிலக்குடியிருப்பில் இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி அந்தப் பகுதியை சேர்ந்த மக்கள் நேற்று ஆறாவது நாளாக தொடர் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களின் போராட்டுக்கு பல தரப்பினரும் ஆதரவு வழங்குகின்றனர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் பிலக்குடியிருப்பில் தொடர் போராட்டம் நடத்தும் மக்களைச் சந்தித்த வணிக பீட மாணவர்கள், "பொதுமக்களின் வாழ்வியல் பிரதேசங்களை இராணுவம் மக்களின் கைகளில் கொடுக்கும் வரைக்கும் போராட்டதுக்கு வலுச்சேர்க்கும் வகையில் மக்களுடன் இணைந்திருக்கின்றோம். அதற்கு வலுச்சேர்க்கும் வகையில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன"- என்று தெரிவித்தனர்.

"பிலக்குடியிருப்பு பகுதிகளில் உள்ள எமது காணிகளை விட்டு இராணுவம் வெளியேறவேண்டும். ஆறாவது நாளாக வெயிலிலும், பனியிலும் தொடர்ந்து இந்த இடத்தில் இருந்து (கேப்பாபிலவு இராணுவ முகாம் முன்பாக) போராடி வருகின்றோம். எங்கள் காணிகள் எங்களுக்கு கிடைக்கும் வரைக்கும் எங்கள் போராட்டம் தொடரும். எங்களுடைய ஒட்டுமொத்த காணிகளும் விடுவிக்கும் வரைக்கும் நாம் அனைவரும் இந்த இடத்தில் இருந்து ஒற்றமையாகப் போராடுவதாக தீர்மானித்துள்ளோம்."- என்று கேப்பாபிலவு கிராம அபிவிருத்தி சங்கச் தலைவர் பரமேஸ்வரன் தெரிவித்தார்.

"தொடர்போராட்டத்தில் நாம் ஈடுபடுவோம். எமது பிள்ளைகளின் கல்வி பாதிப்பு அடையக் கூடாது. எமது பிள்ளைகள் (மாணவர்கள்) நாளை (இன்றைய தினம்) பாடசாலை செல்வார்கள். நாங்கள் தொடர்ந்து போராடுவோம்."- என்று மக்கள் தெரிவித்தனர்.

நேற்று கேப்பாபிலவுக்குச் சேன்ற வடமாகாண சுகாதார அமைச்சர். ப. சத்தியலிங்கம் மக்களுடன் கலந்துரையாடினார். (ற-21,7)

# தீர்வு வழங்காவிடில் பிரதேச செயலகத்தை இயங்க விடோம்

## காணிக்காக போராடும் புதுக்குடியிருப்பு மக்கள் தெரிவிப்பு



முல்லைத்தீவு பெப். 6

எமது காணிக்களுக்கான தீர்வுகளை வழங்காது விட்டால் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் இரு வாயில் கதவுகளையும் அடைத்து இன்று போராட்டத்தைத் தொடர்வோம். எமது போராட்டத்துக்கு அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு அருகில் பொது மக்களுக்குச் சொந்தமான 19 ஏக்கர் காணியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. காணிகளை விடுவிக்க வேண்டும் என்று காணி உரிமையாளர்கள் தொடர் போராட்டம் நடத்து கின்றனர். நேற்று 4ஆவது நாளாகவும் போராட்டம் தொடர்ந்தது.

அந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா, வடமாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர் புவனேஸ்வரன் ஆகியோரும் இணைந்து கொண்டனர். மக்களுடன் கலந்துரையாடினர்.

"எங்கள் காணிப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் வரை நாளை முதல் (இன்று) புதுக்குடியிருப்பு பிரதேச செலயகத்தை இயங்க விடாது இரண்டுவாயில்களையும் அடைத்து, யாரையும் உள்ளே அனுமதிக்காது போராட்டத்தை தொடர முடிவு செய்துள்ளோம். மெனிக்பாம் முகாமில் இருந்து மீள்குடியமர்வுக்காக ஏற்றிவரப்பட்ட நாங்கள் புதுக்குடியிருப்பு கைவேலி பாடசாலையில் இறக்கிவிடப்பட்டோம். வீடு செல்லலாம் என்று மகிழ்ச்சியுடன் இருந்த போது எங்களுடைய காணிகள் எல்லாம் புலிகளின் காணிகள் என்று கூறி அவற்றை விடுவிக்கமாட்டோம் என்றார்கள். அன்றில் இருந்து இன்று வரை நாளை, நாளை என 8 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இனியும் நாங்கள் பொறுமையாக இருக்க முடியாது. எங்கள் காணிகளை விட்டு இராணுவம் வெளியே செல்லும் வரைக்கும் நாங்கள் இந்த இடத்தை விட்டு நகர மாட்டோம். முகாமில் இருந்து எங்கள் கிராமத்துக்கு வரும்போது எங்கள் அகதி வாழ்க்கைக்கு ஒரு முடிவு வருகின்றது என நினைத்தோம். எட்டு வருடங்களாக சொந்த ஊரிலே அகதியாகவே வாழ்கின்றோம்.

எங்கள் காணி எங்களுக்கு கிடைக்கும் வரைக்கும் நாங்கள் இங்கே கிடந்து சாவோம். இராணுவ முகாமை அகற்றுவதற்கு புதுக்குடியிருப்பு மக்கள் ஒன்றுபடுங்கள். எங்களுடைய இந்தப் போராட்டதுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்.- என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் தெரிவித்தனர்.

(ற-21,7)

# வவுனியா புதிய பேருந்து நிலையத்தை பொருளாதார மையமாக்க யோசனை

வவுனியா, பெப்.6

வவுனியாவில் தனியார் பேருந்து சேவையாளர்களுக்கும், இலங்கை போக்குவரத்துச் சபையினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் வவுனியா மாவட்டச் செயலாளருக்கு மூன்று யோசனைகளை முன் வைத்தார்.

இரு தரப்பினரும் ஒரே இடத்தில் இருந்து சேவையாற்ற முடியாது என்பது தெளிவாகியுள்ளது. வவுனியா நகரில் பழைய இடத்தில் இருந்தே இலங்கை போக்குவரத்துச் சபையினரை சேவையில் ஈடுபட அனுமதிக்க வேண்டும். பொலிஸ் நிலையத்துக்கு எதிரில் உள்ள காணியொன்றில் தனியார் பேருந்துகளுக்கான நிலையத்தை அமைத்து புதிதாக யாழ். வீதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையக் கட்டடத் தொகுதியில் வவுனியாவுக்கான பொருளாதார வலயமாகச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். மாவட்டச் செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

அதில் உள்ளதாவது:

இலங்கை போக்குவரத்துச் சபையினர் மேற்கொண்டிருந்த உணவு ஒறுப்பு போராட்டம் தொடர்பிலான பிரச்சினைக்கு நீண்டகால அல்லது நிரந்தர தீர்வுக்கான யோசனைகளை இந்தப் பிரச்சினை தொடர்பான சந்திப்பில் தெரிவித்திருந்தேன். தங்களது மேலான உரிய உடன் நடவடிக்கைக்காக மீண்டும் அவற்றை எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்கிறேன்.

தற்போது இருக்கின்ற நிலைமைகளின் அடிப்படையில் தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையினரை ஒரே தளத்தில் இருந்து சேவையில் ஈடுபடுத்துவது என்பது சாத்தியமற்ற ஒன்றாக காணப்படுகின்றது. இலங்கை போக்குவரத்துச் சபையினர் முன்னர் பயன்படுத்திய வவுனியா நகர சபையின் கட்டுப்பாட்டில் உள்ள பழைய பஸ் நிலையத்தை இலங்கை போக்குவரத்துச் சபையினருக்கு வழங்க வேண்டும். தனியார் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுபவர்களுக்கு வவுனியா நகரச சபையின் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் அங்காடி வியாபார நிலையம் காணப்படுகின்ற பகுதியை வழக்க வேண்டும். மதகுவைத்தகுளத்தில் (தேக்கவத்தையில்) 2 ஏக்கர் நிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார வலயத்தை தற்போது பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கூறிய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி நிரந்தரமான, நிலைத்து நிற்கக்கூடிய ஆக்கபூர்வமான உடனடி முடிவை மேற்கொள்ள வேண்டும் என்று தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்- என்றுள்ளது.

(ற-21)

கொடிய டெங்கு நோயை இல்லாது அழிப்போம்



குடிதண்ணீர்த் தேவைக்காகவோ அல்லது வேறு தேவைக்காகவோ நீரைச் சேமித்து வைக்கும் பாத்திரங்கள் தாங்கிகளை நுளம்புகள் முட்டை இடா வண்ணம் மூடி வைத்திருப்போம். கிழமைக்கு ஒருதடவை அவற்றின் உட்புறத்தை நன்றாகத் தேய்த்துக் கழுவி ஒட்டியுள்ள நுளம்பு முட்டைகளை அகற்றிடுவோம்.

"டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை இல்லாது செய்வோம்"

தகவல் - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - யாழ் .மாநகரசபை

# அடக்குமுறையை நோக்கி நகருகிறது கூட்டு அரசு

## பேராசிரியர் சுமணசிறி லியனகே குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.6
கூட்டு அரசு மற்றும் ஜனநாயகம் தொடர்பில் வாக்குறுதியளித்து பதவிக்கு வந்த அரசு அடக்குமுறையை நோக்கி அடிவைத்துக் கொண்டிருப்பதாக பேராசிரியர் சுமணசிறி லியனகே குற்றஞ்சாட்டினார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித் துள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசு பொதுமக்களைக் கவரும் வகையிலான வாக்குறுதிகளை அள்ளி வீசிப் பதவிக்கு வந்தது. அவற்றில் வரிச் சுமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கி, சமச்சீரான பொருளாதாரக் கொள்கையொன்றை அறிமுகப்படுத்தல், ஜனநாயகத்தை வலுப்படுத்தல், ஊழல் மற்றும் மோசடிகள் அற்ற நிர்வாகம் என்பன முக்கியமானவையாகும்.

கடந்த ஆட்சியில் சிறுபான்மை மக்கள் கொண்டிருந்த அதிருப்தியும், இந்த அரசைப் பதவிக்குக் கொண்டு வர பெருமளவில் உதவியது. ஆனாலும், மேற்குறித்த எந்தவொரு விடயத்திலும் இந்த அரசு முன்னைய அரசைவிட மாறுபட்டிருப்பதாகவோ, மேம்பட்ட நிலையை அடைந்துள்ளதாகவோ கூற முடியாது.

அதற்குப் பதில் முன்னைய அரசின் செயற்பாடுகளை விடவும் கூடுதலாக தற்போது நடைபெற்று வருகின்றன.

அரசுக்கு எதிராகக் கருத்துக்களை வெளியிடுவோர் மற்றும் கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டங்களில் ஈடுபடுவோரைப் பொலிஸாரைக் கொண்டு அடக்கி வைப்பதில் அரசு தீவிர ஆர்வம் காட்டுகின்றது.

இந்த அரசின் நண்பனாகச் செயற்படும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகமே இது தொடர்பில் அரசுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில் தொடர்ந்தும் அரசு ஜனநாயகத்துக்குப் பதில் அடக்குமுறைநோக்கிப் பயணித்துக் கொண்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

இது கூட்டு அரசு மற்றும் ஜனநாயகத்தை எதிர்பார்த்த மக்களுக்குப் பெரும்ஏமாற்றமாக அமையப் போகின்றது- என்றார். (ஐ)

# சர்ச்சைக்குரிய நண்பர்களுடன் மீண்டும் இணைந்தார் நாமல்

கொழும்பு,பெப்.6
நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச மீண்டும், அவரது சர்ச்சைக்குரிய நண்பர்கள் குழுவுடன் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த ஆட்சியின் போது அதிக குற்றச் செயல்களினால் முன்னாள் அரச தலைவரை மக்கள் வெறுப்பதற்குக் காரணமாக இருந்தவர் நாமல் ராஜபக்ச என மகிந்த ராஜபக்சவை நேசிக்கும் அவரது பெரும்பான்மை ஆதவாளர்கள் தெரிவித்திருந்தனர்.

நாமல் ராஜபக்ச தனது தந்தையின் அதிகாரத்தைப் பயன்படுத்தி மேற்கொண்ட தவறான செயற்பாடுகளே இதற்குக் காரணமாகும். நாமலினாலே மகிந்த தனது அதிகாரம் உட்பட அனைத்தையும் இழந்து விட்டார் எனவும் கூறப்படுகின்றது.

நாமல் ராஜபக்சவின் வாழ்க்கை இப்படி மாற்றமடைவதற்கு காரணமாக இருந்த நண்பர்களே, நாமலின் குற்றச்செயல்கள் தொடர்பில் தகவல் அறிந் துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி தோல்வியடைந்து வீட்டுக்குச் சென்ற மகிந்த ராஜபக்ச, நாமலின் நிலையை உயர்த் துவதற்கு பல முயற்சிகள் மேற்கொண்டுள்ள போதிலும், அவரது நண்பர்கள் அதற்கு இடமளிக்கவில்லை. அத்துடன் நாமல் மீண்டும் அதே குழுவுடன் இணைந்து செயற்பட ஆரம்பித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. மீண்டும் நாமலின் நிலைக்கு ஆபத்து ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளதாகக் குறித்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)



அரசால் காணி சுவீகரிப்பு

# தம்புள்ள வர்த்தகர்கள் உணவு ஒறுப்புப்போராட்டம்

கொழும்பு,பெப்.6
அபிவிருத்தி நட வடிக்கைகளுக்காக தம் புள்ள நகரில் உள்ள தனியார் காணிகள் அரசினால் சுவீகரிக்கப்பட்டு 36 ஆண் டுகள் கடந்துள்ள போதிலும், இதுவரை தமக்கு நியாயம் கிடைக்கவில்லை என்று கூறி தம்புள்ள வர்த்தகர்கள் உணவு ஒறுப்புப் போராட் டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமது பரம்பரை நிலங்களை அபிவிருத்தி செய்வதற்குத் தமக்கு இடமளிக்குமாறு கூறி வர்த்தகர்கள் சிலர் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அரசால் சுவீகரிக்கப்பட்ட பெரும்பாலான இடங்கள் வேறு நபர்களுக்கு வழங்கப்படுவதாகவும், இதன் காரணமாக தம்புள்ளவைப் பூர்வீகமாகக்கொண்டவர்களுக்கு அநீதி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நகர அபிவிருத்தி அதிகார சபை, பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அனைத்து அரச அதிகாரிகளுக்கும் 36 வருடங்களாக இது தொடர்பில் அறிவித்தும் பயனில்லை என்றும் வர்த்தகர்கள் குற்றஞ்சாட்டினர். (ஐ)

# பொலிஸாரின் சம்பளம் 40 வீதத்தால் அதிகரிப்பு

## பெப்ரவரி மாதம்முதல் நடைமுறைக்கு

கொழும்பு,பெப்.6
பொலிஸ் உத்தியோகத்தர்களின் 40 வீத சம்பள அதிகரிப்பு பெப்ரவரி மாதம் முதல் நடைமுறைக்கு வரும் என பொலிஸ் திணைக்களம் அறிவித் துள்ளது.

அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்களின் சம்பளம் 40 வீதத்தால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதில் நூற்றுக்கு 17 வீத சம்பள அதிகரிப்பு கடந்த வருடம் ஜனவரி மாதம் முதல் வழங்கப்பட்டு வந்துள்ளது.

ஏனைய 23 வீத சம்பள அதிகரிப்பை இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையில், அதனை பெப்ரவரி மாதம் முதல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மா தம் 31 ஆம் திகதிக்கான அடிப்படைச் சம்பளத் தில் நூற்றுக்கு 40 வீதமான அதிகரிப்பு, கொடுப்பனவு என்ற வகையில் அனைத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# மு.காவிலிருந்து பஷீர் இடைநிறுத்தம்

கொழும்பு,பெப்.6
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் பதவியிலிருந்து பஷீர் சேகுதாவூத் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

கட்சியின் தலைமையகம் தாருஸ்ஸலாமில் நேற்று முன்தினம் இரவு நடை பெற்ற உயர்பீடக் கூட்டத்தின் போது ஏகமனதாக இந்தத் தீர்மாணம் நிறைவேற்றப்பட்டதாக அக்கட்சி அறிவித்துள் ளது.

தவிசாளர் பதவியில் இருந்து கொண்டு கட்சியைப் பிளவுபடுத்தும் நோக்கில் செயற்பட்டுவரும் பஷீர் சேகுதாவூத்தை, அந்தப் ப தவி யிலிருந்து நீக்குமாறு கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் அனைவரும் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது, செயலாளர் நாயகம் ஹஸன் அலி, மூத்த துணைத் தலைவர் அப்துல் மஜீட் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் தங்களது கைகளை உயர்த்தி இதற்கு ஆதரவு தெரிவித்தனர் என்று தெரியவருகின்றது.

இதன்பின்னர் பஷீர் சேகுதாவூத்தைத் தவிசாளர் பதவியிலிருந்து மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தம் செய்வதாகக் கட்சியின் உயர்பீடம் ஏகமனதாகத் தீர்மானித்தது.

கட்சியைப் பிளவுபடுத்தம் நோக்கில் செயற்பட்டு வந்தமையினாலேயே, இந்தத் தீர்மா னம் நிறைவேற்றப் பட்டுள்ளதாகவும், இதற்காக பஷீர் சேகுதாவூத் மீது ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொண்ட பின்னர் மேலதிக நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சித் தகவல் மேலும் தெரி வித்தது.

இதேவேளை, உயர்பீடக் கூட்டத்துக்கு பஷீர் சேகுதாவூத் சமுகமளிக்கவில்லையெனத் தெரிய வருகின்றது. (ஐ)

15 அரச நிறுவனங்கள் தொடர்பான

# கோப் விசாரணை அறிக்கைகள் புதனன்று நாடாளுமன்றுக்கு

கொழும்பு,பெப்.6
15 அரச நிறுவனங்கள் தொடர்பில் கோப் குழுவால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கைகள் நாளை மறுதினம் நாடாளுமன்றில் சமர்பிக்கப்படும். இவ்வாறு கோப் குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீதி அபிவிருத்தி அதிகார சபை, துறைமுக அதிகார சபை, இலங்கை கிரிக்கெட் நிறுவனம், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, ரூபவாஹினி கூட்டுத்தாபனம் உள்ளிட்ட 15 அரச நிறுவனங்கள் தொடர்பான விசாரணை அறிக்கைகள் நாடாளுமன்றில் சமர்பிக்கப்படவுள்ளன.

இந்த நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி சம்பந்தமாக கோப் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணைகளின் பின்னர், இந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் 19 அரச நிறுவனங்கள் தொடர்பான கோப் குழு மேற்கொண்ட விசாரணைகளின் இடைக்கால அறிக்கை கடந்த ஓகஸ்ட் மாதம் நாடாளுமன்றுக்குச் சமர்பிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையினூடாக அரச நிறுவனங்கள் பலவற்றில் இடம்பெற்றுள்ள நிதி மோசடிகள் வெளிக்காட்டப்பட்டுள்ளதுடன், அதன் பிரதிகள் அரசதலைவர், தலைமை அமைச்சர் மற்றும் சட்டமா அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

தற்போதுவரை 33 அரச நிறுவனங்கள் தொடர்பில் கோப் குழுவினால் ஆரம்பவிசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன- என்றார். (ஐ)



# உரமானிய காப்புறுதி இழப்பீட்டுக்கு பதிவுகள்

முல்லைத்தீவு, பெப். 6

முல்லைத்தீவு பாண்டியன்குளம் கமநலசேவை நிலையத்தின் கீழ் 2016 - 2017ஆம் ஆண்டு காலபோக நெற்செய்கைக்கான உரமானிய காப்புறுதிக்கான இழப்பீடு வழங்குவதற்கான விண்ணப்பப்படிவங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

உரமானிய காப்புறுதி இழப்பீடுக்கானான பதிவுகளை மேற்கொள்ளும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அந்தத் திகதிகளின் அடிப்படையில் அந்தந்தப் பகுதி விவசாயிகள் கமநலசேவை நிலையத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று பாண்டியன்குள கமநலசேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

எதிர்வரும் 3ஆம் திகதி அம்பாள்புரம் ஒட்டறுத்தகுளம் பகுதிகளுக்கும், 6ஆம் திகதி மூன்றுமுறிப்புப் பகுதி விவசாயிகளுக்கும், 7ஆம் திகதி வன்னிவிளாங்குளம் பாலைப்பாணி விவசாயிகளுக்கும்8ஆம்திகதிபாலிநகர் சிறாட்டிகுளம் நட்டாங்கண்டல் விவசாயிகளுக்கும் 9ஆம் திகதி செல்வபுரம் பாண்டியன்குளம் பகுதி விவசாயிகளுக்கும், எதிர்வரும் 13ஆம் திகதி பூவசரங்குளம் சிவபுரம் கரும்புள்ளியான் பிரதேச விவசாயிகளுக்கும், 14ஆம் திகதி விநாயகபுரம் பொன்னகர் பகுதி விவசாயிகளுக்கும், 15ஆம் திகதி கொல்லவிளாங்குளம் விவசாயிகளுக்கும் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

கல்மடுநகரில் அமைக்கப்பட்ட

# மூலிகை கிராம திட்டம் வெற்றி

## சுதேச வைத்தியத்துறை ஆணையாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, பெப்.6

வடக்கு மாகாணத்தில் சித்த வைத்தியத்துறையைக் கட்டியெழுப்பும் வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடு நகரில் உருவாக்கப்பட்ட மூலிகைக் கிராமம் தற்போது மாகாண சித்த வைத்தித்துறையில் மூன்றிலொரு மூலிகைத் தேவையை நிவர்த்தி செய்கின்றது.

இவ்வாறு வடமாகாண சுதேச வைத்தியத்துறை ஆணையாளர் மருத்துவர் திருமதி சி.துரைரட்ணம் தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு வடமாகாண சபையால் கல்மடு பிரதேசத்தில் 100 ஏக்கர் பரப்பளவில் ஆரம்பித்து வைக்கப்பட்ட மூலிகை உற்பத்தி கிராமம், மருந்து உற்பத்தி தொழிற்சாலை மற்றும் அதனுடன் இணைந்த வேலைத்திட்டங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கல்மடுவில் இப்போது மூலிகைகள் உற்பத்தி செய்யப்பட்டுகின்றன. மூலிகை உற்பத்தியில் பெண்கள் மிகுந்த ஆர்வத்துடன் செயற்படுகின்றார்கள். பெண்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையை வழங்கிவருகிறோம். கல்மடுவில் மருந்து உற்பத்தி தொழிற்சாலை, பயிற்சி நிலையம் மற்றும் சுற்றுலா மையம் என்பவற்றை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ள போதிலும் இன்னமும் அது ஆரம்பிக்கப்படவில்லை.

இதுவொரு பெரியளவிலான திட்டம். இந்தத் திட்டத்துக்கு கிட்டத்தட்ட 585 மில்லியன் ரூபா தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியுதவியை இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்னமும் சாதகமான பதில் வரவில்லை.

இங்கு உற்பத்தி செய்யப்படும் மூலிகைகளை அச்சுவேலி தொழிற்சாலைக்கு கொண்டுசென்று பதப்படுத்தி மருந்துகளைத் தயாரிக்கின்றோம். எமது மாகாணத்தில் வளரும் மூலிகைத் தாவரங்களுக்கு மேலதிகமாக தென்னிலங்கையிலிருந்தும் மூலிகைகளைக் கொண்டுவந்து பயிரிட்டுள்ளோம்.

தென்னிலங்கையில்மாத்திரமே வளரக்கூடியதாகக் கருதப்பட்ட கறுவா மூலிகை மரங்கள் இந்த மூலிகைக் கிராமத்தில் பயிரிடப்பட்டுசிறந்தமுறையில் வளர்ந்துள் ளன.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு இலங்கையில் சித்த வைத்தியத்துறை நிபுணர்கள் போதியளவு இல்லாமை பெரும் குறைபாடாக உள்ளது - என்றார். (ற-ய,21)

# கிளிநொச்சியில் கடந்த ஆண்டில் குற்றச்செயல்கள் அதிகரிப்பு

## பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தகவல்

கிளிநொச்சி, பெப். 6

கிளிநொச்சியில் 2015 ஆண்டை விட கடந்த வருடம் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. கிளிநொச்சி தலைமை பொலிஸ் நிலையத்தில் அதிக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யே.டி.சில்வா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

2015 ஆம் ஆண்டு 869 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 2016 ஆம் ஆண்டு 951 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 82 வழக்குகள் அதிகமாக பதிவு செய்யப்பட்டன.

மக்கள் தொகை அதிகரிக்கும்போது அவர்களின் தேவைகளும் அதிகரிக்கின்றன. அந்த வேவைகளை மக்கள் இலகுவான முறையில் எவ்வாறு பெறலாம் என திட்டமிட்டு தவறான முறையில் செயற்படுவதால் குற்றச்செயல்கள் அதிகரிக்கின்றன.

மணல் கடத்தப்படுவது தற்போது கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. பொலிஸ் மாத்திரம் அல்லாமல் சுற்றச்சூழல் துறை மற்றும் வனவள திணைக்களம் என்பனவும் தீவிர நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பட்சத்தில் மணல் மற்றும் மரக்கடத்தல் என்பவற்றை மேலும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும்.

கிளிநொச்சி தலைமைப் பொலிஸ் நிலையத்தில் கடந்தவருடம் மணல்கடத்தல் தொடர்பாக அதிகளவு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன. மணல் கடத்தல் தொடர்பாக 344 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. கசிப்பு தொடர்பாக 255 வழக்குகளும், கஞ்சா தொடர்பாக 126 வழக்குகளும், அரசசாரய விற்பனை தொடர்பாக 71 வழக்குகளும், தடைசெய்யப்பட்ட விலங்கினங்களை (மான், ஆமை, பன்றி, மரை) வேட்டையாடியமை மற்றும் இறைச்சியாக்கியமை தொடர்பாக 55 வழக்குகளும், மரம் கடத்தல் தொடர்பாக 48 வழக்குகளும், கோடா தொடர்பாக 36 வழக்குகளும், வீதியில் மது அருந்தியமை தொடர்பாக 8 வழக்குகளும், ஆடு, மாடு கடத்தல் தொடர்பாக 7 வழக்குகளும், கள் தொடர்பாக ஒரு வழக்கும் என மொத்தமாக கடந்தவருடம் 951 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. கடந்த வருடம் ஹெரோயின் தொடர்பாக எந்வொரு வழக்கும் பதிவு செய்யப்படவில்லை-என்றார். (ற-21,6)

# விட்டுக் கொடுப்பு இல்லாவிட்டால் முப்பது வருட துன்பம் தொடரும்

## கல்முனை விகாராதிபதி தெரிவிப்பு

மட்டக்களப்பு, பெப்.6

நாட்டில் வாழும் அனைவரும் பெரும்பான்மை சிறுபான்மை என்று சிந்திக்காமல் சகலரும் சமத்துவமானவர்கள் என்று கருதி விட்டுக் கொடுப்புடன் வாழ முடியாவிட்டால் முப்பதுவருட துன்பம் தொடரத்தான் செய்யும்.

இவ்வாறு கல்முனை சிறி சுபத்திராம மகா விகாராதிபதி ரண்முத்துகல சங்கரத்ன தேரோ தெரிவித்தார்.

கிழக்கு மாகாண விஸ்வகர்ம பொற்றொழிலாளர் சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இலவச மருத்துவ முகாம் நேற்று மட்டக்களப்பு மஹாஜன கல்லூரியில் இடம் பெற்றது. அதில் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாங்கள் இந்த நாட்டிலே விட்டுக்கொடுப்புடன் வாழவேண்டும். மற்றவருக்கு உதவவேண்டும் அவர்களைப் புரிந்து கொண்டு உன்னதமான அன்பை வெளிப்படுத்த வேண்டும். சிறுபான்மை பெரும்பான்மை என்று யாருமே சிந்திக்கக் கூடாது. ஒரு சிறந்த மனிதர்களாக நாம் மாறுவதோடு மற்றவர்களையும் மாற்றவேண்டும்.

மற்றவர்களுக்கு அன்பையும் ஆதரவையும் கண்ணியத்தையும் வழங்க மறந்தால் கடந்த 30 வருடகால பகைமை உணர்வு, இன்னமும் நீடிக்கும்.



2004ஆம் ஆண்டில் நான் கல்முனை விகாராதிபதியாக பொறுப்பெடுத்த பொழுது எனக்கு தமிழ் தெரியாது. அங்கே தமிழ்பேசும் மக்கள் தங்களது பிரச்சினைகளைச் சொல்லும்போது உதவவேண்டும் என்று மனம் ஏங்கியது. அதனால் முதலில் அவர்களது துயரங்களைக் காது கொடுத்துக் கேட்கவேண்டும் என்பதற்காக நான் தமிழைக் கற்றேன். எனக்கு தமிழர் முஸ்லிம் என்று பிரித்துப் பார்க்க முடியாது. அரச அதிகாரிகள் கருணையுள்ளத்தோடு பணிபுரிய வேண்டும். அரச தலைவரும் நல்லிணக்கம் ஒற்றுமை சமாதானம் சமத்துவம் சகவாழ்வு போன்றவற்றை உருவாக்க வேண்டும் என்று அறைகூவல் விடுக்கின்றார். உண்மையில் அது சிறந்த அழைப்புத்தான். அதனை நாம் ஏற்றுக் கொண்டு சமாதானத்திற்காகப்பாடுபடுவோம் - என்றார். (ற-ய)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
14.09.1938



உதிர்வு
19.01.2016

திதி:- 06.02.2017

## அமரர் செல்லப்பா மகாதேவன்

அன்பாலும் பண்பாலும் அனைவரையும் அரவணைத்த எம் அன்பு அப்பாவே!
விழிமூடித் திறக்கும் நேரத்தில் எங்களைத் தவிக்கவிட்டு நிரந்தரமாகப் பிரிந்தீர்களே!
மாதங்கள் பன்னிரண்டாகித் தவிக்கின்றோம் உங்களைப் பிரிந்து...
பிள்ளைகள் தான் உலகம் என்று அன்பைப் பொழிந்தீரே அப்பா...
ஆறுதல் சொல்ல நமக்கு இனியார் இவ்வுலகில் அப்பா...?
மாண்டு விடவில்லை நீங்கள் எம் மனங்களில் மறையாது என்றும் வாழ்கின்றீர்கள்
எம் உயர்வுக்கு உன்னத வழிகாட்டி உங்கள் வாழ்வை அர்ப்பணித்த அன்பு அப்பா....
"எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்"
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

கண்ணன் (மகன்)
075 048 3844
துஷி (மகள்)

# இலங்கை திருகோணமலை திருவருள்மிகு

## திரியத்திரி
## உத்தமோத்தம
## மஹா கும்பாபிஷேச



**06.02.2017 திங்கட்கிழமை**
**இராஜகோபுர கும்பாபிஷேகம்**
**காலை 7.14 - 8.00 மணிவரை**

**மகா கும்பாபிஷேகம்**
**காலை 9.36 - 10.28 மணிவரை**

### ஆசிச்செய்தி

இலங்கையில் தக்ஷிண கைலாசம் எனப் போற்றப்படும் திருகோண மலை மாவட்டத்தில் பக்தகோடி களுக்கு அருள்பாலித்துக் கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுக்கு திரியத்திரிம்சத் குண்ட சகித (33 குண்ட) உத்தமோத்தமப புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று (06.02.2017) திங்கட்கிழமை நிறைவேற திருவருள் கூடியுள்ளது. 51 சக்தி பீடங்களில் ஒன்றாக விளங்கும் இத் திருக்கோயில் இலங்கை இந்திய சிற்பக் கலைஞர்களினால் சிற்ப வேலைப்பாடுகள் முழுமையாக திருப்பணி நிறைவேற்றப் பட்டு இலங்கையில் முதலாவது கலைக்கோயிலாகத் திகழ்கின்றது. இத் திருப்பணி அம்பாளின் திருவருளாலும், பக்தகோடி களின் வேண்டுதலாலும் பலகோடி ரூபா செலவினால் நிர்மாணிக்கப்பட்டுப் புதுப்பொலி வுடன் காட்சியளிப்பது மட்டும் அல்லாமலும், வசந்த மண்டபம் ஸ்ரீ கௌரீஸ்வரர் ஸ்ரீ கௌரி யம்மாளுக்கு பஞ்சதள ராஜகோபுரம் புதிதாக நிர்மாணிக்கப் பட்டுள்ளது. அண்டங்கள் எல்லாம் காத்தருளும் அம்பாள் அடிபணிந்து அருள்சக்தியைப் பெற்று அடியார்கள் உய்ய வேண்டும் என்று பிரார்த்தித்து மஹா கும்பாபிஷேகத்துக்கு பக்த கோடிகள் வருகை தந்து மேற்படி கும்பாபிஷேகத்தைத் தரிசித்து அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்று பெருவாழ்வு வாழ அம்பிகை அருள் புரிவாராக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**வேதாகம மாமணி**
**பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள்,**
**ஆதீனகர்த்தாவும் பிரதம குருவும்.**

### சிறப்பு வழிபாடுகள்

**வைகாசிப் பொங்கல்**

வைகாசிப் பௌர்ணமிக்கு முதல் வரும் திங்கட்கிழமை இவ்வாலயத்தில் பொங்கற் பெருவிழா நடைபெற்று வருகின்றது. திருகோணமலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுக்கும் திருகோணமலையின் மேற்கே 19 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பாலம் போற்றாட்டாற்றுப் பத்தினி அம்மனுக்கும், வடக்கே 7 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள சல்லியம்மனுக்கும் ஏதோ ஒருவித தொடர்பு பண்டுதொட்டு இருந்து வருகிறது. இது மக்களின் பண்பாட்டுத் தொடர்பாயுமிருக்கலாம்.

வைகாசிப் பூரணைத்தினம் எதுவோ அதற்கு முன்னர் வரும் திங்கட்கிழமை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோயிற் பொங்கலும் இத்தினத்திற்குப் பின்வரும் திங்கட்கிழமை பாலம் பொட்டாற்றுப் பத்தினி அம்மன் கோயில் பொங்கலும் இத்தினத்தை அடுத்து வரும் வாரத்தில் செவ்வாய்க்கிழமை சல்லியம்மன் கோயிற் பொங்கலும் பண்டுதொட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. இதனால் வைகாசி மாதம் முழுவதும் திருகோணமலை சக்தி வழிபாட்டுப் பக்திவெள்ளத்தில் மூழ்கியிருக்கும்.

பத்திரகாளி அம்பாளுக்கு மக்கள் பொங்கும் பொங்கல் ஆலயத்தைச் சுற்றியுள்ள வீதியில் நடைபெறும். அன்றிரவு ஆலய வீதி முழுவதும் யாக சாலை போல் காட்சியளிக்கும். புகைமண்டலம் இருளை மூடித்திரண்டு நிற்கும். அக்கினி தேவன் வீதி முழுவதும் பிரகாசித்துக் கொண்டிருப்பான். பக்தகோடிகள் வீதியிலுள்ள எஞ்சிய இடங்களில் திரண்டு நிற்பார்கள். அம்பாளின் பொங்கல் ஆலய வாசலில் நடைபெறும். அடியார்களின் பொங்கல் வீதியெங்கும் நடைபெறும். அம்பாளின் பொங்கற் பிரசாதமும் அடியார்களின் பிரசாதமும் ஸ்நபன மண்டபத்தில் மலைபோலத் தேவிக்குப் படைக்கப்பட்டு பூஜை நடைபெறும். கோபுர வாசலில் தீ மிதிப்புவைபவமும் நடைபெறும். வெண்மணல் பரந்த வீதி காலையில் கரிக்குவியல்களால் மூடுண்டு கிடப்பதைக் காணலாம். மக்களின் புறவாழ்வில் மாயாமலம் கரிக்கப்பட்டு அகவாழ்வில் ஆன்மீக அமிர்தம் தேவியின் திருவடிகளில் படைக்கப்படுகின்ற தென்பது வைகாசிப் பொங்கல் தத்துவம்.

**கேதார கௌரி விரதம்**

புரட்டாதி மாத விஜய தசமியன்று இவ்விரதம் ஆரம்பிக்கப்பட்டு ஐப்பசி மாத அமாவாசைத் திதியில் விரதம் நிறைவு பெறுகிறது. 21 நாள்களுக்கு அனுட்டிக்கப்படும் இவ்விரதம் திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கடந்த 200 வருடங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இலங்கையின் பல இடங்களிலிருந்தும் இவ்விரதத்தை அனுட்டிக்க ஆயிரக்கணக்கில் மக்கள் வந்து கூடுவார்கள். அம்பிகையின் அருட்பலத்தால் வருடா வருடம் இவ்விரதத்தை அனுட்டிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் அனைவரும் இவ்விரதத்தை அனுட்டிக்கலாம். அதனால் ஒவ்வொரு வருடமும் ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் இவ்வாலயத்தில் வந்திருந்து விரதத்தை

ஈழநாட்டிலுள்ள தேவாரப் பாடல்
கோயில் கொண்டருளியுள்ள அருள்
தொன்மையும் முதன்மையும் மேன்

திருகோணமலையின் இருதய
கெதிரே பரந்த மைதானமும் அதை
இயற்கை அழகை ஊட்டிக் கொண்டி
தரிசிக்கலாம். அம்பாளின் அருட்கட
கடாட்சம் அம்பாளுடைய ஆலயத்து
நிற்கும் போது ஏற்படுகின்றது.

ஒரு ஆலயத்தின் தொன்மையை
சாசனங்கள் என்பன முதலிடம் வ
உதவுகின்றன. ஸ்ரீ பத்திரகாளி அம்
வரும் மரபுக்கதை ஒன்றுண்டு.

மதுரையம்பதியில் பிறந்த பிரா
வாழ்க்கையை நடாத்தி வந்தார். இ
வாக்கு அவருக்குக் கிடைத்தது. திரு
தொங்கு செவ்வரத்தை மரமொன்
விக்கிரகம் இருக்கிறது என்ற தெய்வ
அவ்விடத்தை அகழ்ந்து பார்த்த போ
பது கண்டறியப்பட்டது.

அன்று தொடக்கம் இன்று வரை
பாள் விக்கிரகம் சிறப்பிடம் பெற்று
எடுக்கப்பட்ட காட்சி இக்கோயில் சித்
லாம். இராஜ கோபுரத்திலும் இச் சிற்ப

மிகப் பழமை வாய்ந்த ஆலயா

அனுட்டிப்பார்கள்.

21 இழைகளால் முறுக்கப்பட்டது
இருபத்தொன்றாக வெற்றிலை, பாக்கு
அடங்கிய பூசைப்பெட்டிகள் ஆல
பூசையின்முடிவில் விரதகாரருக்கு பூ
விரத நூலை மாத்திரம் பெற்று இவ்
அடுத்தநாள் பாறணைப்பூசையும் வெ
நிகழ்ச்சியாக அமைகின்றது.

**இரதோற்சவம்**

இந்துக்கள் வாழும் இடங்களிலுள்ள
அறிந்ததே. ஆனால் திருகோணம
அம்பிகையின் பாததூளியை அள்ளி
பெண்கள் அடியளித்து வரும் பரவசமு
தேருக்குப் பின்னே ஆண்கள் இர
வருவார்கள். அம்பிகைளின் தேர் அ
பெண்கள் அடியளிப்பதும் முடிவுறாது
பத்திரகாளி கோயிலில் தான் பார்க்கல

ஒரு ஆலயத்தின் மகிமை
புராணங்களில் புனை கதைகளைப் ப
இளைஞர்களும் நம்புவதில்லை. ஆ
சித்தர்களாக்குகின்றது.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் ஆல
இருக்கின்றன. எனவே இந்த அற்புதக்

நிலத்தினடியிலிருந்து எடுக்கப்பட்
போல சிங்கவாகன அற்புதக் கதையெ

சிங்க வாகனம் ஒன்றை இந்
கொண்டிருந்ததாகவும் ஸ்ரீ பத்திரகா
அருளால் கப்பற் தலைவன் கண்ட
தொடங்கியதென்றும் கர்ண பரம்ப

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ
மோகனராசா
கமலாலயம் சிற்பக் கலைக்கூடம்


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ
கு. சந்திரராசா
கலைவாணி
கலையகம்
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி.


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ
சு. இராசரத்தினம்
விநாயகர்
சிற்பாலயம்
காளி கோயிலடி,
திருநெல்வேலி.


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ
ந. சற்குருநாதன்
(சிற்ப கலா வாருதி)
திர்பிகா
கலைக்கூடம்,
அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி.


கலா பூ
ஆறுமுகம்


# மிகு ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் திருக்கோயில்
# ரிம்சத் குண்ட சகித (33 குண்ட)
# தம பக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா
# டிக பெருஞ்சாந்தி பெருவிழா சிறப்பிதழ்
# 06.02.2017

## ஆலய வரலாறு

### ஆலயத்தின் தொன்மை

ாரப் பாடல் பெற்ற க்ஷேத்திரங்களில் ஒன்றான திருக்கோணஸ்வர சிவ பூமியில் ள்ள அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் ஈழத்திலுள்ள சக்தி பீடங்களில் மையும் மேன்மையும் உடையதாக விளங்குகின்றது.

ன் இருதய ஸ்தானமாக விளங்குகின்ற ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் ஆலயத்திற் மும் அதையடுத்துப் பரந்து விரிந்து கிடக்கும் இந்து சமுத்திரமும் இவ்வாலயத்திற்கு க் கொண்டிருக்கிறது இவ்வாலயத்தில் நின்று கொண்டு திருக்கோணஸ்வரத்தைக் ா அருட்கடாட்சம் கோணேஸ்வரத்தில் படிய கோணேசப் பெருமானின் கிருபா ஆலயத்துள் நிறைந்த கொண்டிருப்பது போன்ற உணர்வு இவ்வாலயத்துள் து.

ன்மையை அறிய முயலும் ஆய்வாளர்களுக்கு உதவும் வகையில் கல்வெட்டுகள் தனிடம் பெறுகின்றன. அடுத்து ஆலயச்சூழலில் கிடைத்த தொல்பொருள்கள் ரகாளி அம்பாள் ஆலயத்தின் வரலாறு தொடர்பாக செவிவழியாகப் பேணப்பட்டு ண்டு.

பிறந்த பிராமண குலத்தைச் சேர்ந்த ஒருவர் இராமேஸ்வரத்துக்கு வந்து இல்லற வந்தார். இவ்வாறு இருக்கும் காலத்தில் தெய்வ விக்கிரகம் ஒன்று பற்றி தெய்வீக த்தது. திருகோணமலையிலுள்ள பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் தெற்கு வீதியில் மரமொன்று இருக்கின்றது. இந்த மரத்தின் அடியில் நிலத்தினுள் ஒரு தெய்வ ன்ற தெய்வ வாக்கின்படி அந்தப் பிராமண பக்தர் திருகோணமலைக்கு வந்தார். ார்த்த போது ஒரு செப்புக் கிடாரத்தினுள் (தாளி) காளி அம்பாளின் விக்கிரகம் இருப்

ன்று வரை இக் கோயிலில் நடைபெறுகின்ற பிரதான விழாக்களில் இந்தக் காளியம் ம பெற்று வருகின்றது. காளி அம்பாளின் விக்கிரகம் தாளியிலிருந்து வெளியே ாயில் சித்திரத் தேரில் புடைப்புச் சிற்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க ம் இச் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது.

ந்த ஆலயங்களின் தோற்றகாலத்தைப் பற்றி எதனையும் அறியமுடியாமலிக்கும்

போது அதன் தோற்றத்தை விளங்குவதனை மையமாகக் கொண்டு பலகதைகள் தோன்றுவது வழக்கம். இப்படி யான கதைகள் மக்களின் கவத்தை ஈர்க்கத்தக்க வகையில் அமைகின்றன. அவர்களின் மனதில் ஆழமாகப் பதித்து நிலைபெற்று விடுகின்றன. ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயிலின் தோற்றக்காலம் தொடர்பான கதையும் இத்தகைய தன்மை கொண்ட கதைகளுள் ஒன்றாக இருக்கலாமோ? என்று ஐயப் பாட்டாலும் அகழ்தெடுக்கபட்ட செப்புக் கிடாரமும் அதற்குள் வைத்துப் பாதுகாக்கப்பட்டிருந்த பத்திரகளி அம்பாளின் விக்கிரகமும் இக் கோயில் தோற்றக்காலம் பற்றிய தரவுகள் சிலவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு உதவியாக இருக்கின்றன.


செப்புக் கிடாரத்தின் வடிவமைப்பினையும் உலோக வார்ப்பு முறையினையும் அவதானிக்கையில் மிகப் பழமை வாய்ந்த தொன்றாகவே இக்கிடாரம் காணப்படுகின்றது. பத்திரகாளி அம்பாள் விக்கிரகத்தினுடைய வடிவமைப்பு ஏறத்தாழ 11 ஆம் 12 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகக் கோயில்களில் காணப்பட்ட காளியம்மை உருவங்களை ஒத்ததாக காணப்படுகின்றது. இவ்விக்கிர கத்தின் காலத்தை திட்டவட்டமாக கூறமுடியா விட்டாலும் அது மிகப் பழமை வாய்ந்த தொன்றெனக் கூறிக் கொள்ள முடியும்.


இக் கோயில் பற்றிய கதை மரபில் வரும் செய்தி இலங்கையில் காலத்துக்குக் காலம் நடைபெற்ற போத்துக்கீச, ஒல்லாந்துப் படையெடுப்புக்களாலும் பௌத்த சமணத் தாக்கங்களாலும் இந்துக் கோயில்களுக்கு கேற்பட்ட அழிவுகளை நினைவூட்டுகின்றன. அந்நியரின் ஆக்கிரமிலிருந்து தற்காலிகமாக பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் கோணேசர் கோயிலின் விக்கிரகங்கள் கிணற்றி னுள் மறைத்து வைக்கப்பட்டு இருந்ததையும் பொலநறுவை இந்துக் கோயில்களின் திருவுருவங்களை அதிசயிக்கத்தக்க வகையில் நிலத்தினடியில் கல்லறை அமைத்துப் பாதுகாத்து வைத்திருந்ததையும் அறிகின்றோம்.

இத்தகை நடவடிக்கையாவே அந்நியரின் இந்து மத விரோதச் செயல்கள் நடைபெற்ற 17 ஆம் நூற்றாண்டில் காளி கோயில் அம்மன் விக்கிரகமும் செப்புக் கிடாரத்தினுள் பாதுகாத்து வைத்து மண்ணுக்கடியில் மறைத்து வைக்கபட்டிருந்ததென எண்ண வேண்டும்.

இன்று ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோயிலிருக்கும் இடத்தில் சோழர் காலக் கோயிலொன்று இருந்ததெனவும் இக் கோயிலுக்குரிய தூண் ஒன்றில் கலவெட்டொன்று காணப்பட்டதையும் அதனைப் பேராதனைப் பலகலைக் கழக பேராசிரியர் கலாநிதி செ. குண சிங்கம் அவர்கள் ஆய்வு செய்துள்ளார். என்பதனையும் அறிவோம். போத்துக் கீசரின் தாக்கத்தினால் இக் கோயில் அழிக்கப்பட்டு இது மறுபடியும் இந்த இடத்தில் புனரமைக்கப்பட்டதெனக் கொள்ளலாம்.







கப்பட்டது காப்பு நூல் விரதகாரர் தரிப்பதற்குரிய விரத நூலும் வகைக்கு லை. பாக்கு. பழம். மஞ்சள். பூ. பலகாரம் என்பனவும் தேங்காய். வீபூதி. குங்குமம் கள் ஆலயத்துள் அடுக்கி வைக்கப்பட்டு அலங்காரப் பூசை நடைபெறும். ாரருக்கு பூசைப் பெட்டிகள் அம்பிகையின் பிரசாதமாக வழங்கப்படும். தனியாக ற்று இவ்விரதத்தை அனுடிப்பவர்களுமுண்டு. ஆலயத்தில் தங்கியிருந்து விரதம் அனுட்டிப்பவர்களுக்கு சையும் செய்து அனுப்புவார்கள். விரதபலன் மக்களை ஆன்மீக வாழ்வுக்கு இட்டுச் செல்லும் புனித து.

ளிலுள்ள சிறந்த ஆலயங்களில் மகோற்சவத்தின் ஒன்பதாம் நாள் ரதோற்சவம் நடைபெறுவது யாவரும் கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் இரதபவனியில் எழுந்தருளி வரும் புனித வீதியில் படியும் ய அள்ளி அருள் பெறுவதற்காக சரணாகதியடையும் பக்தகோடிகளில் ஆண்கள் அங்கப்பிரதட்ஷணமும் ம் பரவசமான காட்சி இவ்வாலயத்தின் சிறப்பம்சமாகும்.

ாகள் இரண்டு வரிசையிலும் பெண்கள் இரண்டு வரிசையிலும் பிரதட்சணம் செய்து அடியளித்து ன் தேர் ஆலயத்தைச் சுற்றி வந்து ஆலய வாசலை அடைந்ததும் ஆடவரின் அங்கப்பிரதட்சணமும். முடிவுறாது ஆற்றின் நீரோட்டம் போல தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் பக்தி வெள்ளக் காட்சியை ஸ்ரீ ர் பார்க்கலாம். இது உடலைத் தியாகம் செய்து உள்ளத்தைப் பண்படுத்தும் ஆத்மீக சாதனை.

## அற்புதக் கதைகள்

ன் மகிமையை மேம்படுத்தி மக்களின் மனதில் நம்பிக்கையை ஊட்டுவதற்காக பௌராணிகர் தகளைப் புனைந்துரைப்பதுண்டு. இத்தகைய கதைகளை அறப்படித்த பேராசிரியர்களும், விஞ்ஞான யுக ல்லை. ஆத்ம ஞானிகள் நம்புகின்றனர். அந்த நம்பிக்கைகள் சித்தத் தெளிவைக் கொடுத்து அவர்களை

ளின் ஆலயத்தோடு தொடர்புடைய அற்புதக் கதைகளின் சான்றுப் பொருள்கள் ஆலயத்தில் இன்றும் த அற்புதக் கதைகள் தள்ளத்தக்கதன்று.

டுக்கப்பட்ட கிடாரமும் (தாளி) காளியம்பாளின் தாமிரத் திருவுருவமும் ஆலயத்தில் இன்றும் இருப்பது க் கதையொன்று பத்திரகாளி கோயிலோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது.

ாறை இந்தியாவிலிருந்து கப்பலில் ஏற்றிக்கொண்டு இந்து சமுத்திரத்தில் இக்கப்பல் சென்று பத்திரகாளி அம்பாளின் ஆலயத்துக்கு நேராக இக்கப்பல் ஓடாமல் நின்று விட்டதாகவும் அம்பாளின் ன் கண்ட சொற்பனத்தின் படி அந்த சிங்கவாகனத்தை இவ்வாலயத்துக்குச் சேர்த்த பின்னரே ஓடத் ண பரம்பரைக் கதையொன்று கூறப்படுகின்றது. இந்த சிங்கவாகனம் இன்னும் இவ்வாலயத்தில் இருக்கின்றது.

அந்த தலைமுடியைப் பாதுகாப்பாக வைத்திருந்து மகிஷாசுர மார்த்தனவிழா நடைபெறும்போது அம்பாளுடைய் ஜடாமுடியோடு சேர்த்துக் கட்டி அலங்கரிக்கும் வழக்கம் நடைமுறையிலிருந்து வந்தது. அந்த மயிர்களின் ஒருபகுதி இன்றும் இருக்கின்றது.

முன்னொரு காலத்தில் இவ்வாலயப் பூசையைச் செய்து கொண்டிருந்த குருக்கள் ஒருவர் இரவுப் பூசையை முடித்துக் கொண்டு திருக்கதவை அடைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றுவிட்டார். தனது பிள்ளை ஆலயத்துக்குள் இருந்ததை அவர் அவதானிக்கவில்லை. வீட்டுக்குப்போய் சாப்பாட்டு வேளையில் பிள்ளையைக் காணாமல் எங்கும் தேடிவிட்டு ஆலயத்துக்கு வந்து பார்த்தபோது பிள்ளை அங்கிருப்பதைக் கண்டு மனைவியிடம் கூறினாராம். பூசை முடிந்து கதவடைத்தபின் ஆலயக் கதவைத் திறப்பது சாஸ்கிரத விரோதமானது. ஆசாரமற்றது என்பதினால் காலையில் பார்க்கலாம் என்று கூறியும் மனைவி ஏற்றுக் கொள்ளாமல் அடம்பிடித்தாளாம். இந்த வழக்கத்தை அனுசரிப்பதுபோல இன்றும் ஆலயப் பூசைகளனைத்தும் நிறைவுற்றவுடனே கதவு அடைக்கப்படுகிறது போலும். மனைவியின் விருப்பப்படி ஆலயத்தைத் திறந்தபோது காவல் தெய்வமாகிய வைரவர் இரண்டாகக் கிளித்துப் போடுவதைக் கண்டாராம். அத்தகைய உக்கிர மூர்த்தியாகிய வைரவரை மந்திர தந்திரக் கிரியைகளினால் இடம்பெயர்ந்து எங்கேயோ ஒரு மலையிற் கொண்டுபோய் ஸ்தாபித்ததாகக் கூறுகின்றனர்.

முன்னொரு காலத்தில் இவ்வாலயத்தினுள் சுருண்டு படுத்திருந்த ஒரு நாக சர்ப்பத்தின்மேல் பெரிய பார மான கிடாரமொன்றை அவதானமின்றித் தூக்கி அதன்மேல் வைத்துவிட்டார்களாம். சர்ப்பம் அதனடியில் நசுங்கி இறந்துவிட்டது. அந்த சர்ப்பத்தின் சாபம் காரணமாக நாகதோஷம் ஏற்பட்டு அந்தக் குருக்களின் ஏழு சந்த திக்குப் பின்பே ஆண் குழந்தை பிறந்ததாம். அதுவரையும் பெண் சந்ததியே தொடர்ந்தும பிறந்திருக்கின்றது.

யாமறிந்தவரையில் இவ்வாலயத்தின் பிரம்ம ஸ்ரீ கார்த்திகேசுக் குருக்களும், அவருக்குப் பின் முறையே பிரம்ம ஸ்ரீ கா.குமாரசுவாமிக்குருக்களும். பிரம்ம ஸ்ரீ கு.சுவாமிநாதக் குருக்களும். பிரம்ம ஸ்ரீ சு.கு.சோமாஸ் கந்தக் குருக்களும். பூசை செய்து வந்துள்ளார்கள். இவர்களில் சோமாஸ் கந்தக் குருக்களுக்குத்தான் ஏழாவது தலைமுறையில் ஆண்குழந்தை பிறந்தது. அதுவே சிவ ஸ்ரீ.சோ.ரவிச்சந்திரக்குருக்கள். தந்தையார் ஆலயத் துக்குச் செய்துவந்த திருப்பணிகளைத் தொடர்ந்து மாபெரும் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின் றன. எல்லாம் அம்பாள் திருவருள்.

சோழப் பெருமன்னர்களின் செல்வாக்கு ஈழ நாட்டில் நிலவிய காலத்தில் பல இந்துக் கோயில்கள் தோற்றம் பெற்றன. 9ஆம் நூற்றாண்டில் சோழப் பெருமன்னன் விஜயாலன் 'நிதம்பசூதனி' எனப்படும் துர்க்காதேவிக்கு கோயில் எடுத்த வரலாறு அவனுடைய சாசனங்களில் உண்டு. எனவே சோழ மன்னர்கள் வீரத்தையும் வெற்றியையும் தரும் காளிதேவியை வழிபடும் வழக்கமுடையவர்களாக இருந்ததால் முதலாம் இராஜராஜ சோழனின் மகனாகிய முதலாம் இராஜேந்திரன் ( கி.பி.1012 - கி.பி. 1044) என்பவனின் மெய்க் கீர்த்தியைக் கூறும். கல்வெட்டுத்தூண் காளிகோயிலில் கிடைத்த கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட கற்தூணும், அக்கோயில் நிலத் துள்ளிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட கிடாரமும் (தாளி) அதனுள்ளிருந்த ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் திருவுருவ மும் இன்றும் கோயிலில் இருப்பதால் ஆலயத்தின் தொன்மை புலப் படுகின்றது.

கலா பூசணம்
முகம் சிவலிங்கம்
காளி கோயிலடி,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

ஓம் விராட் விஸ்வ பிரமனே நமஹ
Thanusha Sitpalayam
தனுஷா சிற்பாலயம்
பரஞ்சோதி சதீஸ்வரன் ஆச்சாரி
ஆலயத்துக்குரிய தேர். மஞ்சம் வாகனங்கள்
மற்றும் ஆலயப் பொருள்கள் யாவும்
குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்
அம்மன் கோயிலடி,
திருநெல்வேலி கிழக்கு.

மு. தர்மலிங்கம்
தலங்காவல்
பிள்ளையார்
கோயிலடி,
திருநெல்வேலி.

வேதாகம மாமணி பிரம்ம ஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள்,
ஆதீனகர்த்தாவும் பிரதம குருவும்.

## சீனத் தூதரகத்தில் இவான்கா

பீஜிங், பெப். 6

அமெரிக்க அரச தலைவர் டொனால்ட் ட்ரம்பின் மகள் இவான்கா, அமெரிக்காவில் உள்ள சீனத் தூதரகத்துக்குச் சென்று அண்மையில் நடைபெற்று முடிந்த சீனப் புத்தாண்டைக் கொண்டாடினார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ட்ரம்ப் அதிபராகப் பதவியேற்பதற்கு முன்பே சீனாவுடன் பல விடயங்களில் முரண்பட்டு வந்தார். தென்சீனக் கடலில் சீனா மேற்கொள்ளும் இராணுவ விரிவாக்கத்தை ட்ரம்ப் வன்மையாகக் கண்டித்தார். சீனா, தாய்வானை ஒன்றுபட்ட சீனா என்று அழைத்து வருகிறது. இதை ட்ரம்ப் ஏற்றுக் கொள்ளவில்லை என்றே தெரிகிறது. தைவான் அதிபருடன் ட்ரம்ப் மேற்கொண்ட உரையாடல்களை சீனா வன்மையாகக் கண்டித்தது. இதனால் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் கடும் பகை தோற்றம்பெறவாய்ப்புள்ளது என்று கருதப்பட்ட நிலையில் சீனாவுடன் போர் நடத்தப்படும் என்று பேரதிர்ச்சியைத் தூக்கிப் போட்டிருந்தார் ட்ரம்பின் தேசிய பாதுகாப்பு மற்றும்திட்டக்குழுவில்முதன்மை ஆலோசகராக உள்ள ஸ்ரீவ் பெனான். சீனாவின் தரப்பிலும் அமெரிக்காவுடன் போரிடத் தயார் என்று தெரிவிக்கப்பட்டது. அதற்கேற்ப பல ஏவுகணைச் சோதனைகளையும் சீனா நடத்தியது.

இரு நாடுகளுக்கும் இடையில் முறுகல் நிலை உச்சம் தொட்டுள்ள நிலையில் சீனப் புத்தாண்டை அமெரிக்காவில் உள்ள சீனத் தூதரகத்துக்குச் சென்று கொண்டாடினார் இவான்கா. இவான்காவில் கணவர், ட்ரம்பின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளைமாளிகையில் முக்கிய ஆலோசகர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-எ)



## ரொகின்கய இன இஸ்லாமியர்களைக் கொல்கிறது இராணுவம்

### ஐ.நா. குற்றச்சாட்டு

மியன்மாரின் எல்லைக் கிராமமான ரொகின்கயவில் வாழும் இஸ்லாமியர்கள் நூற்றுக்கும் அதிகமானவர்கள் அந்த நாட்டின் இராணுவத்தால் கொல்லப்பட்டிருக்கலாம் என்று ஐக்கிய நாடுகள் சபை அச்சம் வெளியிட்டது.

பௌத்த மதத்தினர் மியன்மாரில் பெரும்பான்மையாக உள்ளனர். மியன்மாரின் எல்லைக்கிராமமான ரொகின்கயவில் வாழும் இஸ்லாமியர்கள் ரொகின்கய இஸ்லாமியர்கள் என்று அறியப்படுகின்றனர். அவர்கள் மியன்மாரில் சிறுபான்மையினத்தவர்களாக உள்ளனர். அவர்களுக்கு எதிராக மியன்மார் இராணுவத்தால் பல வன்முறைச் சம்பவங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன என்று குற்றச்சாட்டு உள்ளது.

தமக்கெதிரான வன்முறைகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அயல்நாடான பங்களாதேஷுக்கு ஏராளமான ரொகின்கயர்கள் சென்று தஞ்சமடைகின்றனர். அவ்வாறு செல்பவர்களுக்கு எதிராகவும் மியன்மார் அரசு பல வன்முறைகளை மேற்கொள்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. இதுவரை நூற்றுக்கும் அதிகமா



னவர்கள் மியன்மார் இராணுவத்தால் கொல்லப்பட்டனர் என்று குற்றம் சாட்டப்படுகிறது. (ம-எ)



## ஓ.பி.எஸ். - சசிகலா சந்திப்பு தமிழகத்தில் நேற்றுப் பரபரப்பு

சென்னை, பெப். 6

தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் - அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளர் சசிகலா ஆகியோரும் வேறுசில முக்கிய அமைச்சர்களும் போஜஸ் கார்டனில் நேற்று நண்பகல் திடீர் சந்திப்பு ஒன்றை நடத்தினர்.

துணை சபாநாயகர் தம்பித்துரை, திண்டுக்கல் சீனிவாசன், எடப்பாடி பழனிச்சாமி, தங்கமணி, வேலுமணி, செல்லூர் ராஜு, ஜெயக்குமார் உள்ளிட்ட முக்கிய அமைச்சர்களும் இந்த ஆலோசனையில் கலந்துகொண்டனர். 30 நிமிடத்திற்கு மேலாக ஆலோசனை நீடித்தது.

அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளராக உள்ள சசிகலா, தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும் வர எத்தனிக்கிறார். சசிகலாவின் நிகழ்ச்சித் திட்டங்களில் பன்னீர்செல்வம் ஓரங்கட்டப்படுகிறார் என்று பரவலான குற்றச்சாட்டு உள்ள நிலையில், இந்தச் சந்திப்பு பெரும்பரபரப்புக்களை தமிழ்நாட்டு அரசியல் வட்டாரத்திலும், சமூக வலைத்தளங்களிலும் தொற்றுவித்தது.

முன்னதாக, சசிகலாவை முதல்வராக்க அ.தி.மு. கழகத்தின் தொண்டர்கள் நிர்வாகிகள் என பலரும் முயன்றுவரும் நிலையில் அவர்களின் இந்தநிலைப்பாட்டுக்கு எதிராக தமிழ்நாட்டின் மற்றொரு முக்கிய கட்சியான தி.மு. கழகத்தின் செயல் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான மு.க.ஸ்டாலின் கருத்துத் தெரிவித்தார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியில், தமிழக அரசியல் சூழ்நிலையை உன்னிப்பாக கவனித்து வருகிறோம். ஜெயலலிதாவின் வீட்டில் உள்ளவர்கள் முதல்வராக தமிழக மக்கள் வாக்களிக்கவில்லை. எந்த ஒரு முடிவையும் ஜனநாயக விதிகளுக்குட்பட்டே தி.மு.கழகம் எடுக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

அ.தி.மு. கழகத்தின் சில தரப்புக்கள் ஆட்சி மாற்றம் தொடர்பில் சிந்தித்து வருகையில் ஸ்டாலினின் இந்தக் கருத்தும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று எனக் கருதப்படுகிறது. (ம-எ)

## அவனியாபுரத்தில் சனியன்று ஜல்லிக்கட்டு அரங்கேற்றம்

சென்னை, பெப். 6

மதுரை அவனியாபுரத்தில் பெரும் எடுப்பில் நேற்றுமுன்தினம் ஜல்லிக்கட்டு இடம்பெற்றது. 900 காளைகள் போட்டிகளில் பங்குபற்றின. 750 வீரர்கள் போட்டிகளில் கலந்துகொண்டனர்.

மிருகவதையின் அடிப்படையில் ஜல்லிக்கட்டு தடைசெய்யப்பட்டிருந்தது. இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் விளைவாக தமிழ்நாட்டு அரசு அவசர சட்டத்தையும் பின்னர் நிரந்தரச் சட்டத்தையும் இயற்றி ஜல்லிக்கட்டின் மீதான தடையை இல்லாமல் செய்தது. ஜல்லிக்கட்டுக்கு பெயர்போன இடங்



களில் ஒன்றான மதுரை அவனியாபுரத்தில் நேற்றுமுன்தினம் பெரும் எடுப்பில் ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டது. 900 காளைகள் போட்டிகளில் பங்குபற்றின. அவற்றை அடக்குவதில் 750 வீரர்கள் ஆர்வம் காட்டினர். போட்டியின் போது உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை. ஆயினும் 45 பேர் காயமடைந்தனர். (ம-எ)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எண்மர் ஆப்கானில் கொலை

காபூல், பெப். 6

ஆப்கானிஸ்தானில் பர்யாப் மாகாணம் அல்மார் மாவட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எட்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆயுததாரிகளால் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினமே இந்த அசம்பாவிதம் நடைபெற்றது. எட்டுப் பேரும் மொத்தமாக 4 பொலிஸ் நிலையங்களில் பணியாற்றியுள்ளனர்.

தலீபான் ஆயுததாரிகள் இந்தக் கொலையை அரங்கேற்றியிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. எனினும் இவர்களை உடன் பணி புரியும் பொலிஸாரே இழுத்து வந்து சுட்டுக் கொன்றுள்ளனர். அவர்கள் தலிபான் ஆயுததாரிகளின் ஆதரவாளர்களாக இருக்கலாம் எனப் பிறிதொரு கருத்தும் உலாவுகிறது. இந்தச் சம்பவத்துக்கு இதுவரை எவரும் பொறுப்பேற்கவில்லை. (ம-எ)

## சசிகலாவின் நியமனம் எத்தகையது என விளக்கம் கேட்கிறது தேர்தல் ஆணையம்

சென்னை, பெப். 6
அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளராக சசிகலா நியமிக்கப்பட்டமை எத்தகையது என்று அந்தக் கட்சியிடம் தேர்தல் ஆணையம் விளக்கம் கேட்டுள்ளது என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.



முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா வின் சாவை அடுத்து தமிழகத்தின் புதிய முதல்வராக ஓ.பன்னீர்செல்வம் பதவியேற்றுக்கொண்ட நிலையில், அந்தக் கட்சியின் பொதுச் செயலாளராக வி.கே.சசிகலா தேர்வு செய்யப்பட்டார். சசிகலாவின் நியமனம் செல்லாது என்று ஒருதரப்பினர் அவருக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் சசிகலாவின் நியமனம் தொடர்பில் தேர்தல் ஆணையம் விளக்கம் கேட்டுள்ளது என்று தற்போது தெரிவிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சசிகலா புஸ்பா வெளியிட்ட அறிக்கை ஒன்றின் அடிப்படையிலேயே இந்தத் தகவல் வெளியானது. (ம-எ)



ஆஸ்திரேலியாவில் 60 வருடங்களுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட உலகின் விலையுயர்ந்த வைரம் முதல் தடவையாக அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டது. 998 கிராம் எடை உள்ள வைரக்கல் மிக அரிதானதுடன், பெரியதுமாகும். இந்தக் கல்லில் ஒரே தடவையில் பல வர்ணங்கள் பளிச்சிடுவது இதன் சிறப்பாகும். (ம-எ)

## மெரீனாவில் பிறப்பித்த தடை உத்தரவு மீண்டும் பெறப்பட்டது

சென்னை, பெப். 6
சென்னை மெரீனா பகுதியில் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் நடைபெறுவதைத் தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட 144 தடை உத்தரவு மீண்டும் பெறப்பட்டது.



ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக மெரீனாவில் நடத்தப்பட்ட போராட்டத்தைப் போன்று பிறிதொரு போராட்டமும் அங்கே நடைபெற வாய்ப்புள்ளது என்று கருதப்பட்ட காரணத்தால் மெரீனா கடற்கரையில் ஊர்வலங்கள், போராட்டங்கள் நடத்துவதை முடக்கும் வகையில் தமிழ்நாடு பொலிஸ் 144 தடை உத்தரவைப் பிறப்பித்தது. சுற்றுலாப் பயணிகள், சிறுவர்கள், முதியவர்கள். நடைபயிற்சி மேற்கொள்பவர்கள் ஆகியோருக்கு இந்தத் தடை பொருந்தாது என்றும் அறிவிக்கப்பட்டது.
அசம்பாவிதங்கள் ஏதும் அரங்கேறாமல் முழுமையான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தடை மீண்டும் பெறப்படுகிறது என்று பொலிஸ் ஆணையாளர் ஜோர்ஜ் தெரிவித்தார். (ம)



## எண்ணெய் படலம் அகற்றும் பணியை ஓ.பி.எஸ். ஆய்வு

சென்னை, பெப. 6
சென்னை எண்ணூர் கடற்பரப்பில் பரவியிருக்கும் எண்ணெய்ப் படலத்தை அகற்றும் பணியை தமிழ்நாட்டு முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் நேரில் சென்று பார்வையிட்டார்.
எண்ணூர் துறைமுகம் அருகே ஜனவரி 28 ஆம் திகதி, இரண்டு கப்பல்கள் மோதிக்கொண்டதில், எண்ணெய்க் கப்பலில் உடைப்பு ஏற்பட்டு கச்சா எண்ணெய் கடலில் கலந்தது. இதன் காரணமாக, எண்ணூர் தொடங்கி திருவான்மியூர் வரை கிழக்கு கடற்கரைப் பகுதியில் எண்ணெய்ப் படலம் பரவி பெருமளவில் மாசு ஏற்படுத்தி உள்ளது. எண்ணெய்ப் படலத்தை அகற்றும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.
இந்தப்பணியில் தீயணைப்புப் படை வீரர்கள், கடலோர காவல் படையினர் மற்றும் தன்னார்வலர்கள் என ஏராளமானோர் ஈடுபட்டுள்ளனர். பணிகளை ஓ.பன்னீர்செல்வம் நேரில் சென்று பார்வையிட்டார்.
எண்ணெய்ப் படலத்தை அகற்றும் பணியை தமிழக அரசும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பல்வேறு துறைகளும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன. கிட்டத்தட்ட 5 ஆயிரத்து 700 பேர் பணியில் ஈடுபட்டுள்ளனர். இன்னும் ஓரிரு தினங்களில் எண்ணெய்ப் படலம் முழுமையாக அகற்றப்படும் என்று அவர் தெரிவித்தார். (ம)

# ட்ரம்பின் தடைக்குத் தடா உச்ச நீதிமன்றம் அதிரடி

### கேலிக்குரியது என ட்ரம்ப் சாடல்



வொஷிங்டன், பெப். 6
ஈராக், ஈரான், சிரியா, லிபியா, சோமாலியா, சூடான் மற்றும் ஏமனில் இருந்து அமெரிக்காவுக்கு பயணிப்பவர்களுக்கு 90 நாட்கள் நுழைவிசைவுத் தடை விதித்தார் ட்ரம்ப். இந்தத் தடை நடைமுறையில் இருந்துவந்த நிலையில் ஒபாமாவின் காலத்தில் நுழைவுச்சீட்டுக்கு விண்ணப்பித்திருந்த 60 ஆயிரம் பேருக்கு அமெரிக்காவுக்குள் நுழைய அனுமதி வழங்கியது உச்சநீதிமன்றம்.
உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட பொதுநல வழக்கொன்றின் அடிப்படையிலேயே குறித்த 60 ஆயிரம் பேர் மட்டில் இந்தத் தடை திரும்பப் பெறப்படுகிறது என்று உச்ச நீதிமன்ற நீதிபதி ஜேம்ஸ் றொபாட் அறிவித்தார்.
அமெரிக்காவின் பாதுகாப்பு தொடர்பிலும் குறித்த 7 நாடுகளில் இருந்து அமெரிக்காவின் சுய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளது என்றும் ட்ரம்ப் தரப்பில் வாதிடப்பட்ட போதிலும் எவையும் எடுபடவில்லை.
நீதிபதியின் இந்த உத்தரவுக்கு அதிபர் ட்ரம்ப் தனது கண்டனத்தைத் தெரிவித்தார்.
அனைவரினதும் மட்டிலும் தடை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அரசின் அதிகாரம் மிக்க ஆணையின் மீது நீதிபதிகள் அதிகாரம் செலுத்துவது கேலிக்குரியது என்றும் ட்ரம்ப் சாடினார்.
7 நாடுகள் மீதான ட்ரம்ப்பின் தடையுத்தரவை நிரந்தரமாக நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி கலிபோர்ணியா, வோஷிங்டன், நியூயோர்க் போன்ற முக்கிய இடங்களில் உள்ள மன்றுகளிலும் வழக்குகள் தொடரப்பட்டன. (ம-எ)

# உலக தீவிரவாதத்தின் முதுகெலும்பு ஈரான் பகிரங்க குற்றச்சாட்டை முன்வைத்தது அமெ.



உலக தீவிரவாதத்துக்கான முதுகெலும்பாக ஈரான் உள்ளது என்று பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியது அமெரிக்கா.
அணுகுண்டு ஏவுகணைச் சோதனையொன்றை ஈரான் அண்மையில் வெற்றிகரமாக நடத்தி முடித்தது. இதற்கு அமெரிக்கா எதிர்ப்புக்களை வெளிப்படுத்திப் பல்வேறுபட்ட பொருளாதாரத் தடைகளையும் ஈரான் மீது திணித்துள்ளது. இந்த இரு நாடுகளுக்கும் இடையில் கருத்து மோதல்கள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், உலகப் பயங்கரவாதத்தின் முதுகெலும்பாக ஈரான் உள்ளது என்று பகிரங்கமான குற்றச்சாட்டை அமெரிக்க முன்வைத்தது.
ட்ரம்ப் தடைவிதித்த ஏழுநாடுகள் கொண்ட பட்டியலிலும், குவைத் தடை விதித்த ஐந்து நாடுகளைக் கொண்ட பட்டியலிலும் ஈரான் உள்ளமை குறிப்பிடத்தக்கது.
அமெரிக்காவின் கருத்துக்கு ஈரானின் தரப்பிலும் தக்க பதிலடி கொடுக்கப்பட்டது. நாட்டைப் பாதுகாப்பதற்காக நாம் இரவு பகலாக பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகிறோம். அதற்குப் பெயர் பயங்கரவாதம் அல்ல. ஏனைய நாடுகளைத் தாக்க வேண்டிய அவசியம் எமக்கு ஏற்பட்டதில்லை. ஆனாலும் ஏனைய நாடுகளின் தாக்குதலில் இருந்து எம்மைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும் என உள்துறை அமைச்சு தகவல் வெளியிட்டது. (ம-எ)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காணாமற்போனோரைக் கண்டுபிடிக்க தகவல் அறியும் சட்டம் பயன்படுமா?

வெகுகாலமாக எதிர்பார்க்கப்பட்ட தகவல் அறியும் உரிமைக்கரன சட்டம் கடந்த 3ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாக அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் பிரகாரம் அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் முதலியவற்றிலிருந்து தகவல்களை அறிந்து கொள்ள விரும்பும் எந்தவொரு குடிமகனும் அந்த நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தாம் விரும்பும் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். தகவல் தருவதற்கென 52 அமைச்சுகளுக்கும் 85 திணைக்களங்களுக்கும் தகவல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். 25 மாவட்டச் செயலகங்களில் 18 செயலகங்களுக்கும், 326 பிரதேச செயலகங்களில் 250 பிரதேச செயலகங்களுக்கும், 328 கூட்டுத்தாபனங்களில் 258 கூட்டுத்தாபனங்களுக்கும் ஒன்பது மாகாணசபைகளில் ஏழு மாகாண சபைகளுக்கும் தகவல் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவ்வாறு நியமிக்கப்படாத நிறுவனங்களின் தலைவர்கள் தகவல் தரும் பொறுப்பில் இருப்பார்கள் என்று அரச தகவல்துறை பணிப்பாளர்நாயகம் கலாநிதி ரங்க கலன் சூரிய தெரிவித்துள்ளார்.

உலகிலேயே சிறப்பான தகவல் அறியும் சட்ட ஆக்கங்களில் இலங்கையின் சட்டமானது 10ஆவது இடத்தைப் பெறுவதாக விதந்து கூறப்படுகின்றது. எக்ஸஸ் இன்ஃபோ இஸரோப் நிறுவனமும் அமெரிக்காவில் அமைந்துள்ள சென்ரஃபோர் லோ அன் டிமொக்ரஸி என்ற நிறுவனமும் இணைந்து வெளியிட்டுள்ள தரப்படுத்தலில் 150 இடங்களில் 121ஆம் இடத்தை இது பெற்றிருப்பதாகக் கூறப்படுகின்றது. இது உண்மையில் பன்னாட்டு மட்டத்தில் இலங்கையின் கௌரவத்தை மேலும் கட்டி எழுப்ப உதவியாக இருக்கும் என்று கருதப்படுகின்றது. ஜெனிவா மனித உரிமைகள்சபை கூடி இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள இருக்கும் காலகட்டத்தில், இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்திருப்பதன் கபடம் புரிந்து கொள்ளக் கூடிய ஒன்றே. எனவே இலங்கையின் 69ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்பட இருந்த தறுவாயில் தகவலறியும் சட்டமானது நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டதன் சூட்சுமம் பன்னாட்டு மட்டத்தில் அரசு மனித உரிமை விடயத்தில் கொண்டிருக்கும் அக்கறையை வெளிப்படுத்தி நல்ல பெயரை நிலைநிறுத்திக் கொள்வதே முக்கிய நோக்கம் என்று கூறத் தேவையில்லை.

இந்தச் சட்டமானது மிக எளிமையானது போல் அதிகாரிகளாலும் அமைச்சர்களாலும் காட்டிக் கொள்ளப்பட்டாலும், நடைமுறையில் சில விடயங்களில் சிக்கல் மிக்கதாகவே இருக்கும் என்று நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

தகவல் அறியும் சட்டம் உருவாக்கப்படுவதற்கு முன்னரே அவசியம் இல்லாத பிரிவொன்றை அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் அரசு உள்ளடக்கி உள்ளது. இதனால் தகவல் அறியும் ஆணையத்தின் உறுப்பினர்கள் மீது பெரும் பாரம் ஒன்று சுமத்தப்படுகின்றது. தகவல் அறியும் சட்டத்தின் கீழ் அவர்கள் தகவல் வெளியிடுகையில், அரசமைப்பின் குறித்த பிரிவை மீறாமல் செயற்படுவதாய் இருப்பது அவசியமாக்கப்பட்டுள்ளது என்கிறார்கள் நிபுணர்கள். குறிப்பாக வடக்கு – கிழக்கில் போரினால் பாதிப்புக்குள்ளான மக்கள் தமது குடும்ப உறுப்பினர்களைக் கண்டுபிடிப்பதற்கு இந்தச் சட்டத்தைக் கையில் எடுப்பார்களானால் ஆணையம் அவர்களுக்கு தகவல்களை வழங்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும். அதே சமயம் அரசமைப்பின் 14அ (2) இற்கு முரண்படாமலும் அவர்கள் செயற்பட்டாக வேண்டும் என்ற நிலைமை இருப்பதாக நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

குடிமக்களின் தகவல் அறியும் உரிமை ஒரு பக்கம் இருக்கும் அதே சமயம் “குழப்பங்கள் குற்றங்களைத் தடுக்கவும் சுகாதாரம், ஒழுக்கம் மற்றும் கௌரவம் அல்லது மற்றவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவுமான தேசிய பாதுகாப்பு, ஆள்புல ஒருமைப்பாடு அல்லது பொது மக்கள் பாதுகாப்பு என்பவற்றின் நன்மை கருதி இவை தொடர்பான எந்த வித தக்வலும் குடிமக்களுக்கு வழங்கப்பட மாட்டாது” என்றிருக்கும் அரசமைப்புப் பிரிவை அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். இந்தப் பிரிவை அதிகாரிகள் பயன்படுத்திக் கொண்டு குடிமக்கள் கோரும் தகவல்களை வழங்க மறுக்கக் கூடும். அவ்வாறான நிலைமையில் தகவல் கோரும் குடிமக்கள் தகவல் அறியும் ஆணைக்குழுவின் உதவியை நாட முடியும் என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

உண்மையில் இவ்வாறு ஒரு நிலை ஏற்படும் பட்சத்திலேயே தகவல் அறியும் ஆணைக்குழுவின் தகுதி மற்றும் பயன்பாடு வெளிப்படுவதாய் இருக்கும். காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் பொது நலன் விரும்பும் எவராவது தகவல் அறியும் ஆணைக்குழுவை இப்போது அணுகுவது பற்றி ஆலோசிக்க முடியும் என்றே தோன்றுகிறது. அரசு அவசரமாக நடைமுறைப்படுத்தி உள்ள சட்டம் உண்மையில் மக்கள் நலன் சார்ந்தது தானா என்பதைப் புரிந்து கொள்ளவும் நம்பிக்கை கொள்ளவும் இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக இருக்கும். பயன்படுத்திப் பார்ப்போமா?



# யாழ்ப்பாணத்துக்கான நன்னீர் வழங்கல் திட்டம் எதிர்நோக்கும் சவால்கள்

வழிமூலம் த ஐலண்ட்
மொழியாக்கம்
நித்தியபாரதி

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்துக்காக 2010இல் ஆசிய அபிவிருத்தி வங்கியால் 130 மில்லியன் டொலர் பெறுமதியான கடன் வசதி வழங்கப்பட்டது. இத்திட்டத்துக்கான உள்ளூர்ச் செலவுகளுக்காக 26 மில்லியன் டொலர் நிதியானது கொழும்பு அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

யாழ்ப்பாண நகரம் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் வாழும் 300,000 மக்களுக்கு பாதுகாப்பான குடிதண்ணீர் வசதியை வழங்குதலும், யாழ்ப்பாண நகரைச் சேர்ந்த 80,000 மக்களுக்கு சுகாதார வசதியை வழங்குவதையும் நோக்காகக் கொண்டே இந்தத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்துக்காகத் தேவைப்படும் நீரை, கிளிநொச்சி இரணைமடுக் குளத்திலிருந்து பெற்றுக் கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இரணைமடுக் குளத்தின் நீர் பளைக்கு அருகிலுள்ள சுத்திகரிப்பு நிலையத்துக்கு பாய்ச்சப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வழங்கப்படுவதே இந்தத் திட்டத்தின் நோக்காகக் காணப்பட்டது.

ஆனால் அந்தத் திட்டத்தைக் கிளிநொச்சியைச் சேர்ந்த விவசாயிகள் எதிர்த்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். இரணைமடுக் குளத்திலிருந்து பெறப்படும் நீரானது தமது சிறுபோக நெற்பயிர்ச் செய்கையின் 30 சதவீதத்தை மேற்கொள்வதற்கு மட்டுமே போதுமானதாக உள்ளதாகவும், இந்த நீரை யாழ்ப்பாணத்துக்கும் வழங்கினால் அதனால் தாம் பாதிக்கப்படுவோம் எனவும் கிளிநொச்சி வாழ் விவசாயிகள் தெரிவித்தனர்.

இவ்வாறான ஆர்ப்பாட்டங்களின் காரணமாக, இந்தத் திட்டத்துக்கான மூல நீரை இரணைமடுக் குளத்திலிருந்து பெறுவது என்பது கைவிடப்பட்டு, அதற்குப் பதிலாக மருதங்கேணிக்கு அருகிலுள்ள தாளையடி கடற்கரையில் அமைக்கப்படும் ஊடுகசிவு உவர் நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து நீரைப் பெற்றுக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

உவர்நீரைக் குடிதண்ணீர்க் தேவைக்காக மாற்றும் சுத்திகரிப்பு நிலையமானது நாளொன்றுக்கு 24 மில்லியன் லீற்றர் நீரைக் கொள்திறனாகக் கொண்டுள்ளது. இந்தத்திட்டத்துக்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட கடனானது 94 மில்லியன் டொலராகக் குறைக்கப்பட்டது. எனினும், உவர்நீர்ச் சுத்திகரிப்பு ஆலைகளை நிறுவுவதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும் அதிக செலவினம் ஏற்படுமென்பதால், இத்திட்டத்திற்கான மேலதிக கடனாக 120 மில்லியன் டொலர் நிதி, ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படுமென உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தாளையடியில் நாளொன்றுக்கு 24 மில்லியன் லீற்றரைக் கொள்திறனாகக் கொண்ட உவர் நீர்ச் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றைக் கட்டுவதற்கும், அதனை இயக்குவதற்குமான இந்தத் திட்டத்தை மேற்கொள்வதற்கான ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான முடிவுத் திகதியாக இந்த ஆண்டு மே மாதம் 02ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### தொண்டமானாறு தடுப்பணை

இந்த வகையான சுத்திகரிப்பு ஆலைகளை அமைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் வெளிப்புறம் வளைந்து கொடுக்கும் விளிம்புகளைக் கட்டுவதற்கான செலவு அதிகம் என்பதாலேயே, இந்த ஆலைகளுக்கான செலவும், அதிகமாகக் காணப்படுகின்றது. அதாவது கடலிலிருந்து இந்த ஆலைக்கு நீரைப் பாய்ச்சுவதற்கு உயர் அழுத்தம் கொண்ட நீர்ப்பம்பிகள் தேவையாக உள்ளன.

இந்தப் பம்பிகள் இவ்வாறான மெல்லிய வளைந்து கொடுக்கும் விளிம்புகளின் ஊடாகவே நீரைப் பாய்ச்சுகின்றன. இதற்கு அதிக மின்சாரம் தேவைப்படுகிறது. நாளொன்றுக்கு 24 மில்லியன் லீற்றர் நீரைப் பாய்ச்சும் இவ்வாறான சுத்திகரிப்பு ஆலையானது கிட்டத்தட்ட ஐந்து தொடக்கம் ஆறு மெகாவோற் மின்சாரத்தை நுகரும்.

இலங்கையில் அமைக்கத் தகுந்த விதத்தில், சென்னையில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லீற்றர் உவர் நீர்ச் சுத்திகரிப்பு ஆலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சென்னையிலும்

இலங்கையைப் போன்றே மின்சாரச் செலவினத்துக்கான கொடுப்பனவு பெறப்படுகிறது. இந்த ஆலையானது 2010இல் உருவாக்கப்பட்டு சென்னை நீர் சுத்திகரிப்பு நிறுவனத்தால் இயக்கப்படுகிறது.

இந்த நிறுவனத்தினால் சுத்திகரிக்கப்படும் நீர் சென்னை நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சபைக்கு விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு விற்கப்படும் நீரின் விலை, 2005ல் லீற்றர் ஒன்று 1.03 பொலர் என நிர்ணயம் செய்யப்பட்டது. இதேபோன்றே வடமராட்சி கிழக்கு தாளையடியில் ஆலை ஒன்று நிறுவப்பட்டால், அதற்கான செலவினமும் இதை விட அதிகமாகக் காணப்படும். சென்னை மீஞ்சூர் நீர்ச்சுத்திகரிப்பு ஆலையில் நாளொன் றுக்கு 100 மில்லியன் லீற்றர் நீர் சுத்திகரிக்கப்படும், அதேவேளையில் தற் போது பரிந்துரைக்கப்பட்டுள்ள தாளையடி நீர்ச் சுத்திகரிப்பு ஆலையில் நாளொன்றுக்கு 24 மில்லியன் லீற்றர் நீர் மட்டுமே சுத்திகரிக்கப்படும் என்பதால், சென்னையை விட இதற்கான செலவு அதிகமாகவே காணப் படும். அண்ணளவாக தாளையடியில் உவர்நீர் சுத்திகரிக்கப்பட்டால் ஒரு லீற்றருக்கு 1.20 டொலர் செலவினம் ஏற்படும்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்துக்கான ஆறு ஒன்றை உருவாக்கும் திட்டம் (A River for Jaffna) ஒன்று இதற்கான மாற்றுத் திட்டமாக முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினமும் குறைவாகவே காணப்படுகிறது.

இந்தத் திட்டமானது, உள்ளூர் பொறியியலாளர்களால் வரையப்பட்டுள்ளது. இதற் கான மூலதனச் செலவானது உவர்நீர்ச் சுத்திகரிப்பு ஆலைக்கான செலவிலிருந்து பத்தில் ஒரு பங்கு குறைவானதாகும். இந்தத் திட்டத்துக்குநீர் பாய்ச்சல் தேவையில்லை என்பதால் இதற்கான பராமரிப்புச் செலவு குறைவாகக் காணப்படும்.

**யாழ்ப்பாணத்துக்கான ஆறு:**

இந்தத் திட்டமானது, 50 ஆண்டு களுக்கு முன்னர் பரிந்துரைக்கப்பட்டது. இதற்கான பணிகள் 50 ஆண் டுகளுக்கு முன் னர் ஆரம்பிக்கப்பட்டு இது பகுதியளவில் நிறைவு செய்யப்பட்டது. யாழ் குடாநாட்டின் நீர்த் தேவையை நிறைவு செய்வதற்காக நிலத்தடி நீர்த் தேக்கத்தைப் பயன்படுத்தி சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதே இத்திட்டத்தின் நோக்காகும்.

**யாழ்ப்பாண ஆறு திட்டம்**

இந்தத் திட்டத்தின் நோக்கம், யாழ்ப்பாணக் கிணறுகளிலுள்ள உவர்த் தன்மையைக் குறைப்பதுடன், உவர்த் தன்மையால் விவசாயச் செய்கை பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் மீண்டும் விவசாயப் பயிர்ச்செய்கையை ஆரம்பித்தலாகும். இத்திட்டத்தின் மூலம் தற்போது உவர்த் தன்மையைக் கொண்டுள்ள யாழ்ப்பாணத்தின் 30 சதவீதமான கிணறுகளில் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் மாற்ற முடியும். இத்திட்டமானது பின்வரும் பகுதிகளைக் கொண்டுள்ளது. அவை யாவன:

மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் உவர் நீர் கலப்பதைத் தடுப்பதற்காக தொண்டமானாறு அணையை மீளவும் நிர்மாணித்தல். இதன்மூலம் வடமராட்சி கடல் நீரேரியை நன்னீர் நீரேரியாக மாற்ற முடியும்.

மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் உவர் நீர் கலப்பதைத் தடுப்பதற்காக, அரியாலையில் புதிய அணை ஒன்றை நிர்மாணித்தல். இதன்மூலம் உப்பாறு கடல் நீரேரியை சுத்தமான குடிதண்ணீரைப் பெற் றுக் கொள்ளக்கூடிய நீரேரியாக மாற்ற முடியும்.

ஆனையிறவு வீதி மற்றும் ரயில் தண்டவாளப் பாலங்களின் கீழாக உள்ள துளைகளைத் தடைசெய்து ஆனையிறவு கடல்நீரேரியின் கிழக் குப் புறமுனையிலுள்ள சுண்டிக்குளத்தில் புதிய அணை மற்றும் வடிகாலைக் கட்டுதல். இதன்மூலம் ஆனையிறவு கடல் நீரேரியைக் குடிதண்ணீரைப் பெறக் கூடிய நீரேரியாக மாற்றமுடியும்.

ஆனையிறவுக் கடல்நீரேரி, வடமராட்சி கடல்நீரேரி மற்றும் உப்பாறுக் கடல் நீரேரி ஆகிய மூன்று கடல்நீரேரிகளின் நீரையும் கொண்டு செல்வதற்காக நான்கு கிலோமீற்றர் நீளமான புதிய தொரு முள்ளியான் இணைப்புக் கால்வாய் ஒன்றை உருவாக்குதல்.

யாழ்ப்பாணத்துக்கான ஆறு என்கின்ற இந்தத் திட்டத்தை முற்றுமுழுதாக நிறைவு செய்வதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு நீர்ப்பாசனத் திணைக் களம் பல்வேறு முயற்சிகளை மேற் கொண்ட போதிலும், அவை சாதகமான பயனைத் தரவில்லை. எனினும், ஐந்து அல்லது ஆறு ஆண்டு களுக்கு முன்னர் தொண்டமானாறு அணைக்கட்டைப் சீரமைப்பதற்காவும் அரியாலை அணைக் கட்டை நிர்மாணிப்பதற்காகவும், நிதி வழங்கப்பட்டது. இவ்விரு அணைக் கட்டுக்களுக்குமான பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய் யப்பட்டுள்ளன. வடமராட்சி மற்றும் உப்பாறு நீரேரிகள் நன்னீ ரைக் கொண்டுள்ளன. ஆனாலும் ஆனையிற வுக் கடல் நீரேரியானது தற் போதும் உவர்நீர்க் கடல் நீரேரியாகவே காணப்படுகிறது.

நாடு முழுவதிலும் தேசிய நீர்ப் பயன்பாட்டு பெரியளவி லான திட்டம் ஒன்றின் கீழ் 30 நீர்த் திட்டங்களை மேற் கொள்ளுமாறு ஆஸ்திரேலிய பொறியியலாளர்களிடம் கோரப் பட்டுள்ளது. அடுத்த இருபது ஆண்டு களில் இந்தத் திட்டங்கள் நிறைவு செய் யப்பட வேண்டும். இதில் யாழ்ப்பாணத்துக் கான ஆற்றுத் திட்டமானது முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான சாத்தியக் கூற்று ஆய்வும் மேற்கொள் ளப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை மேற் கொள்வதற்கு 1,400 மில்லியன் ரூபாக்கள் அல்லது 9.4 மில்லியன் அமெரிக்க டொலர் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

**அரியாலை தடுப்பணை**

யாழ்ப்பாணத்துக்கு நாளொன்றுக்கு 25 மில்லியன் லீற்றர் நீர் தேவை எனவும், இது பரிந்துரைக்கப்பட்ட தாளையடி சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப் படும் என வரையறுக்கப்பட்ட 24 மில் லியன் லீற்றர் நீரை விட அதிகமாகக் காணப்படுவதாகவும், 2006 மார்ச் மாதம் வெளியிடப்பட்ட யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



இவ்வாறான நீர்ச் சேகரிப்புக் கிணறுகளை யாழ்ப்பாணக் குடாநாட்டில் அமைக்கும் போது உவர்நீர்ச் சுத்திகரிப்பு ஆலைகளை விட இவற்றுக்கான செலவு குறைவாகவே காணப்படும் என்பதுடன் மக்களின் தேவைக் கேற்ப நீர் வழங்க முடியும் எனவும் கண்டறி யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கான ஆற்றுத் திட்டத்தை நிறைவு செய்வதற்கான மூல நீரைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக 2009இல் ஆசிய அபிவிருத்தி வங்கி யைச் சேர்ந்த மணிலாவிற்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. இதில் ஆனையிறவுக் கடல்நீரேரியிலிருந்து நீரைப் பெற்று இந்தத் திட்டத்தை மேற்கொள்ள முடியும் என யோசனை முன்வைக்கப்பட்டது.

இந்தக் கடிதத்துக்கு 2009 ஜூலை மாதத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தென்னாசியத் திணைக் களத்தின் நகர அபிவிருத்திப் பிரி வின் இயக்குநரால் எழுதப்பட்ட பதில் கடிதத்தில் "நாங்கள் தங்களின் திட் டத்தை ஏற்றுக் கொள்கிறோம். அதாவது யாழ்ப்பாணத்துக்கான ஆற்றுத் திட்டமானது அடிப்படையில் அங்கு வாழும் மக்களின் விவசாய மற் றும் நிலத்தடி நீர்த் தேவைக்காகப் பயன்படுத்தப்படும் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் இந்தத் திட்டம் மேலும் ஆராயப்பட வேண்டும்". எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தாளையடி உவர் நீர்ச் சுத்திகரிப்பு நிலையத் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டால் யாழ்ப்பாணத்துக்கான ஆறு என்கின்ற திட்டம் நடைமுறைப்படுத் தப்பட மாட்டாது என்பதே உண்மையாகும். ஆண்டின் சில மாதங்களில் ஆனையிறவுக் கடல்நீரேரிக்குள் கனகராயன் ஆற்றிலிருந்து சுத்தமான நீர் பெறப்பட்டு அங்கிருந்து சுண்டிக் குளம் கடலுக்குள் இந்த நீர் பாயும்.



அதேவேளை, இதற்கு ஒரு சில கிலோ மீற்றர் இடைவெளியிலுள்ள தாளையடியில் அதிக செலவில் உவர் நீர்ச் சுத்திகரிப்பு ஆலை ஒன்று அமைக்கப்பட்டு அதற்கான பராமரிப்புச் செலவும் அதிகமாக உள்ள இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.



# வாசகர் திருமுகம்

## வடக்கு விவசாய அமைச்சு கவனத்தில் கொள்ளுமா?

என்னுடைய அவதானிப்பில் யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகள் எல்லாவற்றையும் விட வலி.கிழக்குப் பிரதேசத்திலேயே விவசாயச் செய்கைக்குப் பெரும்பாதிப்பை ஏற்படுத்தி வரும் பாதீனியச் செடிகளது பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக நம்புகிறேன். இதற்குக் காரணம் வலி. கிழக்குப் பகுதிக்குள் அடங்கும் பெரும்பாலான கிராமங்களில் உப உணவுப் பயிர்ச் செய்கை மற்றும் வாழைப் பயிர்ச்செய்கை பெருமளவில் இடம்பெறுவதாகும். அத்தோடு இந்தப் பகுதிகளில் குறிப்பிட்ட அளவுக்கு விவசாய முயற்சிகள் மேற்கொள்ளப் படாத வெற்றுக் காணிகளும் உள்ளன. விவசாய முயற்சிகளில் ஈடுபடுவோர் தத்தமது தோட்டங்களுக்குப் பாய்ச்சும் நீரினால் அந்தப் பகுதிகள் எப்போதும் ஈரலிப்பாக இருப்பதால் தோட்டங்களை அண்டியுள்ள வெற்றுக் காணிகளில் பாதீனியச் செடிகள் பற்றிப் பெருகி சிறு பற்றைகள் போன்று ஆகி விடுகின்றன. போதாததற்கு அண்மையில் பெய்த மழையும் இவற்றின் அபிரிமித பெருக்கத்துக்கு ஒரு காரணம். அதுவுமன்றி குறித்த வெற்றுக் காணிகளது உரிமையாளர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளிலும் பிற மாவட்டங்களிலும் வதிவோராவர். இந்த நிலையில் விவசாயத்தில் ஈடுபடுவோர் தத்தமது தோட்ட எல்லைகளில் வளர்ந்து பெருகும் பாதீனியச் செடிகளை அழித்தொழிக்க முடியுமேயன்றி வெற்றுக் காணி களிலுள்ள செடிகளை அழித் தொழிக்க இயலாது. எனவே விவசாய முயற்சி களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் பாதீனியச் செடிகளை குறித்த பிரதேசத்திலிருந்து முற்றாக அழித்தொழிப்பதற்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சு முன்னுரிமை வழங்கி உதவ வேண்டும்.

*பொ.பரமேஸ்வரன், நீர்வேலி*

## பாவனைக்குச் சிரமம் தரும் வீதிக்கு விமோசனம் கிட்டுமா?

என்ன தான் குடாநாட்டின் பெரு வீதிகள் புனரமைப்புக்கு உட்படுத்தப்பட்ட போதிலும் கிராமப்புறங்களில் உள்ள கிளை வீதிகளுக்கு இன்னமும் விமோசனம் கிட்டவில்லை. பிரதேச சபைகள் அரசியல் ரீதியில் செயற்பட்ட வேளை யில் உறுப்பினர்கள் காட்டாத அக்கறையையா, அரசசம்பளம் பெறும் பிரதேச சபைச் செயலாளர்கள் காட்டிவிடப் போகிறார்கள். உரும்பிராயின் முக்கிய கிளை வீதிகளான சிவன் வீதி மற்றும் செல்லப்பா வீதி என்பது கடந்த சில ஆண்டுகளாக மோசமான நிலையில் காட்சியளிக்கின்றது. உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட்டாலாவது இந்த வீதிக்கு விமோசனம் கிட்ட வாய்ப்புண்டா என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

*இ.கணேசலிங்கம், உரும்பிராய் கிழக்கு*



# பிரதமருக்கு மீண்டும் உணர்ச்சிகரமான கடிதம் எழுதிய கவுதமி

முதலமைச்சர் ஜெயலலிதா இறப்பு குறித்த தகவலை தெரிவிக்கக் கோரி, இந்திய தலைமை அமைச்சர் மோடிக்கு மீண்டும் உணர்ச்சிகரமான கடிதத்தை கவுதமி எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டதாவது–

ஜெயலலிதா இந்திய அரசியலில் மிக உயர்ந்த நிலையை அடைந்தவர், மிகுந்த ஆளுமை திறன் கொண்டவர். அனைத்து துறைகளிலும் உள்ள பெண்களுக்கு உத்வேகமாக அமைந்தவர். தமிழ்நாடு அவரது தலைமையின் கீழ் பல்வேறு முன்னேற்றங்களையும், வளர்ச்சிகளையும் பெற்றது. அவர் ஒரு மறக்க முடியாத வலிமையான சக்தி கொண்டவர். எல்லா பிரச்சினைகளையும் விடா முயற்சியுடன் உறுதியாக இருந்து தீர்த்து வைத்தவர். அவர் எல்லா மக்களுக்கும் ஊக்க சக்தியாக திகழ்ந்தவர்.

அவருடைய மறைவு எல்லோருக்கும் மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ள அதே நேரத்தில் மருத்துவமனையில் இருந்து சிகிச்சை பெற்றது தொடர்பாக பல மர்மங்கள், பதில் அளிக்க முடியாத கேள்விகள் இருக்கின்றன. ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை மற்றும் அவரைக் கவனித்துக் கொள்ளும் உரிமை, அவரது உடல்நலம் பற்றிய விவரங்கள் போன்றவற்றுக்கு யார் பொறுப்பு என்று முடிவு எடுத்தது யார்? இது சம்பந்தமாக மக்களுக்கு எவர் பதில் சொல்வது? இதுபோன்ற கேள்விகள் தமிழக மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அவர்களுடைய கேள்விகளை உங்களுடைய கவனத்துக்கு நான் கொண்டு வருகிறேன்.

இந்தியாவின் அனைத்து குடிமகன்களுக்கும் தங்களது உரிமையைக் கேட்டு போராட உரிமை உள்ளது. அதேபோல் இந்த ரகசியங்களையும் அறிய அவனுக்கு உரிமை இருக்கிறது.

எனவே ஜெயலலிதா சாவு குறித்த உண்மையை தாங்கள் மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று கூறினார். சமூக வலைதளங்களின் மூலமும் மக்களை அவ்வப்போது சந்தித்து வரும் இந்திய தலைமை அமைச்சர் மோடி சமூக வலைத்தளம் மூலமாகவும், நேரிலும் கடிதத்தை அளித்தும் உண்மை நிலவரம் தெரியவில்லை. எனினும் மோடி மீது முழு நம்பிக்கையுடன் இருக்கின்றேன் என்றுள்ளது என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** மனதில் குழப்பம் உருவாகி மறையும். எதிர்பார்ப்பு நிறைவேற்றுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். உடல்நலத்துக்கு சிகிச்சை தேவைப்படும். பெண்களால் உதவி உண்டு.

**இடபம்:** அக்கம் பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மிதுனம்:** குடும்பத் தேவைகள் குறைவின்றி நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். உணவு உண்பதில் கட்டுப்பாடு தேவை.

**கடகம்:** முக்கியமான செயல் எளிதாக நிறைவேறும். தொழில் வளர்ச்சி பெற முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபவிடய பேச்சு நடக்கும். பிள்ளைகளின் தேவையறிந்து வாங்கித் தருவீர்கள்.

**சிங்கம்:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். குடும்பத்தினர் ஆதரவாக நடந்து கொள்வர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். லாபம் உயரும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கன்னி:** எதிலும் முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். தாய்வழி உறவினரால் நன்மை உண்டாகும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**துலாம்:** உறவினர் எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். எவரிடமும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு சக ஊழியர் ஒத்துழைப்பர்.

**விருச்சிகம்:** மனதில் உறுதி நிறைந்திருக்கும். எதிரியால் இருந்த தொந்தரவு விலகும். தொழில், வியாபாரத்தில் கடந்த கால உழைப்பின் பயன் கிடைக்கப் பெறுவீர்கள். பணி யாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்ல வாய்ப்புண்டு.

**தனுசு:** புதிய முயற்சிகள் சிறப்பாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உண்டாகும். பிள்ளைகளுக்கு விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர்.

**மகரம்:** சிலர் பயனற்ற வகையில் உங்களிடம் பேசுவர். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறை சரி செய்வீர்கள். சராசரி பணவரவு கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். மனைவி வழியில் உதவி கிடைக்கும்.

**கும்பம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு மறையும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**மீனம்:** பெற்றோரின் சொல்லுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தாமதமான பணி, புதிய முயற்சியால் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் செய்வீர்கள். பெண்கள் புத்தாடை, நகை வாங்க யோகம் உண்டு.

நேற்று இராத்திரி. திருடன்
தொலைக்காட்சி ரிமோட்டை
தூக்கிட்டு ஓட ஆரம்பிச்சிட்டான்
அடடா.... அப்புறம்




என் காப்பு, சங்கிலி எல்லாம்
கழட்டி கொடுத்து ரிமோட்டை
வாங்கிட்டன்...

அண்ணே... தேசிய கீதம்
பாடினதுக்கு அப்புறமும் அடிச்சாங்களா?
ஆமாண்டா...
எங்கே பாடிக் காட்டுங்க?



நீராரும் கடலுடுத்த...
ஆமா உங்களை உயிரோடையா விட்டாங்க?

தனி நபர் சந்தோசத்துக்கு
மொபைல் ∴ போன்
பழுதாகணும்



குடும்பத்தோட சந்தோசத்துக்கு
தொலைக்காட்சி பழுதாகணும்....

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | 6 | | 8 | 2 | | |
| | | | | | 5 | | 7 | 4 |
| | | 5 | | | | | 6 | |
| | | 3 | | 4 | | | | |
| | | | | 3 | | 6 | | 1 |
| | | 2 | | | 6 | 3 | | |
| | | | 4 | | 9 | | 2 | |
| 1 | | | | | | | | 8 |
| | 9 | | | 7 | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 6 | 9 | 8 | 5 | 4 | 7 |
| 8 | 4 | 9 | 2 | 7 | 5 | 3 | 6 | 1 |
| 6 | 7 | 5 | 4 | 1 | 3 | 8 | 2 | 9 |
| 9 | 5 | 4 | 1 | 3 | 2 | 7 | 8 | 6 |
| 3 | 1 | 8 | 7 | 6 | 4 | 2 | 9 | 5 |
| 7 | 6 | 2 | 8 | 5 | 9 | 4 | 1 | 3 |
| 2 | 3 | 6 | 9 | 4 | 7 | 1 | 5 | 8 |
| 4 | 9 | 7 | 5 | 8 | 1 | 6 | 3 | 2 |
| 5 | 8 | 1 | 3 | 2 | 6 | 9 | 7 | 4 |

சுடோக்கு

ஒரு எண் விளை யாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாகப்பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

ரொம்ப நாளாக நம்மாளு
செல்போனுக்கு ஒரு ஆளு
மிஸ்டு கோல் கொடுத்து
கலாய்த்துக் கொண்டே
இருந்தார்.
இதுக்கொரு தீர்வு
கட்டணும் என்று
நினச்சவர்...
தன்னோட சிம் கார்ட்டை
மாத்திட்டு, அந்தாளுக்கு ஒரு
குறுஞ்செய்தி
அனுப்பினாரு...
“அடேய்... என்னையா
என்ன முட்டாளுன்னு
நினைச்சியா... இப்போ நான்
நம்பரை மாத்திட்டேன்.
இனிமே உன்னால ஒண்ணும்
பண்ண முடியாது”.

# பெப்ரவரி மாத பலன்



## 2017 மேடம்

புத்தி சாதுரியத்தால் புகழையும், செல்வத்தையும் பெறும் மேட ராசிக்காரர்களே, இந்த காலகட்டத்தில் ராசிநாதன் செவ்வாய் உங்கள் ராசிக்கு அயன, சயன, போக ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்தாலும், அதிகாரம் பெற்ற குரு உங்கள் ராசியைப் பார்ப்பதால் எண்ணிய காரியங்களை திறமையாகச் செய்து முடிப் பீர்கள். தனாதிபதி சுக்கிரனின் உச்ச பலத்தால் பணவரவு இருக்கும். எதிர் பார்த்த இடமாற்றம் கிடைக்கும். பயணம் செல்ல வேண்டியிருக்கும். சில முக்கியமான முயற்சிகள் அதிக உழைப்பின் பேரில் செய்ய வேண்டி இருக்கும். சொத்துக்கள் மீது கவனம் தேவை. தொழில் ஸ்தானாதிபதி சனியின் சஞ்சாரத் தால் தொழில், வியாபாரம் செய்பவர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்தி வியாபாரம் செய்ய வேண்டி இருக்கும்.



நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த வேலைகள் வந்து சேரும். பழைய பாக்கிகள் வசூல் தாமதமாக இருந்தாலும், பணம் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புக்கள் கிடைக்கலாம். வேலை தொடர்பாக வெளியூரில் தங்க நேரிடலாம். குடும்பாதிபதி சுக்கிரன் விரய ஸ்தானத்தில் உச்சமாக இருக்கிறார். குடும்பத்தில் இருப்பவர்கள் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் தாமதப்படும். ராசிக்கு 12இல் சுக்கிரன் சஞ்சாரம் இருப்பதால் வாழ்க்கைத் துணைக்காக செலவு செய்ய வேண்டி இருக்கும். கணவன், மனை விக்கிடையில் அன்பு அதிகரிக்கும். சிற்றின்ப செலவுகள் கூடும். அக்கம், பக்கத்தினரிடம் கவனமாகப் பேசுவதும் வாக்குவாதத்தை தவிர்ப்பதும் நல்லது.

பெண்கள் சில முக்கியமான காரியங்களைக் கூடுதலாக கவனம் செலுத்துவதன் மூலமும் அதிக உழைப்பினாலும் செய்து முடிப்பீர்கள். வெளியூர்ப் பயணம் செல்ல நேரிடும். கலைத்துறையினருக்கு காரணமில்லாமல் மனதில் தைரியம் குறையும். பண வரவுக்குக் குறைவு ஏற்படாது. உங்களின் தன்னம்பிக்கை உயரும். வாழ்க்கையில் முன்னேற வேகம் காட்டுவது நல்லது. மனக்குழப்பம் நீங்கும். தீவிர உழைப்பும், அதிக முயற்சிகளுடன் காரியங்களில் ஈடுபடுவீர்கள். மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும். அரசியல்துறையினருக்கு மனக்கவலை குறையும். எல்லா வகையிலும் சாதகமான பயன் கிடைக்கப் பெறுவீர்கள். திடீர் செலவு உண்டாகலாம். திட்டமிட்டபடி செல்ல முடியாமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம். எந்தக் காரியத்தையும் யோசித்து செய்வது நன்மை தரும். மாண வர்கள் கல்வியில் முன்னேற்றமடைய கூடுதல் நேரம் ஒதுக்கி படிப்பது நல்லது. கல்வி தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கும்.

**பரிகாரம்:**
செவ்வாய்க்கிழமைகளில் விரதம் இருந்து முருகன் பதிகம் படித்து வழிபடுவது எல்லா நன்மைகளையும் தரும். அலைச்சலை தவிர்க்கும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**
செவ்வாய், வியாழன்.

**நாளை** தை-25
செவ்வாய்க்கிழமை -07.02.2017
திதி: ஏகாதசி பி.ப.01.23
நட்சத்திரம்: மிருகசீருடம் பி.ப.01.29
சுபநேரம்:11.05-12.35 வரை
ராகுகாலம்:03.35-05.05 வரை
பீம ஏகாதசி விரதம்




## நகைப் பெட்டிகள்

மரத்தால் ஆன நகைப் பெட்டிகள் அறிமுகமாகியுள்ளன. நகைகள் வைப்பதற்காக பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட இவை 350 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகிறது.



## தேங்காய் இட்லி

### தேவையான பொருள்கள்

பச்சரிசி - 1 கப்
தண்ணீர் - 3 கப்
துருவிய தேங்காய் - 1/2 கப்
கடலைப்பருப்பு - 2 தேக்கரண்டி
பாசிப்பருப்பு - 1 தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவ

### செய்முறை

பச்சரிசியை மிக்சியில் சற்று சொரசொரப்பாக ரவை போல் அரைக்கவும். சட்டியில் தண்ணீர், கடலைப் பருப்பு. பாசிப்பருப்பு, தேங்காய்த்துருவல், உப்பு சேர்க்கவும். தண்ணீர் கொதிக்க ஆரம்பித்ததும் அரைத்த அரிசியைத் தூவி கட்டி இல்லாது கெட்டி யாக கிளறி அடுப்பை அணைக்கவும். சற்று ஆறிய தும் எண்ணெய் தடவிய, சற்று குழியான தட்டில் கொட்டி பரப்பி, 20 நிமிடம் ஆவியில் வேகவிடவும். நன்கு ஆறியதும் எடுத்து தேங்காய் சம்பலுடன் பரி மாறலாம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி புஸ்பவதி கனகலிங்கம்



தோற்றம் 1947.04.10 மறைவு 2017.02.05

தெல்லிப்பழை கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி கனகலிங்கம் 05.02.2017 ஞாயிற்றுக் கிழமை காலமானார்

அன்னார் கனகலிங்கத்தின் அன்பு மனைவியும் நடராசா-இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் ஆனந்தராணி, அமுதலிங்கம், ஆனந்தவேல் (ஆனந்தி) ,அமுதராணி ஆகி யோரின் அன்புத் தாயும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2017) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்.நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஞானவைபிரவர் கோயிலடி,**
**தெல்லிப்பழை கிழக்கு.**

**தகவல்:**
**ஆனந்தவேல்(ஆனந்தி)**

### தம்பையா திருநீலகண்டன்
**(முன்னாள் கொழும்பு பிரபல வர்த்தகர்)**



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், சரவணை கிழக்கை வாழ்விடமாகவும் தற்போது இல.11, பரமேஸ்வரா வீதி, திருநெல்வேலியை வதிவிட மாகவும் கொண்ட தம்பையா திருநீலகண்டன் 05.02.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**11,பரமேஸ்வரா வீதி,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**
**(தபால் பெட்டிச் சந்தி)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### திருமதி செல்வபத்மாவதி சின்னத்துரை (பத்மா)



மலர்வு 15.11.1943 உதிர்வு 04.02.2017

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், மன்னார் உயிலங்குளத்தை வசிப்பிடமாகவும், தற்போது 64/08 ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வபத்மாவதி சின்னத்துரை(பத்மா) (04.02.2017) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற R.S. சின்னத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா - யோகம்மா தம்பதியரின் பெறாமகளும் காலஞ்சென்ற கபிலராஜா மற்றும் ரகுலராஜா (வவா), விமலராஜா (வவி - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் வனஜா ( முன்னாள் காணித்திட்டமிடல் அதிகாரி யாழ். செயலகம் - லண்டன்), கலாரூபன் (ரூபன் ஸ்ரோர்ஸ் இராமநாதன் வீதி ) காலஞ்சென்றவர்களான காண்டீபன் (பொபி), கேதீஸ்வரன் மற்றும் விநோபாகரன் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகுதாயும் காலஞ்சென்ற அன்ரனி (லண்டன்) மற்றும் கமலாதேவி (சைலா), சாம்பவி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மாமியும் டரன், ஹர்சன், திவ்யா, நேத்ரா (லண்டன்), அர்ஷன், டான்சன் (யா/ இந்துக்கல்லூரி), கீர்த்திகன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ராகவி (வண்/ வைத்திலிங்கம் வித்தியாலயம்), அகனிதன், சாஷா (அமெரிக்கா), வைசாலி (அமெரிக்கா) ஆகியோரின் அருமைப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.02.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**64/08, புகையிரத வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 6020 622**

## ராணுவத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை வீட்டிலிருந்து சென்ற சிறுவன் இரவு வரை வீடு திரும்பவில்லை. தாயார் அம் மம்மா வீட்டுக்குச் சென்று பார்த்தபோது அங்கு சிறுவன் வரவில்லை என அவர் கூறியுள்ளார். அதன் பின் சிறுவனைத் தேடும் பணியில் வீட்டுக்காரரும் அயலுள்ளவர்களும் ஈடுபட்டனர். எங்கு தேடியும் காணாத நிலையில் பெற்றோரால் நேற்றுமுன்தினமிரவு 9 மணியளவில் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

ஆங்காங்கே சிறுவனைத் தேடிக்கொண்டிருந்தவேளை இவர்களின் வீட்டுக்கு அண்மையில் உள்ள கைவிடப்பட்ட வாகனச் சுத்திகரிப்பு நிலைய கழிவு கிடங்கில் சிறுவன் சடலமாக கிடப்பதை நேற்று காலை உறவினர்கள் கண்டுபிடித்தனர். இந்த வாகன சுத்திகரிப்பு நிலையமானது இராணுவத்தினர் நல்லிணக்கபுரத்தில் இருந்த காலத்தில் பயன்படுத்தி வந்தனர். இராணுவம் வெளியேறியதை அடுத்து கிட்டத்தட்ட 10 வருடங்களுக்கு மேலாக இந்த வாகன சுத்திகரிப்பு நிலையம் பயன்பாட்டுக்கு உட்படாமல் இருந் தது. கழிவுக் கிடங்கு சுமார் 15 அடி ஆழமானது. வாகன சுத்திகரிப்பு நிலையம் பாவிக்காமல் விட்டதன் பின்பு வெள்ள நீர், மழைநீர், கழிவு நீர் தேங்கி இந்தக் கிடங்கு காணப்பட்டது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்தப் பிரதேசத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டது. மீள்குடியேற்றம் செய்யப் பட்டதன் பின்புகூட உரிய அதிகாரிகளால் இந்தக் கழிவுக் கிடங்கு மூடப்படாத நிலையிலேயே இருந்தது.

கழிவுக் கிடங்குக்குப் பக்கத்தில் கற்குவியல் காணப்பட்டது. இந்தச் சிறுவன் அந்தக் கற்குவியலில் ஏறி விளையாடிக் கொண்டிருப்பதை அந்தப் பகுதியில் உள்ள சிலர் கண்ணுற்றனர். தவறுதலாக அதற்குள் விழுந்து சாவடைந்திருக்கலாம் என்று விசாரணை களில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற நீதிவான் விசாரணைகளை முன்னெடுத்தார். சடலம் உடற் கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-10, 26)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலாதேவி சிவசண்முகானந்தக் குருக்கள்



இல.140, பருத்தித்துறை வீதி,யாழ் வண்ணை வீரமாகாளி அம்மன் கோயிலடியை பிறப்பிடமாகவும் யாழ் கொல்லன்கலட்டி வீரகத்தி விநாயகர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காமலாதேவி சிவசண் முகானந்தக் குருக்கள் 05.02.2017 ஞாயிற்றுக் கிழமை காலமானார்

அன்னார் காலம்சென்ற சின்னச்சாமிக்குருக்கள் - தங்கம்மா தம்பதியினரின் புதல்வியும் சண்முலிங்கம், செல்வராஜா குருக்கள் (காந்தி ஐயா) காலம் சென்ற ஜெயரட்ண சிங்கம் மற்றும் விஜிதா(வதனா-கொல ண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பராசக்தி, இரத்தினேஸ்வரி, குகநிதி, நவலஸ்சுமி, விஜயச் சந்திரன்,மேகலா ஆகியோரின் மைத்துனியும் நேசனின் சகலியும் சாரதாதேவி, மதன்சுசீந்தரநாத் (பிரான்ஸ்), கிற்றா, கார்திகாயினி, சஞ்சீவ்பாபு(சிங்கப்பூர்), ராஜீவ்பாபு, துஸ்யந்தன்,ரேசிகேசன்,கஜானனன் ஆகியோரின் மாமியும் பிரசன்னாவின் (கொலண்ட்) பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (05.02.2017)தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.140,பருத்தித்துறை வீதி.**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர் சார்பாக**
**S .வசந்தகுமார்.**

### திருமதி காமாட்சி தம்பிராசா



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு புகையிரத வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காமாட்சி தம்பிராசா 05.02.2017 ஞாயிற்றுக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- சின்னம்மா தம்தியரின் மகளும் வைத்தியநாதர்- சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் வைத்தியநாதர் தம்பிராசாவின் அன்பு மனைவியும் சோதிநாதன் (நெடுந்தீவு பிரதேச சபை), ரதிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் காந்திமதி (ஆசிரியை, பெரியபுலம் மகா வித்தியாலயம்), மணிவண்ணன் ஆகியோரின் அன்பு மாமியும் கனகம்மா, வைத்தியலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பவித்திரன், லக்சனா, நிருசனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.02.2017) திங்கட்கிழமை பி.ப ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புகையிரத வீதி,**
**கொக்குவில் கிழக்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## ட்ரம்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரனையும், ராஜீவ விஜேசிங்கவையும் பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு இலங்கை அரசுக்கு ஆலோசனை முன்வைத்துள்ளார் அரசியல் விமர்சகரும் இராஜதந்திரியுமான தயான் ஜயதிலக.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராஜதந்திரச் சமரின்போது இலங்கைக்குக் கடும் நெருக்கடி கொடுத்த சமந்தா பவர்; நிசா பிஸ்வால் ஆகியோரை அமெரிக்காவின் புதிய அரச தலைவர் டொனால்ட் டிரம்ப் பதவி மாற் றம் செய்துள்ளதால், இந்தச் சந்தர்ப்பத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஜெனிவாத் தீர்மானத்திலிருந்து விடுபடுவதற் குரிய அரிய வாய்ப்பு இலங்கை அரசுக்குக் கிடைத்துள்ளது.

இதற்காக இரண்டு சிறப்புத் தூதுவர்களை இலங்கை அரசு நியமிக்க வேண்டும். டிரம்பின் குடியரசுக் கட்சியின் முக்கிய உறுப்பினர் களுடன் தொடர்பை வைத்துள்ள முன்னாள் அரச தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்தனவின் பேரனான பிரதீப் ஜெயவர்தன, பிரிட்டனின் தற்போதைய தலைமை அமைச்சருடன் திரசா மேயுடன், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்த - சிறந்த நட்புறவைப் பேணி வரும் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க ஆகிய இருவரையும் பயன்படுத்தி தீர்மானத்திலிருந்து விடுபடலாம் - என்றார்.

(வ-5)

## விசாரணைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கான நோர்வே தூதரகம் இது பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளது.. நோர்வேயை மையமாகக் கொண்டு இயங்கி வரும் புலம்பெயர் தமிழர் தரப்பே நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை படுகொலை செய்ய முயற்சித்தது என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க அண்மையில் கூறியிருந்தார்.

உத்தியோகபூர்வ அடிப்படையில் கோரிக்கை விடுக்கப்பட்டால் சுமந்திரன் கொலை முயற்சி விசாரணைகளுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் உதவத் தயார் என்று நோர்வேத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து ஊடகங்களில் செய்தி வெளியிடப் பட்டபோதிலும் இதுவரையில் உத்தியோகபூர்வமாக எவ்வித கோரிக்கையையும் முன்வைக்கவில்லை என்று நோர் வேத் தூதரகம் தெரிவித்துள்ளது. (வ-5)

## சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏன் இவ்வாறான பேச்சுக்கள் வருகின்றன என்பதைப் பற்றி ஆராய வேண்டியுள்ளது.இராணுவம் தொடர்ந்து நிலை கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக இந்தக் கதைகள் வெளிவருகின்றனவோ தெரியாது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைக் கொலை செய்வதற்கு முயற்சித்த சந்தேகத்தில் முன்னாள் போராளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது தொடர்பில் முதலமைச்சரிடம் பத்திரிகையாளர்கள் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனக்கு ஒரே ஒரு விடயம்தான் தெரியும். பொலிஸார் நாடாளுமன்ற உறுப்பினருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக எதுவுமே நீதிமன்றுக்குக் கூறவில்லை. போதைப் பொருள் வைத்திருந்ததாகத்தான் நீதிமன்றுக்கு குறிப்பிட்டுள்ளார்கள். இதில் ஏதாவது உண்மை இருந்தால் அதை அவர்கள் நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தி இருக்க வேண்டும். ஆனால் தெரியப்படுத்தவில்லை. எனவே எந்தளவுக்கு உண்மை ஏன் இவ்விதமான பேச்சுக்கள் நடைபெறுகின்றன என்பதைப் பற்றி நாங்கள் ஆராய வேண்டி இருக்கின்றது.

ஆனால் நாங்கள் ஒன்றை நினைவில் வைத்திருக்க வேண்டும். காலத்துக்குக் காலம் ஏதோ ஒருவருக்கு உயிர் அச்சுறுத்தல் வருகின்றது. பதற்றநிலை வருகின்றது. இராணுவம் தொடர்ந்து நிலை கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக இந்தக் கதைகள் வெளிவருகின்றனவோ தெரியாது - என்றார்.

இதேவேளை வடக்கு மாகாண அரசு போர்க்குற்ற விசாரணையை நடத்துவது தொடர்பில், தான் சட்டம் தெரியாமல் பேசவில்லை என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இந்த அரசு போர்க்குற்ற விசாரணையை செய்ய மாட்டாது என்பதை உலகுக்கு காட்டவே அவ்வாறு தெரிவித்தாகக் கூறினார். (வ-5-10)

# முதல்வர் பதவிக்கு ஒப்புக்கொண்டமைக்கு இப்படி விளக்கம் தருகிறார் வி.கே. சசிகலா



சென்னை, பெப். 6

கட்சியின் பொதுச் செயலராகவும் தமிழக முதலமைச்சராகவும் ஒருவரே இருக்க வேண்டும் என்பதை அனைவரும் வலியுறுத்தி வந்தனர். அவர்கள் அனைவரின் கோரிக்கைகளையும் நான் ஏற்கிறேன், என்று அ.தி.மு.க சட்டமன்றக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அ.தி.மு.க. பொதுச் செயலர் வி.கே. சசிகலா தெரிவித்தார்.

கட்சித் தலைமையகத்தில் நடந்த அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் ஒரு மனதாக சட்டப்பேரவைக் கட்சித் தலைவராகத் தேர்வு செய்யப்பட்ட சசிகலா, ஏற்புரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

ஜெயலலிதா மறைந்த உடனே, கட்சியின் பொதுச் செயலராகவும், முதலமைச்சராகவும் நானே பொறுப்பேற்க வேண்டும் என ஓ. பன்னீர்செல்வம் முதன் முதலில் வலியுறுத்தினார். ஆனால், அப்போது எதையும் ஏற்கும் மன நிலையில் நான் இல்லை.

அ.தி.மு.கவினர் தொடர்ந்து என்னைச் சந்தித்து கோரிக்கை வைத்ததால் கட்சியின் பொதுச் செயலராகப் பொறுப்பேற்றேன். அதேபோல், இப்போதும், கட்சியின் பொதுச் செயலராகவும், முதலமைச்சராகவும் ஒருவரே இருக்க வேண்டும் என்ற உங்கள் அனைவரின் கோரிக்கையையும் நான் ஏற்கிறேன்.

ஜெயலலிதா அவர்களின் கனவை முழுமையாக நிறைவேற்றுவேன். மக்களுக்காக இந்த ஆட்சி செயற்படும் என்று சசிகலா உறுதியளித்தார்.

கட்சிக்கு சோதனை வந்த போதெல்லாம், ஜெயலலிதா அவர்கள் முதல்வராகத் தொடர முடியாத போதெல்லாம், கட்சித்தலைமைக்கு விசுவாசமாகத் திகழ்ந்தவர் ஓ.பன்னீர் செல்வம் என்று அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

ஜெயலலிதா மறைவுக்குப்பின்னர் அ.தி.மு.கவில் விரிசல் வராதா என்று கனவு கண்ட அரசியல் எதிரிகளின் எதிர்பார்ப்புகளைப் பொடிப்பொடியாக்கிய நிர்வாகிகளுக்கும் கட்சித் தொண்டர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் சசிகலா தெரிவித்தார். (வ)

## சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவும் பதிவுகள்

தமிழகத்தின் முதல்வராக அ.தி. மு.க பொது செயலாளர் வி.கே.சசிகலா தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவும் பதிவுகளை இங்கே காணலாம்.




பையனை வீட்டு வேலைக்கு சேர்த்துவிடுங்கோ... எதிர் காலத்தில நல்ல வரம் இருக்கு...




அ.தி.மு.க. துன்பத்தை சந்தித்துள்ள வேளை...






தூங்கி எழுகிறதுக்குள்ள முதல்வர மாத்திப்போட்டிங் களேடா...

**கல்பேட் கோழிகள் விற்பனைக்கு**

4 1/2 மாதம் நிரம்பிய முட்டையிடும் பருவமுடைய கல்பேட் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு :- 077 245 3673

**விற்பனைக்கு**

அரச ஊழியரின் பாவனையில் நல்ல நிலையில் உள்ள HERO HONDA CD DELUXE மோட்டார் சைக்கிள், உடன் விற்பனைக்கு.
தொடர்பு - 077 578 2684

**கைதவறிவிட்டன**

அச்சுவேலி தெற்கு, விக்கினேஸ்வரா வீதியைச் சேர்ந்த **தணிகாசலம் வேணுதர்சன்** ஆகிய எனது தேசிய அடையாளஅட்டை (902022414V), வங்கி ATM அட்டை ஆகியன கடந்த புதன்கிழமை (01.02.2017) பத்தமேனி பிள்ளையார் கோயிலுக்கும், பத்தமேனி நெசவு சாலைக்கும் இடையில் கை தவறிவிட்டன. தயவு செய்து எடுத்தவர்கள் தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு - 021 3205 871, 077 8054 723

**அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**திரு. சிவலிங்கம் சிவதாஸன்**

(Na.Dip in teach, B.A(Hons), PGDE, M.Ed)



31.01.2017 அன்று கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு வைபவத்தில் "கல்வி முதுமாணி" (M.Ed) பட்டம் பெற்ற அச்சுவேலியின் மைந்தனும், மட்டுவில் தெற்கு வளர்மதி பிரதேசத்தின் உயர் பட்டங்களைப் பெற்றவர்களில் ஒருவராக இருந்து எம் ஊருக்கே பெருமை தேடித்தருபவரும், "யாழ் பாரதி" வெளியீட்டின் இணை ஆசிரியரும், புலமைச்சாறு நூலின் ஆசிரியரும், அகில இலங்கை சமாதான நீதிவானும், யா/நாவற்குழி மகா வித்தியாலய ஆசிரியருமான திரு. சிவலிங்கம் சிவதாஸன் அவர்களை உளமாரப் பாராட்டுவதுடன் அவர் மேலும் பல பட்டங்கள் பதவிகள் பெற்று உயர்வடைந்து எம் சமூகத்திற்கு நற்பணியாற்ற அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
திரு.வே.சுந்தரலிங்கம் குடும்பம், திரு.க.முல்லைமாறன் குடும்பம்
திரு.செ.பரணீதரன் குடும்பம், திரு.சி.டினேசன்

**கோடிபதி ஷனிடா**

சீட்டிழுப்பு வாரம்: 96
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 05.02.2017
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 75,000,000/-
R 02 08 45 61

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 05.02.2017 | வெற்றி வாரம் 2092 | வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 06 17 19 28
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 8, 175, 849/=
2017.02.07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும். வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

**16 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு**



**அமரர் பொன்னையா தம்பிப்பிள்ளை**

(ஓய்வுபெற்ற அரசாங்க லிகிதர் - யாழ்.கச்சேரி)

தோற்றம் 29.04.1930 மறைவு 20.01.2017

கடந்த 20.01.2017 சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (06.02.2017) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். **இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.**

88(24), செல்லர் வீதி, நல்லூர்.
குடும்பத்தினர். 077 472 3233

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**திருமதி ஞானபவானி இந்திரபாகு**



**திருமதி துளசி வாசுதேவன்**



**திருமதி கார்த்திகா உதயகுமார்**

பட்டம் - கல்விமாணிப் பட்டம் (BED)
இடம் - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்
திகதி - 31 ஜனவரி 2017

*Congratulations*

**பணியாளர் நலன்புரி சங்கம்**
**யா/தேவரையாளி இந்துக் கல்லூரி, கரவெட்டி**

**கண்ணீர் அஞ்சலி**



எமது கல்லூரியின் ஆசிரியர் **R.S.சந்திரகுமார்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**இராமலிங்கம் சண்முகநாதன்**

அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

## கொழும்பின்...

வெளிப்படுத்துவார் என்று தெரியவருகின்றது. கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தபோது இந்த விடயங்களை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் சுட்டிக்காட்டினார் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபை தகவல் வெளியிட்டுள்ளது.

பன்னாட்டு பொருளாதார மாநாடு கடந்த ஜனவரி மாதம் சுவிஸின் டாவோஸ் நகரில் நடைபெற்றது. கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருந்தார். மாநாட்டின் பக்க நிகழ்வாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைனை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்திருந்தார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் தலைமை அமைச்சர் அலுவலக ஊடகக் குறிப்பில், இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் முன்னேற்றமடைந்திருப்பதாக ஐ.நா. ஆணையாளர் தெரிவித்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இணையத்தளத்தில் இந்தச் சந்திப்புத் தொடர்பிலான தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

'தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பு நட்பு ரீதியானது. மனித உரிமைகள் தொடர்பில் பரந்தளவிலான விடயங்கள் பேசப்பட்டன. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நல்லிணக்கச் செயலணி தொடர்பில் எந்தக் கருத்தும் பரிமாறப்படவில்லை. ஐ.நா. தீர்மானம் தொடர்பில் பல விடயங்களில் குறிப்பாக பொறுப்புக் கூறல் தொடர்பில் இலங்கை அரசு மந்தமாகச் செயற்படுவதை ஆணையாளர் சயிட் தலைமை அமைச்சர் ரணிலுக்குச் சுட்டிக்காட்டினார். இந்த விடயங்கள் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மார்ச் மாத அமர்வில் தனது அறிக்கையில் எதிரொலிக்கும் என்றும் ஆணையாளர் சயிட் தலைமை அமைச்சரிடம் மேலும் தெரிவித்தார்' என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இணையத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5)

## கரையை...

வத்தினர் எம்மை ஏமாற்றி விட்டனர்.இவ்வாறு குற்றஞ்சாட்டுகின்றார் வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம்.

ஊறணி கடற்கரையின் 500 மீற்றர் பிரதேசம் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் வாழ்வாதார நன்மை கருதியே ஊறணியில் 500 மீற்றர் கடற்கரை விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மக்களுடன் நான் நேற்றுச் சென்று பார்வையிட்டேன்.

மக்களின் வாழ்வாதார நன்மைகள் கவனத்தில் கொள்ளப்படவில்லை. அந்தப் பகுதி மக்களை ஏமாற்றும் செயல் வடிவமாகவே இந்த விடுவிப்புச் செயற்பாட்டைக் கருத வேண்டியுள்ளது. 500 மீற்றர் நீளத்துக்கு வெறும் கடல் விடுவிக்கப்பட்டுள்ளது. மக்கள் எவ்வாறு தொழில் செய்ய முடியும் ?

மீனவர்கள் எங்கு படகை நிறுத்துவது? எங்கு வாடி அமைத்து இயந்திரங்கள் வலைகளைப் பாதுகாப்பது ? எந்த நிலத்தில் வலைகளை உலர வைப்பது ? இதற்கான தொழிலாளர் எங்கு தங்குவது ? எவற்றையுமே கருத்திற்கொள்ளாது விடுவிக்கப்பட்ட இந்தப் பிரதேசத்தால் ஒரு மீனவக் குடும்பம் கூட நன்மையடைய முடியுமா?

மக்கள் நலனில் அக்கறை கொண்டு, உண்மையாக விடுவிப்புச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் செய்வதாக இருந்தால், காங்கேசன்துறை – பருத்தித்துறை வீதியின் வடக்குப் பகுதியை முழுமையாக விடுவிக்க வேண்டும். அவ்வாறு விடுவிக்கும் சந்தர்ப்பத்தில் உடனடியாக அங்கே 217 குடும்பங்கள் மீள்குடியமரலாம்.

அவர்களின் வாழ்வாதார உபகரணங்களான படகுகள் வலைகளைக் கொண்டுவந்து அந்தப் பகுதியில் கடலில் தொழில் புரிவர். அதுவே உண்மையான வாழ்வாதாரமாக கருதப்படும் – என்றார். (வ-5-101)

## இந்தியப்...

இவ்வாறு கொழும்பு அரசின் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: வட பகுதி மீனவர்களின் விருப்பத்துக்கு இணங்க இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த விடயம் தொடர்பில் வட பகுதி மீனவர்களுடன் கலந்துரையாடப்படவுள்ளது.

இந்திய மீனவர்களின் படகுகள் மற்றும் ஏனைய உபகரணங்களைத் தடுத்து வைப்பதற்கு போதியளவான இடங்கள் இல்லை என்று கடற்படை அறிவித்துள்ளது. எனினும் அவர்களது படகுகளை விடுவிப்பது தொடர்பில் இதுவரை தீர்மானமேதும் எடுக்கப்படவில்லை – என்றார். (வ-5)

## வாள்வெட்டு...

பதிவின் ஊடாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நல்லூர் – அரசடிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றின் மீது, 3 மோட்டார்சைக்கிளில் சென்ற 10 பேர் கொண்ட கும்பல் பெற்றோல் குண்டு வீசியதுடன், அங்கு நின்ற இளைஞர்கள் மீது வாளால் வெட்டித் தாக்குதல் மேற்கொண்டிருந்தனர்.

இந்தத் தாக்குதலின் பின்னர், அந்தப்பகுதி வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி காணொலிப் பதிவுகளைப் பெற்றுக்கொண்ட பொலிஸார், இளைஞர்களைத் தேடி வந்திருந்தனர்.

கோப்பாய் மற்றும் அரியாலைப் பகுதிகளில் களவு மற்றும் வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்ட 14 இளைஞர்கள் கடந்த சில நாள்களில் யாழ்ப்பாண குற்றத்தடுப்பு பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

கைதுசெய்யப்பட்டிருந்தவர்களில் கோப்பாய் மற்றும் அரியாலை, கொக்குவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள் 4 பேர் அரசடிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வாள் வெட்டு மற்றும் பெற்றோல் குண்டு வீச்சுடன் சம்பந்தப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-106)

## மோசடியில்...

சர்கள் சிலர் தனியாக சிறப்புக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து அமைச்சர்களான மகிந்த அமர வீர, நிமல் சிறிபால டி சில்வா, எஸ்.பி. திஸாநாயக்க ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அமைச்சர்களான கபீர் ஹாசிம், மலிக் சமரவிக்ரம ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்களுக் குள்ளாகியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் குறித்து இதன்போது ஆராயப்பட்டதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-4)

## பயங்கரவாதத்...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினரும், பேச்சாளருமான எம்.ஏ.சுமந் திரன் தெரிவித்தார்.

'தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை விடுவிக்க வேண்டும் என்று கத்திக்கொண்டு திரிந்தவர் சுமந்திரன். அவர்களால் கொலை முயற்சி இடம்பெற்றதற்கு அவர்தான் பொறுப்பு' என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார். அவரின் இந்தக் கருத்துத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:

அவர்களை விடுவிக்க வேண்டும் என்று நான் இப்போதும் கத்துகின்றேன். எனக்கு எதிராகக் கொலை முயற்சி இடம்பெற்ற காரணத்தால் அவர்கள் விடுவிக்கப்படக் கூடாது என்று நான் சொல்லவில்லை. அவர்கள் விடுவிக்கப்படத்தான் வேண்டும். பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதை என்னுடைய வாழ்க்கை முழுக்கச் சொல்லியுள்ளேன். அதனை இப்போதும் சொல்கின்றேன்.

என்னைக் கொலை செய்ய முயன்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக ஏன் பயங்கரவாத தடைச் சட்டம் பாவிக்கப்படவில்லை என்று சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர். அந்தச் சட்டம் பாவிக்கப்படக் கூடாது. அது எனக்கு எதிரானதாக இருந்தாலும் கூட பயன்படுத்தப்படக் கூடாது. அது நீக்கப்பட வேண்டிய சட்டம். இந்தச் சந்தர்ப்பத்தில் விசாரணையாளர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தாமல் விடுவது எனக்கு நிம்மதி. சாதாரண சட்டத்தில் விசாரணையைக் கொண்டு நடத்தட்டும்.

அதற்காக என்னைக் கொலை செய்வதற்கு நடந்த முயற்சி பாரதூரமானது இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் அந்தச் சட்டம் பயங்கரமான ஒரு சட்டம். அந்தச் சட்டத்தைப் பாவிக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு கொலை முயற்சி நடந்திருந்தால் அதற்கான விசாரணைகள் நடத்த வேண்டும்.

போர்க் காலத்தில் அரசியல் நோக்கத்தை வைத்துக் கொண்டு செயற்பட்டவர்கள் என்ற காரணத்தால் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் போர் முடிந்த பின்னர் விடுவிக்கப்பட வேண்டும். தனி நாட்டைப் போரினால் உருவாக்குகின்ற அரசியல் நோக்கம் இல்லை என்ற காரணத்தால் அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

எனக்கு எதிரான கொலை முயற்சிக்கும் இந்த விடயங்களுக்கும் தொடர்பு இல்லை. இப்போது கொலை முயற்சி நடந்திருந்தால், அது தனிநாடு உருவாக்கும் – அரசுக்கு எதிரான போராகக் கருத முடியாதுதானே? இலட்சிய நோக்குடன் இந்த முயற்சி முன்னெடுக்கப்படவில்லை – என்றார். (வ-5)

## சம்பந்தனின்...

கிடைக்கவில்லை. செயலர் விடுப்பில் இருக்கிறார் என்று கூறப்பட்டது. இந்த விடயத்தில் பாதுகாப்பு அமைச்சு இனி யும் காலங்கடத்த முடியாது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு, கேப்பாபிலவு மக்களின் நியாயமான கோரிக்கை தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு இனியும் காலங்கடத்தாது உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என நான் நேரடியாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்தேன். எனினும் இன்று (நேற்று) 3 நாள்கள் கடந்து விட்டபோதும் ஆக்க பூர்வமாக நடவடிக்கை எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

கேப்பாபிலவு மக்களின் நியாயபூர்வ கோரிக்கை தொடர்பில் கடந்த வியாழக் கிழமை காலையில் நாடாளுமன்ற உறுப்பின் சாந்தி சிறிஸ்கந்தராஜா எனது கவனத்துக்கு கொண்டு வந்திருந்தார். நான் உடனடியாகவே அது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரது கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தேன்.

பாதுகாப்புத் தரப்பினருக்கான அறிவித்தல்களில் காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம். எனவே உடனடியாக ஆராய்ந்து சீர் செய்வதாக அவர் வாக்குறுதியளித்தார். இருப்பினும் அது தொடர்பில் இதுவரைக்கும் எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக் கையும் மேற்கொள்ளப்படாமை வேதனைக் குரியது.

எனவே இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரோடு மீளவும் தொடர்பு கொள்ள பலமுறை முயற்சித்தேன். எனினும் அவரைத் தொடர்பு கொள்ளமுடியவில்லை. அவர் சுகவீனம் காரணமாக விடுப்பில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிலக்குடியிருப்பு மக்களின் நியாயமான கோரிக்கைக்கு அரசு ஆவன செய்தே ஆக வேண்டும். எனவே இன்றைய தினம் அது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் – என்றார். (வ-101)

## முதல்வராகிறார்...

கூட்டத்தில் அ.தி.மு. கழக சட்டப் பேரவைக் குழுத் தலைவராகத் தெரிவானார். முதலமைச்சர் பதவியிலிருந்து ஓ.பன்னீர்செல்வம் விலகினார். இதனையடுத்து சசிகலா முதல்வராவது உறுதியானது.

ஓ.பன்னீர்செல்வம் முதல்வர் பதவியிலிருந்து எப்போது வேண்டுமென்றாலும் விலகலாம். அந்த இடத்துக்கு சசிகலா வருவார் என்ற கருத்துக்கள் நீண்டகாலமாக இருந்துவந்த நிலையில் அவை மெய்ப்படும் வகையில் அ.தி.மு. கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டம் நேற்று நடந்து முடிந்தது.

அ.தி.மு. கழகச் சட்டப் பேரவைக் குழுத் தலைவராக சசிகலா தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான தீர்மானம் ஆளுநரிடம் ஒப்படைக்கப்படும். முதல்வராகப் பொறுப்பேற்குமாறு சசிகலாவுக்கு ஆளுநர் அழைப்பு விடுப்பார். அதை சசிகலா ஏற்றுக்கொள்வார் என்று அ.தி.மு. கழகத்தின் மூத்த உறுப்பினர்கள் தெரிவித்தனர் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. நாளை அல்லது 9ஆம் திகதி சசிகலா முதல் வராகப் பதவியேற்பார் என்றும் ஊடகங்கள் தெரிவிக்கப்பட்டது. பெரும்பாலும் 9ஆம் திகதி பதவியேற்கவே அதிக வாய்ப்பு என்றும் குறிப்பிடப்பட்டது. அத்துடன் பதில் முதல்வராக ஓ.பன்னீர்செல்வம் செயற்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

சசிகலாவுக்கு ஆதரவாகவும் எதிராகவும் பல அரசியல் தலைவர்கள் கருத்துத் தெரிவித்தனர். சசிகலாவை முதலமைச்சராக மக்கள் ஏற்கமாட்டார்கள். மக்கள் எண்ணத்திற்கு எதிராக அ.தி.மு.க.வினர் செயற்பட்டுள்ளனர். முதலமைச்சர் ஜெயலலிதா பதவி விலகியபோது ஓ.பன்னீர்செல்வத்தைத்தான் முதலமைச்சராக தேர்வு செய்தார்கள். இப்போது, சசிகலாவை முதல்வராக தேர்வு செய்திருப்பது, ஜெயலலிதாவின் விருப்பத்துக்கு நேர்மாறானது என்று தி.மு. கழகத்தின் செயல் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ஸ்டாலின் தெரிவித்தார்.

இதேவேளை, தனிப்பட்ட காரணங்களுக்காகவே முதலமைச்சர் பதவியிலிருந்து விலகுவதாக ஓ. பன்னீர்செல்வம் தமிழக ஆளுநருக்கு நேற்றிரவு அறிவித்தார்.

(வ-ம)

## கூட்டமைப்பிடமிருந்து...

இவ்வாறு கூட்டு அரசின் அமைச்சர் மனோ கணேசன் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவரது நேற்றைய பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அரசியல் தீர்வு தொடர்பில் ஒவ்வொரு கட்சிக்கும் வெவ்வேறு நிலைப்பாடுகள் உள்ளன. ஆனால், காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணாமற்போனோர் விவகாரம் ஆகியவை உள்ளிட்ட தமிழ் மக்களின் வாழ்வாதார பிரச்சினைகள் தொடர்பில் அனைத்துத் தமிழ் கட்சிகளிடமும் ஒத்த கருத்துத்தான் உண்டு.

இவை தொடர்பாக, ஆளும் அணியில் இருப்பவர்கள் தனியாகவும், எதிரணியில் இருப்பவர்கள் தனியாகவும் அரச உயர்மட்டத்துடன் பேசுவது ஒரு முறைமையாகும்.

அடுத்தது, அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரச உயர்மட்டத்துடன், எதிரணி சிங்கள தலைவர்களுடன், கட்சிகளுடன், தமிழ் மக்கள் இன்று எதிர்நோக்கும் காணி, கைதிகள், காணாமற்போனோர், இன்னும் பல பொது விவகாரங்கள் தொடர்பில் கலந்து பேசுவது இன்னொரு முறைமையாகும்.

இதற்காக அனைத்துத் தமிழ் கட்சிகளும் நாடாளுமன்றத்தில் கூடி பேசி, 'தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றியம்' அமைக்க வேண்டும். இதன்மூலம் தமிழ் மக்களின் பொதுப் பிரச்சினைகள் தொடர்பில் அரச, எதிரணி சிங்கள கட்சிகளுடன் பேசுவோம் என்றும், யோசனையை நான் முன்வைத்தேன். எனது யோசனை பற்றித் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரிடம் நான் ஒரு மாதத்துக்கு முன்பே தெரிவித்துள்ளேன். ஆனால், இதுவரை அது தொடர்பில் கூட்டமைப்பிடமிருந்து தெளிவான பதில் இல்லை.

போராடும் அப்பாவி மக்கள், குறிப்பாக தாய்மார்கள் படும்பாட்டை பார்க்க மனம் கொந்தளிக்கின்றது. ஒரு அமைச்சராக இருந்து கொண்டு இதைவிடவும் என்ன செய்ய முடியும் என்று நான் யோசிக்கிறேன். எனது யோசனைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாரா? என்பதைக் கேட்டுச் சொல்லுமாறு அவர் பதிவிட்டுள்ளார். (வ-5)




## இறைவணக்கம்

கருணை காட்டு இறைவா!
கல்வி புகட்டு இறைவா!
உதவி புரிவாய் இறைவா!
உயர வைப்பாய் இறைவா!
அன்னை தந்தை யாவரும்
வாழ்ந்திடத் தொழுவேன் உன்னையே
பொன்னும் பொருளும் சேர்த்து
புகழ் பெற வைப்பாய் இறைவா!



## அகர வரிசை

**அ**ணிலே அணிலே ஓடி வா!
அசைந்து அசைந்து ஓடி வா!
**ஆ**ட்டுக்குட்டி ஓடிவா!
ஆலம் இலை நான் தந்திடுவேன்
**இ**லையும் பூவும் ஆய்ந்திடுவோம்
இரண்டு மாலை கட்டிடுவோம்
**ஈ**யே எங்கே போகின்றாய்?
ஈயே இனிய தேன் தருவாய்
**உ**லையில் அரிசி போட்டே நாம்
உணவை உண்ணச் சமைத்திடுவோம்
**ஊ**சி ஊடே நூல் கோத்து
உடைகள் யாவும் தைத்திடுவோம்
**எ**லியே எலியே போ! போ! போ!
எனது உடையைத் தின்னாதே
**ஏ**ணியை மரத்தில் சாய்த்திடுவோம்
ஏறி மாங்காய் பறித்திடுவோம்
**ஐ**யர் திறந்தார் ஆலயத்தை
ஐந்து விளக்கு ஏற்றி வைத்தார்
**ஒ**ன்று இரண்டு மூன்று முதல்
ஒன்பது பத்து எண்ணுவோமே
**ஓ**லை பனையில் வெட்டிடு வோம்
ஓலைப் பெட்டி இழைத்திடுவோம்
**ஔ**வைப் பாட்டி பாட்டியதாம்
ஆத்தி சூடி பாடிடுவோம்
**ஃ**கில் செய்த கத்தியை
எடுத்துப் பழத்தை வெட்டிடுவோம்.

## போட்டிச் சண்டை

சிறிய குட்டை ஒன்றில் தண்ணீர் குடிப்ப தற்கு சிங்கமும் பன்றியும் வந்தன. குட்டை யில் இருந்த நீர் இருவருக்கும் போதுமா னதாக இல்லை. எவர் முதலில் குடித்தாலும் மற்றவருக்குப் போதிய நீர், தாகம் தீர்க்கக் கிடைக்காது. இதனை உணர்ந்த சிங்கமும் பன்றியும் யார் முதலில் குடிப்பது என்று யோசித்தன. முடிவில் சிங்கம் நீர் குடிக்கத் தொடங்க பன்றியும் குடிக்க ஆரம்பித்தது. இதனால் இரண்டும்குடிப்பதை விட்டு தமக்குள் சண்டை போடத் தொடங்கின. சண்டை பலமாக நடந்து கொண்டிருந்தது.

அப்பொழுது பசியுடன் இரைதேடி அவ்விடம் வந்த கழுகு ஒன்று இவர்களின் சண்டையை மிகவும் ஆர்வமாகவும் சுவாரஸ்யமா கவும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தது. சண்டையில் எவர் இறந்தாலும் அதற்குக் கொண்டாட்டம் தான். சண்டை உக்கிரம் அடைந்து பின் களைத்துப் போன பன்றியும் சிங்கமும் கொஞ்சம் களைப்பாற நிலத் தில் உட்கார்ந்தன.

இந்த வேளையில் பக்கத்தில் இருந்த மரத்தின் உச்சிக் கொப்பில் இருந்து கழுகு தம்மை நோக்கிக் கொண்டிருப்பதை இருவரும் கண்டனர். கழுகின் நோக்கம் அவர்களுக்குப் புரிந்தது.

"இருக்கும் நீரை இருவரும் பங்கு போட்டுக் குடிப்போம். அதோ கழுகு. நாம் சண்டை போட்டு இறப்போம், நமது இறைச்சியைத் தான் உண்ணலாமென அது காத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே நாம் சண்டையிட்டு இதற்கு இரை யாவதைவிட சமாதானமாகி நண்பர்களாக நீரைப்பகிர்ந்து குடிப்போம்" என்று இருவரும் தமக்குள் பேசிக் கொண்டு குட்டையில் இருந்த நீரை ஒருவர் மாறி ஒருவராகப் பங்கு போட்டுக் கொண்டன.

தனது தீய நோக்கம் நிறைவேறாமல் போகவே கழுகு அவ்விடம்விட்டு பறந்து போனது.


**படிப்பினை: எமக்குள் ஏற்படும் பிரச்சினைகளை நேரிலே சமாதான மாகப் பேசித்தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் அது எமது எதிரிக்குச் சாதகமான வாய்ப்பாகி விடும். எமக்கும் அழிவு தான்.**



## ஒற்றுமை உயர்வு தரும் பூச்சியம் கூறும் உண்மை

## எண்களின் உரையாடல்

| | |
|---|---|
| வட்டம் 0 - | ஒன்று அண்ணா உம் பின்னால் அன்போடென்னை விடுவீரோ? |
| எண் 1 - | உன்னைப் பின்னால் விடுவதனால் உண்டோ எனக்குப் பயனேதும் |
| வட்டம் 0 - | பின்னே நின்றால் உம் மதிப்பு பெருகும் பத்தாய் உயர்ந்திடுவீர் |
| எண் 1 - | மாட்டேன் எனக்கு மதிப்பெதுவும் மதியேன் உந்தன் பொய்யுரையை |
| வட்டம்0 - | இரண்டே, மூன்றே அண்ணாக்களே, உங்களின் பின்னால் நான் வரவோ? |
| எண்கள் 2,3 - | உன்னால் எமக்குப் பயனேது? உளறிடாமல் அப்பால் செல் |
| வட்டம் 0- | என்னைப் பின்னால் நிறுத்துங்கள் உங்களின் உயர்வைப் பாருங்கள் |
| எண்கள் 2,3 - | போதும் போதும் உன் பாட்டு பொறுமை இழந்தோம் நிப்பாட்டு |
| வட்டம் 0 - | நான்கே, ஐந்தே ஆறேழே நீங்கள் ஆயினும் விடுவீ[illegible] |
| 4, 5, 6, 7 - | நீயோ வெற்றுப் பூச்சியம் தான் உன்னால் எமக்குப் பயனில்லை. |
| வட்டம் 0 - | ஒன்பது ஆன பெரிய அண்ணா ஒத்தே வருவீர் என்னுடனே! |
| 9 - | சே... சே.. எனக்கு நீ வேண்டாம் தனித்தே உயர்வேன் நான் பெரியன் |
| எல்லா எண்களும் (2முதல் 9 வரை) - | நாங்கள் எவரும் விட மாட்டோம் என்றும் தனித்து நிற்பாயே! (ஒன்று பலமாக யோசனை செய்தது) |
| எண் 1 - | தம்பி வாடா என்பின்னால் தருவேன் உனக்கு ஏற்ற இடம் |
| வட்டம் 0 - | ஒன்று அண்ணா நன்றி சொல்வேன் உயர்வீர் உமக்குப் பின்னால் நான் பத்து (10) நூறு (100) ஆயிரமாய் (1000) பலகோடியாகி மதிப்படைவீர் 10,100, 1000, 10000, 100000 |







## செஞ்சிலுவைச் சங்கம்

போரில் காயமடையும் வீரர்களுக்கு உதவி செய்யும் நிறுவனம் செஞ்சிலுவைச் சங்கமாகும். இது ஒரு பன்னாட்டு நிறுவனம். இதன் தலைமைச் செயலகம் சுவிற்சர்லாந்து நாட்டில் ஜெனீவா நகரில் உள்ளது. உலகெங்கும் இதன் கிளைகள் உள்ளன. இதன் கொடியில் வெள்ளை நிறப் பின்னணியில் சிவப்பு நிறச் சிலுவை பொறிக்கப்பட்டிருப்பதால் செஞ்சிலுவைச் சங்கமென அழைக்கப்படுகின்றது. முஸ்லிம் நாடுகள் சிலவற்றில் சிலுவைக்குப்பதிலாக பிறை சித்திரிக்கப்பட்டுள்ளது. இந்த நாடுகளில் இவை செவ்விளம் பிறைச் சங்கம் (Red Crescent Society) என்ற பெயரில் இயங்குகின்றன.

போரில் காயமடைந்த வீரர்களுக்கு அவர்களின் நாடு, இனம், மொழி என்ற வேறுபாடுகளைக் கடந்து இந்தச் சங்கம் மருத்துவ உதவி அளிக்கின்றது. இவை தவிர போரில் கைதிகளாகப் பிடிபட்ட வீரர்களின் நலன்களையும் இது பாதுகாக் கிறது. போர் எதுவும் நடக்காத காலங்களில் இது பொதுமக்களின் சுகாதாரத்தைக் கவனித்து மருத்துவ வசதிகளையும் அளிக்கிறது. மேலும் புயல் வெள்ளம் பூகம்பம் போன்ற இயற்கை அனர்த்தங்களின் போதும் மக்களுக்கு பேருதவி செய்கின்றது. இந்தச் சங்கம் 1864 இல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தோற்றத் துக்கு காரணமானவர் சுவிற்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஹென்றி டுனான்ட் (Henry Dunant) ஆவார். பன்னாட்டு செஞ்சிலுவைத் தினம் மே 8 ஆம் திகதி.



பழத்துள் இருக்கும் சொற்களில் **மெய் எழுத்துக்களை** இலையினுள் எழுதுவோம்....





# கரவெட்டி பிரதேச வலைப்பந்து; வதிரி பொம்மர்ஸ் சம்பியனானது

கரணவாய், பெப். 6
கரவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் அணி சம்பியனானது.
வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில், வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் மோதின. 12:3 என்று பொம்மர்ஸின் பெரும் ஆதிக்கத்துடன் முதல் பாதி முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாதியிலும் தனது ஆதிக்கத்தை பலப்படுத்தியது பொம்மர்ஸ் அணி. முடிவில் அந்த அணி 20:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-108)

# இன்றைய மோதல்கள்


யாழ்ப்பாணம், பெப். 6
**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவதுஆண்டுநிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப் பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மருதநிலா 'ஏ' அணியை எதிர்த்து கோல்டன் பிரதர்ஸ் அணி மோதவுள்ளது.
**வளர்மதியின் கரப்பந்தாட்டம்**
வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகர் செல்லத்தம்பி ஞாபகார்த்த



கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கரவெட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரின் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதவுள்ளது. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துவாலிபர்வட்டம்அணி மோதவுள்ளது. (ம-23)

# இல்ல மெய்வன்மை

யாழ்ப்பாணம், பெப். 6
**மகாஜனக் கல்லூரி**
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான இல்ல மெய்வன்மை போட்டி கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளது. கல்லூரி முதல்வர் மணிசேகரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்துகொள்வார்.
**கொடிகாமம் போக்கட்டி றோ.க.த.க. பாடசாலை**



கொடிகாமம் போக்கட்டி றோ.க.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் நாளை பிற்பகல் இடம்பெறும். பாடசாலை அதிபர் தீ.அபராஜிதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக ஓய்வுநிலை மேலதிக கல்விப் பணிப்பாளரும் வடமாகாண சபை உறுப்பினருமான ப.அரியரத்தினம் கலந்து கொள்வார்.
**பளை மத்திய கல்லூரி**
கிளிநொச்சி பளை மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி குறித்த கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் இடம்பெறவுள்ளது. பாடசாலை முதல்வர் சி.பாலகிருஷ்ணன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்துகொள்ளவார். (ம-422-9)



*வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவரும், நாடாளுமன்ற குழுக்களின் அவைத் தலைவருமாகிய செல்வம் அடைக்கலநாதனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து வவுனியா மாவட்ட கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன.*
*இந்த நிகழ்வில் நாடாளுமன்றின் முன்னாள் உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர் மயூரன், வவுனியா மாவட்ட கால்பந்தாட்ட சங்கத் தலைவர் ஜோன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-23)*

# ஐக்கியம் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 6
நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான எல்லே தொடரில் ஐக்கியம் அணி சம்பியனானது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் இடம்பெற்றது. அரியாலை கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதியது. முதலில் விளையாடிய அரியாலை கலைமகள் அணி இரு ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு விளையாடிய அரியாலை ஐக்கிய மூன்று ஓட்டங்களைப் பெற்று வென்றது. கவிந்தன், தேவகாந், சஞ்சீவன் மூவரும் தலா ஓர் ஓட்டத்தைப் பெற்றனர். (ம-23)

# யங்ஸ்ரார் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், பெப். 6
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யங்ஸ்ரார் அணி அபார வெற்றிபெற்றது.
சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காகவே இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யங்ஸ்ரார் 'ஏ' அணியை எதிர்த்து மருதநிலா அணி மோதியது. இந்த ஆட்டத்தில் யங்ஸ்ரார் 'ஏ' அணி 12:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# இந்திரா சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 6
சுதந்திர தினத்தை முன்னிட்டு அச்சுவேலி கோல்ட் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் இந்திரா அணி சம்பியனானது.



அச்சுவேலி யூனியன் முகாம் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில், பருத்தித்துறை வீனஸ் அணியை எதிர்த்து, கொக்குவில் இந்திரா அணி மோதியது. நாணயச் சுழச்சியில் வெற்றிபெற்ற பருத்தித்துறை வீனஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்திரா அணி 15 பந்துப் பரிமற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து, 89 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக வின்சன் 37 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பருத்தித்துறை வீனஸ் அணியின் சார்பில் கஜேந்திரன், நிரோசன் இருவரும் தலா மூன்று இலக்குகளைக் கைப்பற்றினர்.
90 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய வீனஸ் அணி, 13.4 பந்துப் பரிமற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 80 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அதிகபட்சமாக பிரதீப் 32 ஓட்டங்களைப் பெற்றார். (ம-23)

# ஞானமுருகன் வி.க. இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், பெப். 6
உடுவில் பிரதேச செயலகத்தில் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் ஞானமுருகன் அணி இறுதிக்குத் தகுதிபெற்றது.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில், ஞானமுருகன் அணியை எதிர்த்து மல்லாகம் நியூ வொரியர்ஸ் அணி மோதியது. இதில் ஞானமுருகன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)


# அதிரடித் திட்டங்கள் ஐ.சி.சியால் அரங்கேற்றம்

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் கூட்டம் டுபாயில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. மூன்று வகை ஆட்டங்களை மேலும் விறுவிறுப்பாக்கும் வகையில் பல்வேறுபட்ட முடிவுகளை பன்னாட்டு கிரிக்கெட் சபை எடுத்துள்ளது.

ரி-20 ஆட்டங்கள் சமநிலையில் முடிவடைந்தால் மட்டுமே தற்போது சுப்பர் ஓவர் முறை கடைப்பிடிக்கப்படுகிறது. ஒருநாள் ஆட்டங்களில் அந்த முறை பின்பற்றப்படுவதில்லை. ஆனால் ஒருநாள் ஆட்டங்களிலும் சுப்பர் ஓவரை அறிமுகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், ஒருநாள் ஆட்டங்களில் அரையிறுதி மற்றும் இறுதி ஆட்டங்களில் மட்டுமே சுப்பர் ஓவர் முறை பின்பற்றப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்த விடயம் தொடர்பில் உறுதியான முடிவெதுவும் எடுக்கப்படவில்லை. எனினும் ஒருநாள் அட்டங்களில் சுப்பர் ஓவர் வருவது மட்டும் உறுதி.

ரி-20 ஆட்டங்களில் நடுவரின் முடிவை மறுபரிசீலனை செய்யும் டி.ஆர்.எஸ். முறை இல்லை. ஒருநாள் மற்றும் டெஸ்ட் ஆட்டங்களில் மட்டுமே இந்த முடிவு பின்பற்றப்படுகிறது. இனிவரும் காலங்களில் ரி-20 ஆட்டங்களிலும் நடுவரின் முடிவை மீண்டும் பரிசீலனை செய்யும் முறை பின்பற்றுவது என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால் ஒரு அணிக்கு ஒரு வாய்ப்பு மட்டுமே வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சமீபத்தில் நடந்து முடிந்த இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற, இங்கிலாந்து வீரரான ரூட்டுக்கு வழங்கப்பட்ட தவறான தீர்ப்பும் காரணமாக அமைந்தது. இதனையடுத்து ரி-20 ஆட்டங்களில் மீள் பரிசீலனை முறை வேண்டும் என்று ஆதரவுக் குரல்கள் வலுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)




# தொடரை வென்றது தெ.ஆபிரிக்க அணி

இலங்கைக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் ஆட்டத்திலும் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதை உறுதிசெய்தது தென்னாபிரிக்கா.

இலங்கை அணி, தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. முடிவடைந்த இரு ஆட்டங்களிலும் தென்னாபிரிக்கா வென்ற காரணத்தால் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை வெற்றிபெற வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. இந்த ஆட்டத்திலும் தென்னாபிரிக்கா வென்றால் கிண்ணம் தென்னாபிரிக்காவிடம் செல்லும் என்பது வெளிப்படை.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இலங்கை அணியின் ஆரம்ப வீரர்களாக டிக்வெல்ல மற்றும் தரங்க. ஆரம்ப இணை சிறப்பாகவே செயற்பட்டது. இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைத் தொட்டது இலங்கை. 31 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் தரங்கவை வீழ்த்தி இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் ரபாடா. டிக்வெல்ல ஓர் முனையில் நிலைத்தாலும் மென்டிஸ். சந்திமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். அரைச்சதம் கடந்தார் டிக்வெல்ல. எனினும் மறுமுனை பலமாக அமையவில்லை. 74 ஓட்டங்களுடன் டிக்வெல்லவை வீழ்த்தினார் பிரிட்டோரியஸ். முடிவில் 163 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை.

தென்னாபிரிக்காவின் ஆரம்பம் இலங்கை அளவுக்கு சிறப்பாக அமையவில்லை. 8 ஓட்டங்களுடன் குயின்டன் டி ஹொக் ஆட்டமிழந்தார். அம்லா 34 ஓட்டங்களுடனும் பிளாசிஸ் 24 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். இலக்கை எட்டும்படியான இணைப்பாட்டமே அது. அரைச்சதம் கடந்தார் வில்லியர்ஸ். 7 இலக்குகளால் வென்றது தென்னாபிரிக்கா. (ம)

# கிண்ணம் வென்றது நியூசி.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் ஆட்டத்திலும் வென்று 2:0 என்ற அடிப்படையில் கிண்ணம் வென்றது நியூசிலாந்து.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் ஹமில்டனில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. லாதம் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார். பிரவுன்நீல், வில்லியம்சன் இணைய பிறிதொரு இலக்கை இழக்காமல் 50 ஓட்டங்களைத் தொட்டது நியூசிலாந்து. 37 ஓட்டங்களுடன் வில்லியம்சனும், அரைச்சதம் கடந்து 63 ஓட்டங்களுடன் பிரவுன்நீலும் ஆட்டமிழந்தனர். நீண்ட இடைவெளியின் பின்னர் நேற்று மிரட்டலான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் ரெய்லர். புறாம், முன்ரோ, நீஸ்கம் என்று எவரும் இரட்டை இலக்கத்தை எட்டவில்லை. எனினும் மறுமுனையில் சதம் கடந்தார் ரெய்லர். அவர் 107 ஓட்டங்களுடன் பல்க்நெரின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். முடிவில் நியூசிலாந்து 281-9.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியா 44 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆரம்ப வீரரான மிச்செல் மார்ஸை இழந்தது. ஹான்ட்ஸ்கொம். மக்ஸ்வெல், பல்க்நெர் ஆகிய மூவரும் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தனர். அணித்தலைவரான பின்ஞ் அரைச்சதம் கடந்து பவிலியன் திரும்பினார். ஹெட், மத்திய வரிசையில் ஓர் அரைச்சதத்தைப் பதிவுசெய்தார் எனினும் வெற்றியை நோக்கி ஆஸியை அழைத்துச் செல்ல இயலவில்லை. முடிவில் 257 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது ஆஸ்திரேலியா. 24 ஓட்டங்களால் வென்று 2:0 என்று கிண்ணம் வென்றது நியூசிலாந்து.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)




# அடுத்த உலகக்கிண்ணம் எங்கள் முக்கிய இலக்கு

## என்றார் இன்சமாம்

பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும், தற்போதைய அந்த அணியின் தலைமை தேர்வாளருமான இன்சமாம் உல் ஹக், 2019 ஆம் ஆண்டு உலகக்கிண்ணமே தமது முக்கிய இலக்கு என்று தெரிவித்தார்.

பாகிஸ்தான் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். 2019 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் உலகக்கிண்ணத் தொடர் எங்கள் நினைவில் உள்ளது. பாகிஸ்தானின் அண்மைக்காலப் பெறுபேறுகள் சிறப்பானதாகவும் திருப்தி தரும் வகையிலும் இல்லை. அடுத்த உலகக் கிண்ணத்தை கருத்திற் கொண்டே எமது அடுத்தகட்ட நகர்வுகள் அமையும் என்று இன்சமாம் மேலும் தெரிவித்தார். (ம)



*தென்னாபிரிக்கா - இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஆட்டத்தின் போது தேனீக்கள் மைதானத்துக்குள் புகுந்ததால் கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் ஆட்டம் பாதிப்படைந்தது. தேனிக்கள் விரட்டப்பட்டதும் ஆட்டம் தொடர்ந்து நடைபெற்றது. (ம)*

# நான்காவது ஆட்டம் நாளை

இலங்கை-தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒருநாள் ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களிலும் இலங்கை தோல்வியடைந்து தொடரை இழந்துள்ளது. எனவே எஞ்சியிருக்கும் ஆட்டங்கள் தொடரைத் தீர்மானிப்பவையாக அமையப்போவதில்லை. (ம)

# தேசிய ரீதியிலான கூடைப்பந்தாட்டம் யாழ். மாவட்டம் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஜன. 6
இலங்கை கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் சிரேஸ்ட பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் யாழ். மாவட்ட அணி கிண்ணம் வென்றது;
தேசிய ரீதியில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. கண்டி கேட்வே கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து அனைத்து பல்கலைக் கழக அணி மோதியது. 55:50 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது யாழ். மாவட்ட அணி.

(ம-23)






# ரூபா 1,300 கோடியை அள்ளினார் ரொனால்டோ

கடந்த வருடத்தில் அதிகம் சம்பாதித்த விளையாட்டு வீரராக போர்த்துக்கல் அணியின் தலைவரும், ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரருமான ரொனால்டோ பதிவாகியுள்ளார். இலங்கை மதிப்பில் ஆயிரத்து 300 கோடிகளை அவர் கடந்த வருடத்தில் மட்டும் அள்ளியுள்ளார்.
அமெரிக்காவின் வர்த்தகப் பத்திரிகையான போபர்ஸே இந்தத் தகவலை வெளியிட்டது. ரொனால்டோவுக்கு களத்தில் கடும் நெருக்கடி கொடுப்பவரான மெஸ்ஸி, ஊதியத்திலும் அவருக்கு அடுத்த இடத்தில் உள்ளார். இதன்படி இலங்கை மதிப்பில் அவர் ஆயிரத்து 200 கோடிகளை சம்பாதித்தார்.
100 பேர் கொண்ட இந்தப் பட்டியலில் 26 பேர் பேஸ்போல் வீரர்களாக உள்ளனர். 21 அமெரிக்க கால்பந்து வீரர்களும், 18 கூடைப்பந்தாட்ட வீரர்களும், 12 கால்பந்து வீரர்களும், ஏழு ரென்னிஸ் வீரர் களும் இடம்பிடித்துள்ளனர். (ம)

# இந்திய வீரர்களை பின்பற்ற வேண்டும்

## மக்ஸ்வெலின் கருத்து

இந்தியத் தொடரில் சிறப்பாகச் செயற்பட இந்தியத் துடுப்பாட்ட வீரர்களின் நுணுக்கங்களைப் பின்பற்றினால் போதும் இவ்வாறு தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரரான மக்ஸ்வெல்.
இந்தியா – ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இன்னும் சில தினங்களில் ஆரம்பமா கவுள்ளது. இந்தியாவில் தொடர் நடைபெறுவதால் இந்திய அணியின் ஆதிக்கம் மிகுந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகையில் மக்ஸ்வெல் இவ்வாறு தெரிவித்தார். இந்திய வீரர்களின் கால்நகர்த்தல்களைப் பின்பற்ற வேண்டும் என்பது மக்ஸ்வெலின் முக்கிய கருத்தாக அமைந்தது. (ம)

"A" என்ற அருங்கனியைப் பெற்றிட
வணிகக்கல்வி தொடர்பரீட்சை 2018 A/L - பரீட்சை - 02
மாவட்டரீதியில் நடத்தப்பட்ட பரீட்சைகளில்
70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களை
பாராட்டி வாழ்த்துதல்

வளவாளர் - வலிகாமம் கல்வி வலயம், வணிகக்கல்வி
S.K. Balasabesh, B.Com (H.N.Dip.in. ACC)
P.G.Dip.in.Ed (ousl)
Tutorial Staff, Jaffna College.

| இல. | மாணவர் பெயர் | புள்ளி | மாவட்ட நிலை | பாடசாலை பெயர் |
|---|---|---|---|---|
| 01) | J.சாம்பவி | 83 | 01 | யா/ இந்துமகளிர் கல்லூரி |
| 02) | U.வினித்தா | 82 | 02 | கிளி/பூநகரி மத்திய கல்லூரி |
| 03) | T.இலக்கியா | 80 | 03 | யா/ இந்து மகளிர் கல்லூரி |
| 04) | J.டிஷானி | 80 | 03 | யா/மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி |
| 05) | L.மாதங்கி | 79 | 05 | யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி |
| 06) | M.கஜவரன் | 76 | 06 | யா/ அருணோதயக்கல்லூரி |
| 07) | P.மகிழரசி | 76 | 06 | யா/மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி |
| 08) | Y.மதுரிக்கா | 73 | 08 | யா/இந்து மகளிர் கல்லூரி |
| 09) | A.தனுஸ்காந் | 73 | 08 | யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி |
| 10) | A.மேரிபிரியங்கா | 72 | 10 | யா/திருக்குடும்ப கன்னியர்மடம் |
| 11) | T.மித்திரன் | 72 | 10 | யா/மகாஜனக் கல்லூரி |
| 12) | N.நஸ்மா | 71 | 12 | யா/இந்து மகளிர் கல்லூரி |
| 13) | K.கோபிஷா | 70 | 13 | யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம் |
| 14) | S.றொனால்ட் | 70 | 13 | யா/புனித பத்திரிசியார் கல்லூரி |
| 15) | S.மேகனா | 70 | 13 | கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம் |
| 16) | L.குகவதினி | 70 | 13 | பளை மத்திய கல்லூரி |

பரீட்சை நிலையங்கள்
NEC - யாழ்ப்பாணம்.
BPI - குருநகர்,
HAC - மீசாலை ,
NEC - ஆனைப்பந்தி.
BARATHY - சித்தங்ககேணி

கடிமான பயிற்சி பரீட்சைகள் செய்கின்ற போது உயர்தர பெறுபேறுகள் உயர்வாக அமையும்.

# பார்சிலோனா அபாரம்

ஐரோப்பிய கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பார்சிலோனா அணி அபார வெற்றிபெற்றது.
பார்சிலோனாவை எதிர்த்து பில்பாவோ அணி மோதியது. ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் அலெக்சர் முதல் கோலைப் பதிவுசெய்து முன்னிலையை வழங்கினார். 40 ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி பதிவுசெய்த கோலால் முதல் பாதியின் முடிவில் 2:0 என்று முன்னிலை வகித்தது பார்சிலோனா. பார்சிலோனாவின் விடால் 67 ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் அந்த அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம)

காசி யாத்திரை

ஆரம்பம் 10.04.2017 நாள்கள் – 16, யாத்திரீகர் –20
தரிசிக்குமிடங்கள் **டெல்லி:** அட்ஷயதாம் உட்பட 7 இடங்கள் சுற்றிப்பார்த்தல். **ஆக்ரா:** தாஜ்மகால். செங்கோட்டை பார்த்தல். **மதுரா :** கிருஷ்ணஜென்மபூமி. **அலகாபாத்:** கங்கா, ஜமுனா, சரஸ்வதி (திருவேணி சங்கமம்). தீர்த்தமாடல். சயன ஆஞ்சனேயர் தரிசனம். **சீத்தாமடி** :சீதை பூமியுள் புதையுண்ட இடம் உட்பட 5 இடங்கள். **காசி:** விஸ்வநாதர். விசாலாட்சி காளபைரவர் உட்பட 15 இடங்கள் பார்த்தல் அரிச்சந்திரமகாராஜா சுடலை காத்த இடம் (கங்கைநீராடல்) காசியில் 3 நாள்கள் கங்காபூஜை பார்த்தல். **ஹரித்துவார்:** கங்கை நீராடல். 10 இடங்கள் சுற்றிப்பார்த்தல். **ரிஷிகேஸ்:** சிவானந்த ஆச்சிரமம் உட்பட்ட இடங்கள் தரிசனம். **குருச்சேத்திரம்:** பாண்டவர்கள் யுத்தம் புரிந்த இடம் உட்பட 10 இடங்கள் சுற்றிப்பார்த்தல். அத்துடன் **பிரம்மதீர்த்தம்** நீராடல். கயா:உறவினர்களுக்கு சிரார்த்தம் செய்தல். **புத்தகயா:** புத்தாலயங்கள் 5 பார்த்தல் **இராமேஸ்வரம்:** (தீர்த்தமாடல்) 2 கிணறுகளில் உத்திரகோசமங்கை உட்பட 7 இடங்கள் தரிசித்தல் **சென்னை:** வருகை வான்வலம் **திருப்பதீ** விஸ்ணு. அலமேலு மங்கா தரிசித்து சென்னை வருகை
எமது **சேவை:** 5 விமான ரிக்கட்.சுத்தமான குடிநீர். A/C வாகனவசதி.மடப்பள்ளி ஆள்கள் சமைத்த மூன்று வேளை உணவு. காப்பி. ரீ. 2 பேருக்கு தரமான கட்டில். மெத்தை .குளியலறை இணைந்த அறைகள்.எயார் போட் போக வர வாகன வசதி (ரயில் பயணம் கிடையாது) மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். ஒரு நாள் சென்னையில் சொப்பிங்.

மேலதிக விவரங்களுக்கு:
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் - 077 768 0102
மகன் ராஜன் : 077 736 2154

# ஆஸ்திரேலியத் தொடரை எதிர்பார்க்கிறார் ரோகித்

இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ரோகித் சர்மா, காயம் காரணமாகத் தொடர்களில் இருந்து விலகியுள்ள நிலையில், அணிக்குத் திரும்புவதற்காக தான், ஆஸ்திரேலியத் தொடரை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார் என்று வெளிப்படுத்தினார்.
இந்தியா ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இந்த மாதம் இறுதிப் பகுதியில் ஆரம்பமாகிறது. இந்த நிலையிலேயே ரோகித்தும் இவ்வாறானதொரு கருத்தை வெளிப்படுத்தினார்.
ஆஸ்திரேலியத் தொடரில் அணிக்குத் திரும்புவதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். இந்த தொடரை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். காயத்தில் இருந்து தற்போது பயிற்சிக்குத் திரும்பியுள்ளேன் என்று ரோகித் மேலும் தெரிவித்தார். (ம)




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.